பக்கங்கள்: முப்பத்துஇரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 வைகாசி 11 புதன்கிழமை (25.05.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 180



03

சானியா முன்னேற்றம்



16

இலங்கையை காப்பாற்றுமா இந்தியா?



23

கனிமொழியின் சிறைவாசம் நீடிப்பு

**கல்விச்சுடர்**

இன்றைய உதயனில் 20 ஆம் பக்கத்தில் தரம் 5 மாணவர்களுக்கான கல்விச்சுடர் பரீட்சை 2 இன் பகுதி - I வெளியாகி உள்ளது. பகுதி - II நாளை வெளியாகும்.

### நிபுணர்குழு அறிக்கை விடயத்தில்

# இலங்கைக்குச் சீனா முழுமையாக ஆதரவு

### பெய்ஜிங் சென்ற பீரிஸிடம் தெரிவிப்பு

கொழும்பு, மே 25

ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளரின் நிபுணர் குழு வெளியிட்ட அறிக்கை தொடர்பில் இலங்கைக்கு முழு ஆதரவும் வழங்கப்படுவதை சீனா உறுதிப்படுத்தி உள்ளது. தங்களுடைய பிரச்சினைகளைத் தாங்களே தீர்த்துக் கொள்ளும் தகுதியும் வல்லமையும் இலங்கை அரசுக்கும் மக்களுக்கும் இருக்கின்றது என்று சீனா முழுமையாக நம்புகின்றது என அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜங் ஜிச்சி தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் இரண்டு நாள் பயணமாக நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பெய்ஜிங் சென்று சேர்ந்தார். நேற்று அவர் சீன வெளிவிவகார அமைச்சரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து அமைச்சர் பீரிஸ் சீன வெளிவிவகார அமைச்சருக்கு எடுத்து விளக்கினார் என்று கொழும்பில் வெளிவிவகார அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர்.

(29ஆம் பக்கம் பார்க்க)

## ஈச்சங்குளம் மாவீரர் இல்லத்தில் ராணுவ முகாம் அமைக்க ஏற்பாடு

### உறவினர் கொதிப்பு, வேதனை

வவுனியா, மே 25

வவுனியா மாவட்டத்தில் ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்திருந்த இடத்தில் பெரிய இராணுவ முகாம் அமைப்பதற்கான கட்டடப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அந்தப் பகுதியில் விதைக்கப்பட்ட 800 மாவீரர்களின் கல்

(29ஆம் பக்கம் பார்க்க)

## மூன்றாம் தரப்பாக முஸ்லிம்கள்; ஆராயலாம் என்கிறார் சுரேஷ்

அம்பாறை, மே 25

அரசுக்கும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கும் இடையிலான பேச்சுக்களில் மூன்றாம் தரப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கலந்துகொள்ள விரும்பினால் அது குறித்து ஆராயலாம் என்று தெரிவித்துள்ளார் கூட்டமைப்பின் பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

முஸ்லிம் காங்கிரஸுக்கு அத்தகைய ஒரு விருப்பம் இருந்தால் அது தொடர்பில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைமைத்துவத்துடன் பேசலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

(29ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு மாகாண உறுப்பினர்கள் சபைக் கூட்டத்தைப் புறக்கணிப்பு

திருகோணமலை, மே 25

கொழும்பிலிருந்து சென்ற விசேட பொலிஸ் குழுவால் கைது செய்யப்பட்ட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பிரதீப் மாஸ்டர் என அழைக்கப்படும் எட்வின் சில்வா கிருஷ்ணராஜாவை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு கோரி மாகாணசபை உறுப்பினர்கள் நேற்றுச் சபைக் கூட்டத்தைப் புறக்கணித்தனர்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற படுகொலைச்சம்பவத்தை அடுத்து கொழும்பில்

(29ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த வெற்றி தினம் காலிமுகத்திடலில் முப்படை ஒத்திகை

கொழும்பு, மே 25

யுத்த வெற்றியின் 2 ஆவது ஆண்டு நிறைவையொட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலிமுகத்திடலில் இடம்பெறவுள்ள முப்படைகளின் அணிவகுப்புக்கான ஒத்திகை நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

விமானங்களின் சாகச நிகழ்வுகள், படையினரின் அணி வகுப்புகள், கடற்படையி

(29ஆம் பக்கம் பார்க்க)

## கே.பியின் பேட்டியின் பின்னணியில் 'றோ' ஜெயலலிதாவை உசுப்பி விடவும் திட்டம்

புதுடில்லி, மே 25

கே.பி. எனப்படும் குமரன் பத்மநாதன் இந்திய தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியின் பின்னணியில் 'றோ' எனப்படும் இந்தியப்புலனாய்வுப்பிரிவுசெயற்பட்டுள்ளதாக இந்திய இணைய தளம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இணையதளத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:-

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவை ஈழத் தமிழர்களுக்கு எதிராகத் திருப்பும் நடவடிக்கையை இந்திய உளவுத்துறையான 'றோ' மேற்கொண்டிருக்கின்றது எனத் தகவல் வெளியாகி உள்ளது.

இதுநாள் வரை தமிழக முதல்வராக இருந்த கருணாநிதியை பயன்படுத்திக்கொண்டு விடுதலைப் புலிகளை அழித்தொழிக்கும் பணியை மேற்கொண்ட காங்கிரஸ் கட்சியும், அதன் (மத்திய) அரசும், ஜெயலலிதா தேர்தலில் வெற்றிபெற்றதும் அவர் மூலமாக சிக்கல் ஏதும் வந்துவிடக்கூடாது என்பதற்காக அவரையும் வளைக்கும் முயற்சியை தொடங்கியது.

இதன் முதல்கட்ட நடவடிக்கையாகத்தான் காங்கிரஸ் தலைவர்

(29ஆம் பக்கம் பார்க்க)

## வலி.வடக்கு, வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் அபிவிருத்திக்கு 2,600 மில்லியன் ரூபா தேவை

### கொழும்பில் நடந்த கூட்டத்தில் யாழ்.அரச அதிபர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 25

வலிகாமம் வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் மீள் குடியமர்த்தப்பட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக்கு 2 ஆயிரத்து 600 மில்லியன் ரூபா தேவை.

யாழ்.மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இவ்வாறு உலக வங்கிக் குழுவிடம் கேட்டுள்ளார்.

வலி.வடக்கு, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் மீள் குடியமர்த்தப்பட்ட இடங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து உலக வங்கியின் உயர்மட்டக் குழு கடந்தவாரம் நேரடியாகச் சென்று திட்ட மதிப்பீடுகள் குறித்து ஆராய்ந்தது.

இது குறித்து தீர்மானங்களை எடுக்கும் விசேட ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்துக்கு அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும்

(29ஆம் பக்கம் பார்க்க)

## ராஜீவ்காந்தி கொலைக்கு மன்னிப்பு கேட்டார் கே.பி.

சென்னை, மே 25

இந்தியாவின் முன்னாள் பிரதமரான ராஜீவ் காந்தியை விடுதலைப் புலிகள்தான் கொன்றார்கள் என்று அடித்துக் கூறி இருக்கும் கே.பி. என்கிற செல்வராசா பத்மநாதன், அந்தக் கொலைக்காக இந்திய மக்களிடமும் ராஜீவ் குடும்பத்திடமும் மன்னிப்பும் கோரி உள்ளார்.

இந்தியத் தொலைக்காட்சியான சி.என்.என். ஐ.பி.என். செய்திச் சேவைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இதனைக் கூறினார்.

''பிரபாகரனின் தவறுக்காக நான் மன்னிப்புக் கோருகிறேன். எங்களை மன்னித்துவிடுங்கள்; நாங்கள் மன்றாடுகிறோம். எமது மக்கள் துன்பப்பட்டுக்

(29ஆம் பக்கம் பார்க்க)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# பழிக்குப் பழி தீர்த்தது சென்னை மீண்டும் நுழைந்தது இறுதிக்குள்

- டிலீப் -

இறுதிக்கு நேரே செல்வது யார் ? கேள்விக்கு விடை காண்பதற்கு மோதிக் கொண்டது சென்னை சூப்ப கிங்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ். மும்பை பலப்பரீட்சைக்கான களம். சென்னைக்கு வெற்றி நாணயச் சுழற்சியில். பணிக்கப்பட்டது பெங்களூர் துடுப்பெடுத்தாட.

அகர்வால் - கெயில் நுழைந்தனர் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாய். ஆட்டத்தின் முதலாவது பந்து வீசப்பட்டது மோர்கலால். நகர்த்தப்பட்டது அகர்வாலால் பவுண்டரியாய். ஆட்டம் அதிரடியுடன் தொடங்கியது. மீண்டும் மூன்றாவது ஓவரை வீசினார் மோர்கல். முதலிரண்டு பந்துகளில் சென்றன இரண்டு பவுண்டரிகள். கெயில் அடக்கி வாசித்தார். ஆட்டத்தின் நான்காவது ஓவர் வீசினார் அஸ்வின். விளாசினார் கெயில் சிக்ஸர். சுதாகரித்தது சென்னை. வீழ்த்தியது கெயிலின் விக்கெட்டை அடுத்த பந்திலேயே. 9 பந்துகளில் 8 ஓட்டங்களுடன் எல்.பி. டபிள்யூவில் வெளியேற்றப்பட்டார் கெயில்.

ஹோக்லி நுழைந்தார் ஆடுகளத்துக்கு. ஐந்தாவது ஓவரில் மீண்டும் தொடங்கியது பெங்களூரின் ஓட்ட வேட்டை. அஸ்வினின் ஓவரில் அடக்கி வாசித்தது பெங்களூர். 41 பந்துகளில் பூர்த்தியானது பெங்களூரின் அரைச்சதம். மெல்லத் தொடங்கியது அதிரடி மீண்டும். பிராவோவின் பந்தில் அகர்வால் அடித்தார் ஓங்கி. சென்றது பந்து பொலஞ்சரின் கைக்கு. முடிந்தது 34 ஓட்டங்களுடன் அகர்வால் ஆட்டம். டீ வில்லியர்ஸ் வந்தார். ஜகாத்தி ஓவருக்கு அடித்தார் சிக்ஸர். அந்த ஓவரிலேயே வெளியேறினார். 10 பந்துகளில் பெற்றுக் கொடுத்தது 11 ஓட்டங்கள்.

தொடர்ந்தது ஹோக்லியின் அதிரடியாட்டம் மறுமுனையில். புகுந்தார் லுக் பூமேஸ்பச். ஜகாத்தியின் ஓவரில் அதிரடியாய் அடித்தார் சிக்ஸர். பிராவோ வீசினார் ஆட்டத்தின் பதினைந்தாவது ஓவர். பதம் பார்த்தார் பூமேஸ். பவுண்டரி, சிக்ஸர் அடித்து அசத்தல். அந்த ஓவரிலேயே அவரின் பிடியைத் தவறவிட்டு சென்னை சொதப்பல். பெங்களூரின் சதம் 81 பந்துகளில் பூர்த்தி. பலமான அடித்தளம் இட்டது ஹோக்லி - பூமேஸ் ஜோடி. பிரிக்க வகுத்தது வியூகம். மீண்டும் அழைக்கப்பட்டார் பொலஞ்சர். வீசினார் 17 ஆவது ஓவர். 18 பந்துகளில் 29 ஓட்டங்களுடன் முடிந்தது பூமேஸ் ஆட்டம்.

புதிதாய் வந்தார் திவாரி. மறுமுனையில் 36 பந்துகளில் ஹோக்லியின் அரைச்சதம் பூர்த்தி. 19 ஆவது ஓவர் வீசினார் மோர்கல். கொடுத்தார் 19 ஓட்டங்கள். ஹோக்லி பவுண்டரி, சிக்ஸர் விளாசல். இருபது ஓவர்கள் பூர்த்தி. 175 ஓட்டங்கள் பெங்களூர் பெற்றது. இழந்தது 4 விக்கெட்டுக்கள். ஹோக்லி 44 பந்துகள் சந்திப்பு, 3 சிக்ஸர்கள், 5 பவுண்டரிகள் அடிப்பு. 70 ஓட்டங்கள் ஆட்டமிழக்காமல் பெற்றுக்கொடுப்பு.

இலக்கு கடினம். இருந்தும் விரட்டத் தொடங்கியது சென்னை. ஆரம்பம் சறுக்கல் சென்னைக்கு. சொதப்பினர் துடுப்பாட்டத்தில். ஹஸி, விஜய் ஆரம்ப ஜோடிகள். சாதிக்கவில்லை பெரிதாய். 7 ஓட்டங்களை பெறுவதற்கு இழந்தது இரண்டு விக்கெட்டுக்கள்.

ஜோடி சேர்ந்தனர் ரெய்னா - பத்திரிநாத். சரிவுகளால் அமைதியாய் தொடங்கியது ஆட்டம். ஆட்டத்தின் ஐந்தாவது ஓவர் வீசினார் சகீர். ரெய்னா அடுத்தடுத்து அடித்தார் இரண்டு பவுண்டரி. ஹோக்லி வீசினார் எட்டாவது ஓவர். பதம் பார்த்தனர் பத்திரிநாத் ரெய்னா. பவுண்டரிகள் மூன்று பறந்தது அவரது ஓவரில். எட்டியது சென்னை 55 பந்துகளில் அரைச்சதம். இணைப்பாட்டம் பூர்த்தி செய்தது 63 ஓட்டங்கள். வீழ்ந்தது பத்திரிநாத் விக்கெட். வீழ்த்தியவர் மித்துன். 32 பந்துகளில் 34 ஓட்டங்களுடன் முடிந்தது பத்திரியின் ஆட்டம்.

ரெய்னாவின் அதிரடிக்கு ஈடுகொடுக்க வந்தார் டோனி. ஓட்டங்களை வாரி வழங்கியது 13 ஆவது ஓவர். ரெய்னாவின் அதிரடியால் திண்டாடிப் போனது பெங்களூர். 2 சிக்ஸர், பவுண்டரியுடன் பெறப்பட்டது 23 ஓட்டங்கள். 87 பந்துகளில் சென்னை பூர்த்தி செய்தது 100 ஓட்டங்கள். தொடர்ந்து வெற்றோரியின் ஓவரைப் பதம் பார்த்தனர் இருவரும். இணைப்பாட்டம் 32 பந்துகளில் பூர்த்தி செய்தது அரைச்சதத்தை. 41 பந்துகளில் ரெய்னாவின் அரைச்சதம் பூர்த்தி.

சகீர் வீசினார் ஆட்டத்தின் 17 ஆவது ஓவர். டோனி அடித்தார் இரண்டு சிக்ஸர்கள். ஆட்டமிழந்தார் அந்த ஓவரிலேயே. 19 பந்துகளில் பெற்றுக்கொடுத்தார் 29 ஓட்டங்கள். இறுகியது ஆட்டம். சந்தேகமானது சென்னையின் வெற்றி. பெங்களூரின் உற்சாகம் தடையின்றி தொடர்ந்தது. டோனியின் ஆட்டமிழப்பால் துவளவில்லை சென்னை. 17 ஆவது ஓவரின் இறுதிப் பந்தில் ரெய்னாவின் துடுப்பு வெளுத்தது சிக்ஸர்.

12 பந்துகளில் வெற்றிக்குத் தேவை 33 ஓட்டங்கள். சாத்தியமில்லா ஓட்ட எண்ணிக்கை பெங்களூரின் கணிப்பு. 19 ஆவது ஓவர் வீசினார் அரவிந்ட். எதிர்கொண்டார் மோர்கல். இரண்டாவது, மூன்றாவது பந்துகள் எல்லைக்கு வெளியே சென்றது. மீண்டும் 5 ஆவது பந்திலும் வெளியேற்றம். பெறப்பட்டது 21 ஓட்டங்கள். மோர்கலின் மூர்க்கமான அதிரடியால் அடங்கியது பெங்களூரின் ஆட்டம்.

இறுதி ஓவர் வெற்றிக்கு 12 ஓட்டங்கள் தேவை. வீசினார் வெற்றோரி. இரண்டாவது பந்து பட்டது மோர்கலின் துடுப்பில். நகர்ந்தது பவுண்டரிக்கு. 4 பந்துகள் மீதி. 7 ஓட்டங்கள் தேவை. வெற்றி யார் பக்கம் ? முடிவு நெருங்கியது. பரபரப்பு படர்ந்திருந்தது அரங்கில். இருக்கை நுனியில் ரசிகர்கள். வீசப்பட்டது மூன்றாவது பந்து. ஓடி முடிக்கப்பட்டது இரண்டு ஓட்டங்கள். ரெய்னாவின் கால்கள் சோர்ந்து விட்டன. இருந்தும் தனித்து நின்றார். 4 ஆவது பந்து வீசித்தாக்கினார் வெற்றோரி. போட்டுத்தாக்கினார் மோர்கல். பறந்து சென்றது சிக்ஸர். 10 பந்துகளில் 3 சிக்ஸர்களுடன், 1 பவுண்டரி அடங்கலாய் பெற்றுக் கொடுத்தார் 28 ஓட்டங்கள். இது அதிரடி மோர்கலின் கணக்கு. 50 பந்துகளில் 6 சிக்ஸர்கள், 4 பவுண்டரிகளுடன் 73 ஓட்டங்கள் பெற்றார் ரெய்னா.

வெற்றி வந்து விழுந்தது 6 விக்கெட்டுக்களால் சென்னைக்கு. நேரே நுழைந்தது இறுதி ஆட்டத்துக்கு. ஆட்ட நாயகன் விருது சென்றது ரெய்னாவுக்கு.



ஹோக்லி

கெயில்



ஆட்டநாயகன் ரெய்னா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சச்சினுக்கு சலுகை!

சச்சின் டெண்டுல்கர் விளம்பரங்களில் நடித்து சம்பாதித்த பணத்துக்கு வரிச் சலுகை அளிக்க வருமான வரித்துறை அனுமதி வழங்கியுள்ளது.

நடிப்பதன் மூலம் தான் சம்பாதித்த பணத்துக்கு வருமான வரியில் சலுகை வழங்க வேண்டுமென்றும், தன்னை நடிகராகவும் கருத வேண்டாமென்றும் வருமான வரித்துறையிடம் ஏற்கெனவே சச்சின் முறையீடு செய்திருந்தார். 2001-02 முதல் 2004-05 வரை விளம்பரத்தில் நடித்து பெற்ற பணத்துக்காக சச்சின் வருமான வரிச்சட்டம் பிரிவு 80 ஆர் ஆரின் கீழ் வரிவிலக்கு கோரியிருந்தார்.

இதனை வருமான வரித்துறையின் இரு நபர் தீர்ப்பாயம் விசாரித்தது. நான் தொழில்முறையில் கிரிக்கெட் விளையாடி வருகிறேன் என்றாலும், விளம்பரத்தில் நடித்து சம்பாதித்த பணத்துக்கு மட்டும்தான் வரிச் சலுகை கோருகிறேன். இதற்கு முன்பு இதேபோன்ற சலுகைகள் வழங்கப்பட்டுள்ளது என்று சச்சின் தரப்பில் கூறப்பட்டிருந்தது. தான் நடித்த விளம்பரங்களையும் அவர் சமர்ப்பித்திருந்தார்.

சச்சின் தரப்பு வாதத்தை ஏற்றுக் கொண்ட தீர்ப்பாயம் அவர் வருமான வரியில் சலுகை பெற அனுமதி அளித்தது.

சச்சின் வரிச் சலுகை கோரும் காலகட்டத்தில் அவர் மொத்தம் 20 கோடி ரூபாய் சம்பாதித்துள்ளார். இதில் அன்னியச் செலாவணி மூலம் கிடைத்தது சுமார் 6 கோடி என்று தீர்ப்பாயம் கூறியுள்ளது.

இதற்காக அவருக்கு சுமார் ரூ.6 கோடி வருமான வரி பிடிக்கப்பட வேண்டும். ஆனால் சச்சின் போராடிப் பெற்ற சலுகையால் சுமார் ரூ.2 கோடி மட்டுமே வரிப்பிடித்தம் செய்யப் படும். 4 கோடி ரூபாய் அவருக்கு மிச்சமாகியுள்ளது. (15)

# தயக்கம் என்ன?

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள இலங்கை கிரிக்கெட் அணி தயக்கம் காட்டுவதாக தகவல் வெளியாகியுள்ளது. இதையடுத்து அந்த அணி பாகிஸ்தான் செல்லாது என்றே கருதப்படுகிறது.

இது குறித்து இலங்கை கிரிக்கெட் வாரியத்தின் செயலர் நிசாந்த ரணதுங்க கூறுகையில், 'கடந்த மூன்று, நான்கு மாதங்களாக எங்களுக்கு பாகிஸ்தான் அழைப்பு விடுத்து வந்தது. ஆனால் தற்போதைய சூழலில் எங்கள் பாதுகாப்பு தொடர்பான விவகாரத்தில் அரசின் அனுமதி கிடைத்தால் மட்டுமே கிரிக்கெட் அணியை பாகிஸ்தானுக்கு அனுப்புவோம்'' என்றார்.

கராச்சி அருகேயுள்ள கடற்படைத் தளத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தியுள்ள நிலையில் இலங்கை இவ்வாறு கூறியிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. (15)



சானியா

# சானியா முன்னேற்றம்

பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு இந்திய நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா முன்னேறினார்.

ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் செர்பியாவின் நோவக் ஜோவிக், சுவிட்சர்லாந்தின் ரோஜர்பெடரர் உள்ளிட்டோர் வெற்றி பெற்றனர். பிரான்ஸ் தலைநகர் பரிசில், கிராண்ட்ஸ்லாம் தொடர்களில் ஒன்றான பிரெஞ்ச் ஓபன் ரென்னிஸ் தொடர் நடக்கின்றது. இதில் நேற்று முன்தினம் நடந்த பெண் கள் ஒற்றையர் முதல் சுற்றில் இந்தியாவின் சானியா மிர்சா, ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்டினா பாரோயிசை எதிர்கொண்டார்.

இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய சானியா 6-3, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது முறையாக (2007, 2011) இந்தத் தொடரின் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு முதல் சுற்றுப் போட்டியில் இத்தாலியின் பிரான்சஸ்கா ஷியவோனே, அமெரிக்காவின் மெலானி ஓடினை சந்தித்தார். இதில் ஷியவோனே 6-2, 6-0 என்ற நேர் செட் கணக்கில் மிகச் சுலபமாக வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்ற போட்டிகளில் ரஷ்யாவின் ஸ்வொன ரேவா, சுலோவேகியாவின் ஹண்டுசோவா, ஆஸ்திரேலியாவின் அனஸ்டாசியா ரோடியோனோவா, இத்தாலியின் ரோபர்டா வின்சி, சாரா இரானி உள்ளிட்டோர் வெற்றி பெற்று இரண்டாவது சுற்றுக்குள் நுழைந்தனர்.

ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்றில் சுவிட்சர்லாந்தின் ரோஜர் பெடரர், ஸ்பெயினின் பெலிசியானோ லோபெஸை சந்தித் தார். இதில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய பெடரர் 6-3, 6-4, 7-6 என்ற நேர் செட்கணக்கில் வெற்றி பெற்று, 2 ஆவது சுற்றுக்கு முன்னேறினார். மற்றொரு போட்டியில் செர்பியாவின் நோவக்ஜோவிக், நெதர்லாந்தின் திமோ டி பக்கரை சந்தித்தார். இதில் ஜோவிக் 6-2, 6-1, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு போட்டியில் அர்ஜென்டினாவின் போட்ரோ 6-7, 6-3, 7-5, 6-4 என்ற செட் கார்லோவிச்சை வீழ்த்தினார். (15)






ஹோக்லி

# விளையாட ஆசை

- ஹோக்லி

இந்தியாவுக்காக நிறைய சர்வதேச போட்டிகளில் தொடர்ந்து விளையாட வேண்டும் என்று இளம் வீரர் விராட் ஹோக்லி விருப்பம் தெரிவித்துள்ளார்.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் செய்யவுள்ள இந்திய அணி சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. இதில் சச்சின், டோனி, சேவாக், சகிர் உள்ளிட்ட மூத்த வீரர்களுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இளம் வீரர்களுடன் கம்பீர் தலைமையில் களமிறங்க உள்ள இந்திய அணி மீது அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து இளம் வீரர் விராட் ஹோக்லி கூறியதாவது, உடற்தகுதி குறித்து எவ்வித பிரச்சினையும் எனக்கு இல்லை. எனவே இந்தியாவுக்காக நிறைய சர்வதேச போட்டிகளில் தொடர்ந்து பங்கேற்க விரும்புகிறேன். மூத்த வீரர்கள் தொடர்ந்து நிறைய போட்டிகளில் பங்கேற்று வருவதால், ஓய்வு எடுத்துக் கொண்டனர். ஆனால் எனக்கு ஓய்வு என்ற எண்ணம் தோன்றவே இல்லை.

மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான தொடரை மிகுந்த ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். இந்தத் தொடர் என்னைப் போன்ற இளம் வீரர்களுக்கு மிக முக்கியமான ஒன்று. மூத்த வீரர்கள் இல்லாத நிலையில், இளம்

இந்திய அணி மேற்கிந் தியத்தீவுகள் மண்ணில் சாதிக்கும் பட்சத்தில், வரும் காலங்களில் இந்திய அணியில் நிலையான இடத்தை தக்க வைத்துக் கொள்ளலாம். சமீபத்தில் உலகக் கிண்ணத்தை வென்றுள்ளதால், இந்திய அணி மீது அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் எங்களுக்கு சிறிது நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இருப்பினும் நெருக்கடிகளை ... கரீபிய மண்ணில் முழுத் திறமையை வெளிப்படுத்தி சாதிக்க ...பாம். (15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகல இன மக்களின் இயல்பு வாழ்க்கைக்காக அவசரகாலச் சட்டத்தை நீக்கி விடுங்கள்

## ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜயசூரிய அறிக்கை

கொழும்பு, மே 25

பயங்கரவாதத்தை வெற்றிகொள்ளவென அமுல்படுத்தப்பட்ட சில சட்டங்களை நீக்கி சகல இன மக்களும் இயல்பு வாழ்க்கை மேற்கொள்ள வழி செய்யவேண்டும்

- இவ்வாறு ஐ.தே.கட்சிப் பிரதித் தலைவர் கரு ஜயசூரிய வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

2001ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் நடைபெற்ற தேர்தலில் ஆட்சிக்கு வந்த ஐ.தே. முன்னணி அரசு அதுவரை அமுல்படுத்தப்பட்டிருந்த அவசரகாலச்சட்டத்தை நீக்கியது. இருந்தும், அதன்பின்னர் ஆட்சிக்கு வந்த அரசு தொடர்ந்து அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியது. யுத்த வெற்றிக்குப் பின்னரும் இதில் மாற்றம் ஏற்படவில்லை. யுத்த வெற்றிக்குப் பின்னராவது அவசரகாலச்சட்டத்தை நீக்குதல், பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குதல் ஆகிய அடிப்படை விடயங்கள் குறித்து அரசு கவனம் செலுத்தியிருக்கவேண்டும்.

யுத்த வெற்றிக்குப் பின்னரும் அரசு அவசரகாலச்சட்டத்தைத் தொடர்ந்து அமுல்படுத்தியது. சர்வதேச ரீதியில் எதிர்ப்பை எழச் செய்தது. அரசு அவசரகாலச்சட்டத்தில் சில விதிகளை நீக்குவதாக உலகுக்குக் காட்டி இந்த நாட்டுக்குள் தொழிற்சங்க செயற்பாடுகள், ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றை தடுக்கவென இருக்கும் விதிகளை நீக்காமல் தொடர்ந்து வைத்திருக்கின்றது. தற்போதைய அரசு மாற்றுக் கருத்துக்களைக் கொண்டிருப்போரை அடக்குவதற்கு இன்றும் அவசரகாலச் சட்டத்தைப் பாவிக்கின்றது.

யுத்தம் முடிவுற்ற நிலையில் அவசரகாலச்சட்டத்தை நீக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். - என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ-சி)



யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணைத் தூதரகத்தின் அதிகாரி வை.மகாலிங்கம் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்துக்கு விஜயம் செய்து சுவாமி சித்ருபாணந்தாவுடன் உரையாடுகிறார். (த-236)

# விரிவுரையாளர் சம்பளப் பிரச்சினை கால அவகாசம் கேட்கிறார் ஜனாதிபதி

கொழும்பு, மே 25

பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற கால அவகாசம் தேவை. கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் சம்பள அதிகரிப்பு வழங்கி ஆறு மாதங்கள் ஆவதற்கு முன்னர் மீண்டும் சம்பள அதிகரிப்பு கோரிக்கையை நிறைவேற்றுவதில் சிக்கல்களை எதிர் நோக்க வேண்யுள்ளது.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தம்மைச் சந்தித்த விரிவுரையாளர்களிடம் தெரிவித்தார் என ஜனாதிபதியின் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் நேற்று முன்தினம் அலரி மாளிகையில் ஜனாதிபதியைச் சந்தித்து தமது கோரிக்கைகள் தொடர்பாகப் பேச்சு நடத்தினர்.

ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு:-

சில கட்சிகள் இந்தப் பிரச்சினையைக் காரணம்காட்டி மோதல்களை ஏற்படுத்த முயற்சிகளை மேற்கொள்கின்றன. இது குறித்து விரிவுரையாளர்கள் அவதானத்துடன் செயற்பட வேண்டும். அரசு என்ற ரீதியில் விரிவுரையாளர்கள் தொடர்பாக கௌரவத்துடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்துள்ளது.

சில குழுக்கள் வெளிநாடுகளுக்குத் தவறான தகவல்களை அனுப்பி உள்ளதால் சர்வதேச ரீதியில் நாடு முகம் கொடுக்கும் அழுத்தங்கள் குறித்தும் தற்போது மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டுள்ள சூழ்நிலைகள் காரணமாக ஏற்றுமதி வருமானம் தொடர்பான சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன எனவும் ஜனாதிபதி விரிவுரையாளர்களுக்கு விளக்கம் அளித்தார்.

- இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஒ-சி)

## மரண அறிவித்தல்

### சீவரட்ணம் சிவபாக்கியம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட சீவரட்ணம் சிவபாக்கியம் நேற்று (24.05.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சீவரட்ணத்தின் (துரையர் - முன்னாள் பரிசோதகர், இ.போ.ச.) அன்பு மனைவியும் புஷ்பவல்லி, மரகதவல்லி, செல்வராஜா (கனடா), இரத்தினவல்லி, மனோன்மணி, ஆனந்தவல்லி, காலஞ்சென்ற இரத்தினராசா ஆகியோரின் பாசமிகு தாயும் மகாலிங்கம், யோகராணி (கனடா), குணசீலன், திருச்செல்வம், காலஞ்சென்ற தம்பிநாயகம் ஆகியோரின் மாமியாரும் கனி, சூட்டி, சசி, தினேஸ், ராஜ் (பிரான்ஸ்), சியா, சுகன்ஜா, சாளி, சிசி, சிந்து, றதீபன் (கனடா), தீபனா (கனடா), தீபிகா (கனடா), சைதன், சைதா, சுலக்ஷன், உஷா, காலஞ்சென்ற கஜமுகன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2011) புதன்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.* (4554)

தகவல்:
குடும்பத்தினர்.

## "உங்களுக்குத் தெரியுமா"? பரீட்சை இன்று

தென்மராட்சி, மே 25

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 10 வகுப்பு மாணவர்களுக்கான 'உங்களுக்குத் தெரியுமா? பரீட்சை இன்று அந்தந்தப் பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் இப் பரீட்சையில் சித்திபெறும் முதல் ஐந்து மாணவர்கள் வலய மட்டப் போட்டியில் பங்குபற்றுவர். (எ-207)

ஆசியாவிலேயே முதன்மை நிலை வகிக்கும்
Spoken English
பயிற்சிமையம்.
An ISO 9001:2000 Certified Company
veta
Experts in English Training
புதிய பிரிவுகள் ஆரம்பம்.




| யாழ்ப்பாணம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|
| Sat, Sun 7.30 a.m. | Sat, Sun 9.30 a.m. | Sat, Sun 4.30 p.m. |
| Mon, Wed, fri 7.30.a.m. | Mon,Wed 9.30 a.m. | Tue,Thu 3.30 p.m. |
| Tue, Thu 5.00 p.m. | | Tue,Thu 5.00 p.m. |

UK Student Visa, Settlement Visa
City & Guilds
DMI COMPUTER EDUCATION
No.113, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். Tel.: 021-222 4403
M.M.V. வீதி, (மத்திய மகாவித்தியாலயம் முன்பாக) நெல்லியடி. Tel. : 021-226 2470
No.174, கண்டி வீதி, HNB அருகில் சாவகச்சேரி. Tel.:021-227 0243

# எரிபொருள் நிரப்பு நிலையத்தின் கட்டடம் திடீரென இடிந்தது

## நெல்லியடியில் நேற்றுப் பரபரப்பு

நெல்லியடி, மே 25

நெல்லியடி - யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்துக்கு முன்னாலுள்ள கட்டைவேலி - நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலையக் கட்டடம் திடீரென இடிந்து வீழ்ந்ததில் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

இது தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கட்டடத்தின் திருத்த வேலைகள் கடந்த சில நாள்களாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் நேற்று மு.ப. 11.30 மணியளவில் திருத்த வேலை நடந்த இடம் இடிந்து எரிபொருள் தாங்கி மீது வீழ்ந்தது. எனினும் கட்டடத்துக்குக் கீழோ அல்லது அருகிலோ எவரும் இல்லாததால் உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டன. (த-319)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
அப்பாத்துரை ஐயர்
இரத்தினசாமிக்குருக்கள்

சங்கானை அரசடி வைரவர்கோயில் ஆதீன கர்த்தாவான சிவஸ்ரீ அப்பாத்துரை ஐயர் இரத்தினசாமிக்குருக்கள் இறைவனடி சேர்ந்தமையையிட்டு எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வைரவப் பெருமானைப் பிரார்த்திக்கின்றோம்.

பாக்கியரத்தினம் ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
163,165, பிரதான வீதி,
சங்கானை. (4545)

4ஆம் திருவிழா
உபயகாரர்.

(49,22,24)

ஒரே நாளில் சகலவகையான கைத்தொலைபேசிகளையும் நீங்களே திருத்துவதற்கான சுயதொழில் வாய்ப்பு பயிற்சிக் கருத்தரங்கு
(Mobile Phone Software & Hardware Repair Training - 2011)
காலம் - 29/05/2011 {ஞாயிற்றுக் கிழமை} இடம் - UNI - ICT Campus, No:- 83, Palaly Road, Kantharmadam
நேரம் - காலை 10 மணி தொடக்கம் 2 மணிவரை பயிற்சி நெறிக் கட்டணம் - 3000/= மட்டும்
எமது ஒரே நாள் பயிற்சிக் கருத்தரங்கில் பல்வேறு வகையான கைத்தொலை பேசிகளையும் நீங்களே சுயமாக திருத்துவதற்கான பயிற்சி வழங்கப்படுவதுடன் இப் பயிற்சிக் கருத்தரங்கில் பாடக் குறிப்புக்களும் Mobile Phone Repairing CD களும் இலவசமாக வழங்கப்படும். ஆர்வமுள்ள அனைவரும் பங்குபற்றலாம்.
இப் பயிற்சிக்கருத்தரங்கில் பங்கு பற்ற விரும்புவோர் 28ம் திகதிக்கு முன்னர் எமது நிறுவனத்திற்கு வருகை தந்து பயிற்சி நெறிக் கட்டணத்தை செலுத்தி அனுமதி அட்டையினை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் - 021- 321 - 6433 / 0777 - 110 862

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அவசரகாலச் சட்டமே! நீ போவாயா?

மாதத்தின் முதலாவது வாரத்தில் வரும் செவ்வாய்க்கிழமை தோறும் இலங்கை நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை அரசாங்கத்தினால் - பிரதமரால் - தப்பாமல் சமர்ப்பிக்கப்படுவது சம்பிரதாய பூர்வமானதாக ஆகிவிட்டது. அதற்கான காரண காரியங்களை அரச தரப்பு தேடித்தேடிக் கண்டு பிடித்துவிடும்!

அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்தாவிடில் இந்த நாடே அழிந்துவிடும் என்று காட்டும் விதத்தில், பல துரும்புகளைச் சேர்த்துக் கட்டிப் பென்னம்பெரிதாக்கிக் காட்டுவதில் இப்போதைய பாதுகாப்பு அமைச்சுக்கு வேறு எந்த அமைச்சும் நிகர் நிற்க முடியாது!

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல். பீரிஸ், இந்தியாவுக்குச் சென்று வந்த கையோடு, அவசரகாலச் சட்டத்தை முற்றாக நீக்கிவிட வேண்டும் என்ற புதுடில்லி அரசின் அழுத்தத்தைத் தலைமேல் சுமந்து நிற்கிறார். அவசர காலச் சட்டத்தை நீடிக்கும் பிரேரணை அடுத்த மாதம் ஏழாம் திகதி நாடாளுமன்றுக்கு வருகிறது.

ஐ.நா. நிபுணர் குழு விவகாரத்தில் இந்தியாவின் ஆதரவை- உதவியை- தன்பக்கம் சேர்த்துக் கொள்வதற்காக அவசரகாலச் சட்டத்தை நீக்குவதற்கு இலங்கை அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது.

இந்த நாட்டில் உண்மையான ஜனநாயகத்துக்கு வழிசெய்யப்பட வேண்டுமெனில், அவசரகாலச் சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும். நாட்டில் சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு, அங்கு எழுந்த கலவர நிலையைப் போக்குவது, மக்களுக்குரிய சேவைகளுக்கு தடங்கல்கள் ஏற்படாதிருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வது, போன்ற தற்காலிகத் தேவைகளுக்காகவே அவசரகாலச் சட்டம் ஏனைய நாடுகளில் பிரகடனப்படுத்தப்படுவது உண்டு.

அதற்கென ஒரு கால வரையறை வகுக்கப்பட்டு, நிலைமை சீரானதும் அச்சட்டம் நீக்கப்பட வேண்டும். அதுவே ஜனநாயகப் பண்பு. அடக்குமுறை ஆட்சியாளர்களும், ஜனநாயகம் என்ற பெயரில் சர்வாதிகாரம் நடத்துவோருமே, காலவரையறை இல்லாமல் அவசரகாலச் சட்டத்தை தமது கையில் எடுத்துக் காவலுக்கு வைத்துக்கொள்வர்.

இந்த நாட்டில் போர் நடைபெற்ற வேளை, பயங்கரவாதச் செயல்கள் இடம்பெற்ற போது, அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு அவசரகாலச் சட்டமும், பயங்கரவாதத் தடைச் சட்டமும் தேவைப்பட்டன. ஆனால் அதனை நீண்ட நெடுங்காலத்துக்குக் கட்டிப் பிடித்துக் கொள்வது ஜனநாயகத்துக்கு மெதுவாகச் சாவுமணி அடிப்பதற்கே ஆகும்.

அவசரகாலச் சட்டம் மக்களின் ஜனநாயக உரிமைகளைப் பறித்தெடுப்பதால், அதற்கான கால எல்லையை இவ்வாறு நீடித்துச் செல்வது முற்றிலும் ஜனநாயக விரோத நடவடிக்கையாகும். அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்து நீடித்து அதன்கீழ் நடத்தப்படும் ஆட்சி சர்வாதிகாரமாக மாறுவதுண்டு.

எனவே, நாட்டில் அமைதியும் சமாதானமும் நிலவுகிறது; அபிவிருத்தியை நோக்கி அது நகர்கிறது என்ற வெறும் பேச்சு, செயல் வடிவில் உருவெடுக்கவேண்டுமெனில், அவசரகாலச் சட்டம் உடனடியாக நீக்கப்பட வேண்டும். இந்தியாவுக்கு வழங்கிய வாக்குறுதியை முழு அளவில் நிறைவேற்றுவதற்கு அரசு தாமதமின்றிச் செயற்படவேண்டும்.

அவ்வாறன்றி, முப்பது வருடகாலப் பயங்கரவாதம் நிலவிய நாடு ஒன்றில், அவசரகாலச் சட்டத்தை ஒரே இரவில் நீக்க முடியாது என்று தர்க்கம் பேசுவது, பொருந்தாது. அச்சட்டத்தை ஒரே இரவில் நீக்க வேண்டும் என்றும் எவரும் கோர முடியாது. அமைச்சர் பீரிஸ் இலங்கை திரும்பிய கையோடு அதனைச் செய்ய வேண்டும் என்று இந்தியா வற்புறுத்தவுமில்லை.

ஆனால்-

அவசர காலச் சட்டத்தைப் படிப்படியாகவே நீக்க முடியும் என்று அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பது கிணற்றில் போட்ட கல்லாக மாறிவிடக் கூடாது. அவசரகாலச் சட்ட விதிகள் சில நீக்கப்பட்டது போன்று, எதிர்காலத்திலும் அதற்கான தீர்மானங்கள் எடுக்கப்படும் என்று அமைச்சர் ஒருவர் தெரிவித்திருப்பது நழுவல் போக்கையே மறைமுகமாக உணர்த்துகிறது.

எனினும், இந்த வாரம் நடைபெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் அவசரகாலச் சட்டத்தை நீக்குவது குறித்து ஆராயப்படும் என்றும் தீர்க்கமான முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்காகக் காரணங்களைக் கண்டுபிடிப்பதில் அல்லது இயற்றுவதில் புலனைச் செலுத்துவதை விட, அதனை நீக்குவதற்கான நடவடிக்கையை, ஏற்பாட்டை விரைந்து மேற்கொள்வதே உகந்ததாகும். ஏனெனில், போர் முடிவடைந்து இரண்டு வருடங்கள் முடிவடைந்த பின்னரும், பாதுகாப்புச் சம்பந்தப்பட்ட விடயங்களில் அவரகாலச் சட்டம் மிகத் தேவை என்று தர்க்கரீதியாக முன்வைப்பதில், அரசு பலே கெட்டித்தனமாக காரணங்களைக் கண்டுபிடித்து வருவதை மக்கள் அறிவர்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுக் காரணம் தெரிவிக்கப்படாமலும், வழக்குத் தொடரப்படாமலும், சந்தேகத்தின் பேரிலும், தடுத்து வைக்கப்பட்டுத் தடுப்பு முகாம்களிலும் சிறைச்சாலைகளிலும் பல வருடக்கணக்காக வாழ்நாள்களைக் கழிக்கும் ஆயிரக்கணக்கான தமிழர்களுக்கு அந்தச் சட்டம் நீக்கப்பட்டால் புதுவாழ்வு கிடைத்துவிடும் என்பதாலும் அரச தரப்பு மெதுமெதுவாக அசைய விரும்புகிறதோ என்ற சந்தேகம் எழுகிறது.

அந்த நிலையிலிருந்து விலகி, அல்லது விடுபட்டு, தனது நலன் நாடிய கண்டுபிடிப்புக்களைத் தவிர்த்து, மக்களின் ஜனநாயக உரிமைகளை நிலை கொள்ளச் செய்ய வேண்டும் என்ற இலக்குடன் அரசு செயற்பட முன்வரவேண்டும்.

மக்கள் நலன் நாடுவதே ஒரு ஜனநாயக அரசின் பிரதான பணி என்பதனை முன்னிறுத்திச் செயற்படும் தூய சிந்தனை, அரசாங்கத்துக்கும் அமைச்சர்களுக்கும் எப்போது வரும்?

# பல்கலைக் கழகங்களில் பகிடிவதையில் ஈடுபடுபவர்கள் வெளியேற்றப்படுவர்

## உயர் கல்வி அமைச்சர் எச்சரிக்கை

கொழும்பு, மே 25

இந்த முறை பல்கலைக்கழகங்களுக்கு கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்ள வரும் புதுமுக மாணவர்களைப் பகிடிவதைக்கு உள்ளாக்குவோரை உடனடியாகப் பல்கலைக்கழகங்களிலிருந்து நீக்குமாறு உயர் கல்வி அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த 23 ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்களுக்கான தலைமைத்துவப் பயிற்சியை அலரிமாளிகையில் ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அனைத்துப் பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களுக்கு உயர் கல்வியமைச்சர் எஸ்.பீ. திஸநாயக்க இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

அவர் அங்கு வைத்து மேலும் தெரிவிக்கையில்:

பல்கலைக் கழகங்களுக்குக் கல்விபயில வரும் மாணவர்களைப் பகிடிவதைக்குள்ளாக்க எந்த விதத்திலும் இடமளிக்கப் போவதில்லை. கடந்த ஆண்டில் பகிடிவதைகளை மேற்கொண்ட பெருமளவிலான மாணவர்கள் பல்கலைக் கழகங்களிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இந்த முறை பல்கலைக்கழகங்களுக்குப் பிரவேசிக்கும் மாணவர்களுக்கு மடிக் கணினிகளை வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது- என்றார். (த-22)

# லஞ்ச ஊழல் விசாரணைகளை எதிர்கொள்ளும் அரசியல்வாதிகளும் அரச உயரதிகாரிகளும்

கொழும்பு, மே 25

புதிதாக நியமிக்கப்பட்ட லஞ்ச ஊழல் ஆணைக்குழு சில அரசியல்வாதிகளுக்கும், அரச உயரதிகாரிகளுக்கும் எதிராகத் தெரிவிக்கப்பட்டுள்ள லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்ய ஆரம்பித்துள்ளதாக ஆணைக்குழுவின் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

முன்னைய ஆணைக்குழுவின் பதவிக் காலம் நிறைவுபெற்றதன் காரணமாகக் கடந்த வருடம் மார்ச் மாதம் 28 ஆம் திகதிக்குப் பிந்திய முறைப்பாடுகளை விசாரிப்பதற்கு அதனால் முடியவில்லை. ஆனால், ஜனாதிபதி ராஜபக்ஷவால் ஆணைக்குழுவுக்குப் புதிய தலைவரும் இரண்டு அங்கத்தவர்களும் நியமிக்கப்பட்டதால் விசாரணைகளை ஆணைக்குழு மீண்டும் ஆரம்பித்துள்ளது.

மேலும் ஆணைக்குழு மீண்டும் இயங்கத் தொடங்கியதன் பின்னர் மூன்று திடீர் வேட்டைகளை நடத்தி மூன்று சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று லஞ்ச ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் லஷ்மி ஜயவிக்கிரம தெரிவித்தார்.

போக்குவரத்துப் பொலிஸ் பிரிவின் இன்ஸ்பெக்டர் ஒருவர் 10 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெறும்போது கையும் மெய்யுமாகப் பிடிபட்டார்.

நிட்டம்புவ பொலிஸ் பொதுமக்கள் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த ஒருவர் பஸ்சாரதி ஒருவரிடமிருந்து 3 ஆயிரம் ரூபாவை லஞ்சமாகப் பெறும்போதும், பிலியந்தல பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ்காரர் ஒருவர் ஒருபோத்தல் பிறண்டியை ஒருவரிடமிருந்து பெறும் போதும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

போதுமான ஆதாரங்கள் இருப்பின் குற்றவாளிகளின் சமூக நிலையைக் கருத்தில் கொள்ளாது அவர்களை நீதியின் முன்பாக நிறுத்துவோம் என்று திருமதி ஜயவிக்கிரம மேலும் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் வரை 247 லஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான வழக்குகள் உயர் நீதிமன்றத்திலும் இத்தகைய 52 வழக்குகள் நீதிவான் நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

முன்னாள் மேல் நீதிமன்ற நீதிபதி டி.ஜே. டி.எஸ். பாலபட்டபெண்டி லஞ்ச ஆணைக்குழுவின் தலைவராகவும், முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண மற்றும் முன்னாள் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதியான எல்.கே. விமலச்சந்திர ஆகியோர் இதன் ஏனைய உறுப்பினர்களாகவும் நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

## பொலிஸ் நிலையங்களில்

# மகளிர், சிறுவர் பிரிவுகளை கண்காணிக்க புதிய நிர்வாகம்

கொழும்பு, மே 25

பொலிஸ் நிலையங்களில் செயற்படும் சிறார்கள் மற்றும் மகளிர் செயற்பாட்டுப் பிரிவுகளைக் கண்காணித்து நிர்வகிக்கும் பொறுப்பு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

சிறுவர் மற்றும் மகளிர் செயற்பாட்டுப் பிரிவுகளில் சீரான முறையில் முறைப்பாடுகள் விசாரிக்கப்படுவதில்லை என்ற நிலைப்பாடு தெரியவந்துள்ளது. இதனை அடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் தலைமையகத்தின் உயரதிகாரி ஒருவர் தெவித்துள்ளார்.பொலிஸ் நிலையங்களிலுள்ள சிறார்கள், மகளிர் செயற்பிரிவுகளுக்குக் கிடைக்கும் முறைப்பாடுகள் சம்பந்தமாக உடனடியாகச் செயற்பட்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதிப் பொலிஸ் மா அதிபர் லக்கி பீரிஸ் அனைத்துப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் பணித்துள்ளார். (ம-22)

# முகாமைத்துவப் பரீட்சையில் 55பேர் சித்தி

அச்சுவேலி, மே 25

வடக்கு மாகாண சபையின் அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளில் கடமை புரியும் பணியாளர்களை (சிற்றூழியர்) முகாமைத்துவ உதவியாளர் சேவை தரம் III இற்குப் பதவி உயர்த்துவதற்கு நடத்தப்பட்ட போட்டிப்பரீட்சைக்குத் தோற்றிய 444 பேரில் 55 பேர் சித்தியடைந்துள்ளனர்.

வடக்கு மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவால் நடத்தப்பட்ட அலு வலகப் பணியாளர் (சிற்றூழியர்) பதவி உள்ளவர்களுக்கான முகாமைத்துவ உதவியாளர் தரம் III பதவி உயர்வுக்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கு 444 ஊழியர்கள் தோற்றியிருந்தனர். இவர்கள் குறிப்பிட்டளவு புள்ளிகள் பெற்று போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் பட்டியல் வடக்கு மாகாண பொது நிர்வாக சேவைகள் அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

பரீட்சையில் சித்தியடைந்தவர்களில் உயர் புள்ளி அடிப்படையில் குறிப்பிட்ட வீதத்தினர் முகாமைத்துவ உதவியாளர் சேவை III இற்குப் பதவி உயர்த்தப்படவுள்ளனர். தகுதியானவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படவுள்ளனர். (த-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுழற்சி முறைக் கடன் திட்டத்தை நெறிப்படுத்த தனி நபர் பிரேரணை

## கிழக்கு மாகாண உறுப்பினர் பிரசாந்தன் கூறுகின்றார்

மட்டக்களப்பு, மே 25

அரச,அரச சார்பற்ற நிறுவனங்களினால் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக வழங்கப்படும் சுழற்சி முறைக் கடன்திட்டத்தை நெறிப்படுத்துவதற்கான தனிநபர் பிரேரணை ஒன்றை கிழக்கு மாகாண சபையில் கொண்டு வரவுள்ளதாக மாகாண சபை உறுப்பினர் பூ. பிரசாந்தன் தெரிவித்தார். இந்த பிரேரணை சம்பந்தமாக அவர் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது,

அரசினாலும் அரச சார்பற்ற நிறுவனங்களினாலும் பொது மக்களுக்கு இந்தத் திட்டத்துக்காக கடன் வழங்கப்படுகின்றது.

எனினும் இந்தக் கடனுக்கான வட்டி வீதம் வேறுபட்டதாக உள்ளது. அத்துடன் கடனைப் பெற்றவர்கள் அதனை செலுத்துவதற்கு வேறொரு நிறுவனத் தில் மற்றுமொரு கடனைப் பெறும் நிலையும் காணப்படுகிறது.

எனவே, இந்தக் கடன் திட்டங்களை ஒருங்கிணைத்து நெறிப்படுத்துவதற்காக தனி நபர் பிரேரணை ஒன்றை கொண்டு வரவுள்ளேன்- என்றார்.

# அன்னையர் தினம்

நவாலி, மே 25

நவாலி, ஊன்றுகோல் அறப் பணியகத்தினர் நடத்திய உலக அன்னையர் தினம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நவாலி முருகானந்தா சனசமூக நிலைய மண்டபத்தில் க.நடேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கொக்குவில் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் தாயின் மகத்துவத்தை விளக்கும் பாடல் போட்டிகளும் நடைபெற்றன.

(ச-100)

# நல்லூர் பொதுச் சுகாதாரப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி

யாழ்ப்பாணம் மே 25

நல்லூர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.

இந்தத் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதிவரை இடம் பெறவுள்ளது.

கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்தவும் விலங்கு விசர் நோயைத் தடுக்கும் முகமாகவும் இந்தத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் பொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மக்கள் தமது வளர்ப்பு நாய்களுக்குரிய தடுப்பூசியை அருகிலுள்ள தடுப்பூசி வழங்கும் நிலையங்களுக்குச் சென்று பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ்.மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி பகுதியினரால் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டுள்ள இந்த நிகழ்வில் பொதுசுகாதாரப் பரிசோதகர்கள், சுகாதாரப் பாதுகாவலர்கள், விலங்கு விசர் நோய் கட்டுப்பாட்டுப் பிரிவினர் ஆகியோர் கலந்து கொள்வர்.

இதனடிப்படையில் இன்று புதன் கிழமை காலை 9 மணி முதல் முற்பகல் 11 மணிவரை மூத்தவிநாயகர் சன சமூக நிலையத்திலும் முற்பகல் 11.30 மணிமுதல் பிற்பகல் 1.30 மணிவரை ஆசிர்வாதப்பர் சுகாதாரக் கட்டுப்பாட்டு மையத்திலும் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு இடம் பெறும்.

அதனைத் தொடர்ந்து ஏனைய குறிக்கப்பட்ட இடங்களில் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு இடம்பெறும் என யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ம.மரியதாசன் அறிவித்துள்ளார்.(ச-313)

## அருட்காட்சி...



பக்திப் பரவசம்: காரைநகர் பாலாவோடை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற தேர்த்திருவிழாவில் அம்பாள் தேரில் வலம் வந்து பக்தர்களுக்கு அருட்காட்சி கொடுக்கிறார். (ம-250)




யாழ்ப்பாணம், மே 25

கரம்பொன் தெற்கு, ஊர்காவற்றுறை வேளாங்கண்ணி அன்னையின் 35 ஆவது ஆண்டு திருவிழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்குக் கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி நவநாள் வழிபாடுகள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்குத் திருவிழாத் திருப்பலியைத் தொடர்ந்து திருச்சொரூப பவனியும் கொடியிறக்கமும் இடம்பெறும். (ற)

***

யாழ்ப்பாணம், மே 25

மிருசுவில் பழைய வாய்க்கால் புனித வேளாங்கண்ணி ஆலயத் திறப்பு விழாவும் திருவிழாத் திருப்பலியும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 7 மணிக்கு நடைபெறவுள்ளது.மறைக்கல்வி இயக்குநர் அருட்தந்தை அன்ரன் ஜோர்ச் இந்த ஆலயத்தைத் திறந்து வைத்து திருவிழாத் திருப்பலியையும் ஒப்புக்கொடுக்கவுள்ளார் என ஆலயப் பங்குத் தந்தை தெரிவித்துள்ளார்.

(ற-313)

***

யாழ்ப்பாணம், மே 25

வட்டுக்கோட்டை வடக்கு கற்பகச் சோலை சாமுண்டி ஞானவைரவர் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகத் தினவிழா எதிர்வரும் ஜூன் மாதம் 6ஆம் திகதி திங்கட் கிழமை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகத் தினத்தை முன்னிட்டு விசேட பூசை வழிபாடுகள் எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதல்இடம்பெறும்.


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் நமசிவாயம்



நுணாவில் மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் நவசிவாயம் 23.05.2011 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - பார்வதியின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - கண்மணியின் அன்பு மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் பத்மநாதன், காலஞ்சென்ற கமலநாதன் மற்றும் ஜெகநாதன், ஜெகதாம்பிகை, யோகநாதன், புவீந்திரன், சசீந்திரன், நவீந்திரன், ஜெகதீஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் மீரா, ஜெயந்தி, ஜெயரஞ்சன், தருமநாயகி, சந்திரவதனி, மஞ்சுளா, ராதிகா, காலஞ்சென்ற குமாரலிங்கம் ஆகியோரின் அன்பு மாமனும், டிலக்சன், டிசாந்தன், ஜெனுசன், அரீசன், பிரசாந், துசியந்தி, துவாரகா, காயத்திரி, லக்மிகா,ஜானுயா, ஸ்ரேகா, பரணிகா, சுதனிகா ஆகி யோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

தகவல்:
குடும்பத்தினர்.

(1686)(41.22.50)


# வடக்கின் மூன்று மாவட்டங்களில் 75 சுகாதார நிலையங்கள்

கொழும்பு, மே 25

முல்லைத்தீவு, வவுனியா மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் தற்போது இயங்கிவரும் வைத்தியசாலைகளுக்கு மேலதிகமாக 75 சுகாதார சேவை நிலையங்களை அமைக்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரி பால சிறிசேன அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளார்.

இந்த சுகாதார சேவை நிலையங்களை அமைப்பதற்கு சுமார் 20 கோடி ரூபா செலவாகுமென சுகாதார அமைச்சின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகள் புனரமைக்கப்பட்டு அவற்றின் வசதிகள் அதிகரிக்கப்பட்டுவருகின்றன. அதற்கு மேலதிகமாகவே 75 சுகாதாரசேவை நிலையங்களும் அமைக்கப்பட உள்ளன என அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# சாரதி அனுமதிப்பத்திரப் பரீட்சைகள்

கிளிநொச்சி, மே 25

கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஊடாக சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கென விண்ணப்பித்தவர்களுக்கான சாரதிப் பரீட்சார்த்தப் பரீட்சையும் எழுத்துப் பரீட்சையும் முறையே நாளை வியாழன் மற்றும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் நடைபெற விருப்பதாக கிளிநொச்சி அரச அதிபர் அறிவித்துள்ளார்.

சாரதி அனு மதிப்பதிரம் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்தவர்களின் சுட்டிலக்கம் 3390 வரையிலான பரீட்சார்த்திகளுக்கான எழுத்துப் பரீட்சை நாளை மறுதினம் 27 ஆம் திகதி வெள்ளிக் கிழமை காலை 9 மணிக்கு கரைச்சி உதவி அரசாங்க அதிபர் செயலக மாநாட்டு மண்டபத்திலும் 2011 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதிக்கு முற்பட்ட திகதிகளில் இடம் பெற்ற எழுத்துப் பரீட்சைகளில் சித்தியடைந்தவர்களுக்கென சாரதிப் பரீட்சார்த்தப் பரீட்சை நாளைய தினம் வியாழக் கிழமை காலை 9 மணிக்கு கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலும் இடம்பெறவுள்ளன. பரீட்சார்த்திகள் தமக்கு வழங்கப்பட்ட பற்றுச் சீட்டுக்களுடன் உரிய நேரத்துக்குச் சமுகம் தருமாறும் அவர் கேட்டுக் கொண்டுள்ளார். (க)


## தவறிவிட்டது

அல்லியவத்தை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்னும் முகவரியைச் சேர்ந்த கிருஸ்ணர் குணரத்தினம் என்பவரது மோட்டார் சைக்கிள் வரிப்பத்திரம், காப்புறுதிப்பத்திரம், சாரதி அனுமதிப் பத்திரம் என்பன அடங்கிய பை கடந்த வாரம் தவறிவிட்டது. கண் [illegible]

[illegible]



## மரண அறிவித்தல்

### மகேஸ்வரன் உதயசீலன் [தயா]

புங்குடுதீவு, 2ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் பிரான்ஸில் வசித்து வந்தவருமான மகேஸ்வரன் உதயசீலன் (தயா) நேற்று (24.05.2011) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் காலமானார்.



அன்னார் மகேஸ்வரன், காலஞ்சென்ற யோகேஸ்வரி (மாலா) ஆகியோரின் அன்பு மகனும் வேமசீலன் (கனடா), சந்திரேஸ்வரி (கிளிநொச்சி), சுதேஸ்வரி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ரதீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராகினி, செல்வா, கமல் ஆகியோரின் அன்பு மைத்துன ரும் ஆவார்.

அன்னாரின் நிகழ்வு நினைவு இல.691,செல்வாநகர், கிளிநொச்சி (சேவியர் கடைச்சந்தி அருகில்) எனும் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இல.691, செல்வாநகர்,
கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி/179)(41.19.50)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வெற்றி விளக்க மாநாட்டை புறக்கணிக்க நாடுகளிடம் கோரிக்கை

கொழும்பு,மே25

இலங்கை இராணுவத்தினர் நடத்தவுள்ள யுத்த வெற்றி தொடர்பான இராணுவ மாநாட்டை புறக்கணிக்குமாறு நியூயோர்க்கை தலைமையகமாகக் கொண்ட மனித உரிமைகள் கண்காணிப்பகம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த மாநாட்டை நடத்துவதன் மூலம் இலங்கை இராணுவம் தாம் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட யுத்தத்தின்போது பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப்பட்டமையை மறைக்க முயல்வதாக கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

'பயங்கரவாதம் தோற்கடிப்பு' என்ற தலைப்பில் இலங்கை அரசு நடத்தவுள்ள இந்த மாநாட்டுக்காக 54 நாடுகளுக்கு அழைப்பு விடுத்துள்ளது

மே 31ஆம் திகதி முதல் ஜூன் 2 ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள இம்மாநாட்டின்போது தமிழீழ விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த அனுபவங்களை இலங்கைப்படையினர் ஏனைய நாட்டு இராணுவ அதிகாரிகளுடன் பகிர்ந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கைப்படையினர், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின் போது பொது மக்கள் மீது எறிகணை வீச்சுக்களை நடத்தினர். மருத்துவமனைகள் மீது தாக்குதல் நடத்தினர்.

இந்தநிலையில் அவற்றை மறைப்பதற்காகவே மாநாட்டை நடத்துகின்றனர். எனவே, இந்த மாநாட்டில் பங்கேற்பதால் எவ்வித இராணுவ ஒழுங்கு தொடர்பான படிப்பினையையும் பெற்றுக்கொள்ளமுடியாது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் சபை செயலாளரின் நிபுணர் குழு அறிக்கை, அமரிக்க ராஜாங்க திணைக்களத்தின் அறிக்கை என்பன இலங்கைப் படையினர் இறுதிப் போரின்போது பல்லாயிரக் கணக்கான பொதுமக்களை கொன்றமையை உறுதிப்படுத்துகின்றன.

யுத்தத்தின் முன்னரும் முடிந்த பின்னரும் இலங்கையின் ஜனாதிபதியும் இராணுவத் தளபதி ஜெகத் ஜெயசூரியவும் யுத்தத்தில் பொதுமக்கள் கொல்லப்படவில்லை என்று தெரிவிக்கின்றனர்.

இந்தக் கருத்துக்களை நிராகரித்துள்ள மனித உரிமைகள் கண்காணிப்பகம், இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்களை விசாரணை செய்ய சர்வதேச விசாரணைக்குழு ஒன்றை ஏற்படுத்தப்படவேண்டும் என்று கோரியுள்ளது. (ச)

# பிரதேச செயலகங்களில் பணிகளை கண்காணிக்க புலனாய்வுக் குழுக்கள்

## பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை

கொழும்பு, மே 25

பிரதேச செயலகங்களின் பணிகளை கண்காணிப்பதற்கென விசேட புலனாய்வுக் குழுக்களை சேவையில் ஈடுபடுத்துவதற்கு பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்கென அமைச்சு அதிகாரிகளை உள்ளடக்கிய மூன்று குழுக்கள் அமைக்கப்படவுள்ளன. அவை நாட்டிலுள்ள அனைத்துப் பிரதேச செயலகங்களுக்கும் திடீரெனச் சென்று அவற்றின் சேவைகளை மேற்பார்வை செய்யும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சில பிரதேச செயலகங்களில் மக்களின் தேவைகள் உரிய முறையில் நிறைவேற்றிக் கொடுக்கப்படுவதில்லை என்று அமைச்சருக்குக் கிடைத்த முறைப்பாடுகளைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

அதிகாரிகள் மற்றும் ஊழியர்களின் வரவு, அலுவலக நேரத்தில் அவர்களின் செயல்பாடுகள் குறித்து இந்தக் குழுக்கள் கண்காணிப்பதோடு ஒவ்வொரு செயலகத்தினதும் செயற்பாடுகள் குறித்தும் அமைச்சருக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் அடிப்படையில் தவறிழைக்கும் அதிகாரிகளுக்கும் ஊழியர்களுக்கும் எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற் கொள்வதற்கும் பொது நிர்வாக அமைச்சு திட்டமிட்டிருக்கிறது. (ச)

# ஆசிரியர் நியமனங்களில் தமிழர்கள் புறக்கணிப்பா? கேள்வி எழுப்புகிறது ஜனநாயக மக்கள் முன்னணி

கொழும்பு,மே25

மேல் மாகாண தமிழ் மொழிமூல ஆசிரிய நியமனங்களின் போது தமிழர்கள் புறக்கப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

ஆசிரிய நியமனங்கள் அதிகளவில் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக ஜனநாயக மக்கள் முன்னணியின் மேல் மாகாண சபை உறுப்பினர் குமாரகுருபரன் தெரிவித்துள்ளார்.

89 ஆசிரியர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதாகவும் இதில் அதிகளவு நியமனங்கள் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டதாகவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

200 தமிழ் ஆசிரிய வெற்றிடங்களுக்கான பதவி நியமனங்களை மேற்கொள்ளும் தெரிவுக் குழுவில் மூன்று முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும், இந்தக் குழுவில் ஒரு தமிழருக்குக் கூட சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, தமிழ் சமூகத்திற்கு அநீதி இழைக்கப்படாது எனவும் நியாயமான முறையில் வெற்றிடங்களுக்கான நியமனங்கள் மேற்கொள்ளப்படும் எனவும் மேல் மாகாண சபை அறிவித்துள்ளது.

கல்வித்துறையில் இன, பேத அடிப்படையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதில்லை எனத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



அம்பாந்தோட்டை, மத்தல பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும் சர்வதேச விமான நிலையத்தின் நிர்மாணப் பணிகளை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நேரில் சென்று பார்வையிடுகிறார்.

# யாழ். மக்களுக்காக என்றும் தோள் கொடுப்பதற்குத் தயார்

## மாவட்ட இராணுவத் தளபதி

யாழ்ப்பாணம்,மே25

யாழ். மாவட்டத்திலுள்ள மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு மக்களோடு மக்களாக நின்று தோள் கொடுப்பதற்குத் தயாராக உள்ளதாகத் தெரிவித்தார் யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் மஹிந்த ஹத்துருசிங்க.

கந்தர்மடம், பழம் வீதியில் நேற்றுமுன்தினம் இந்து - பௌத்த கலாசாரப் பேரவையின் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது. அந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே இராணுவத் தளபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், நான் யாழ்.மாவட்ட இராணுவத் தளபதியாகப் பதவியேற்று ஒன்றரை வருடங்கள் ஆகின்றன. இந்தக் காலப்பகுதியில் சிங்களவர், தமிழர் என்ற பேதங்கள், பிரச்சினைகள் இருக்கவில்லை. நான் இங்குள்ள மக்களை எனது உறவுகளாகவே பார்க்கிறேன். எனக்குள்ள கடமையை சிறப்பாக நிறைவேற்றி வருகிறேன். - என்றார்.

இந்து, பௌத்த மதங்களிடையே அதிக ஒற்றுமைகள் உள்ளன எனக் கூறிய அவர் யாழ்ப்பாண மக்களின் கலாசாரம் சிறப்பானது நீண்டது எனவும் தெரிவித்தார். (த-14-313)

# சுகாதாரத்துறையில் இலங்கை தெற்காசியாவில் முதன்நிலை

கொழும்பு,மே25

சுகாதாரத்துறையில் தெற்காசிய வலயத்திலுள்ள 11 நாடுகளுக்குள், இலங்கை முன்னிலை பெற்றுள்ளது.2010 ஆம் ஆண்டுக்கான உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கைக்கு அமையவே இலங்கை இந்த இடத்தினைப் பெற்றுள்ளது.

5 வயதிற்குட்பட்ட சிசுக்களின் குறைந்தளவிலான மரண வீதம், குறைந்தளவிலான தாய் மரண வீதம், தடுப்பூசிகள் வழங்கப்படுதல் மற்றும் பயிற்சி பெற்ற சுகாதார ஊழியர்களின் ஒத்துழைப்பு ஆகியவற்றை கருத்திற்கொண்டு இந்த அறிக்கை வெளி பிடப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

பிறக்கும் 10 ஆயிரம் சிசுக்களில், 58 சிசுக்கள் மரணமடைவதாக சுகாதார அமைச்சு குறிப்பிடுகின்றது.

இந்த நிலைமை மலேஷியாவில் 120 ஆகவும், நேபாளத்தில் 830 ஆகவும் காணப்படுவதா சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது. (ச)

# சட்டவிரோத மது விற்ற 100 பேர் வெசாக் சமயம் கைது

கொழும்பு, மே 25

வெசாக் காலத்தில் கலால் திணைக்களம் நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது 21 பெண்கள் உட்பட 100 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதில் 18 பேர் சட்டவிரோதமாக மதுபானம் தயாரித்தமையாலும் 50 பேர் கசிப்பு விற்றமையாலும் 28 பேர் அனுமதியில்லாமல் மதுபானம் விற்றமையாலும் இரண்டு பேர் அனுமதியின்றி வெளிநாட்டு மதுபானம் விற்றமையாலும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிலாபம், ஜாஎல, சீதுவ, நீர்கொழும்பு, கொழும்பு, தெஹிவளை, ரத்மலான, ஹோமாகம, தெஹியேவிட்ட, ருவான்வெல, அவிசாவளை, ராகாம, களனி, பண்டாரகம, ஆனமடுவ மற்றும் மினுவாங்கொட ஆகிய பிரதேசங்களிலேயே இந்த கைதுகள் இடம் பெற்றுள்ளன.

# மருந்துப் பற்றாக்குறைக்கான காரணம் விநியோகப் பிரிவு இயக்குநர் ஒருவரே

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,மே25

நாட்டில் கடந்த காலங்களில் அரச வைத்தியசாலைகளில் நிலவிய மருந்து பற்றாக்குறைக்கான முக்கிய காரணம் மருந்து விநியோகிக்கும் பிரிவைச் சேர்ந்த முன்னாள் இயக்குநர் ஒருவரே என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

முன்னாள் இயக்குநருக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கைகளை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருப்பதுடன், இவர் தொடர்பான அறிக்கை ஒன்றை சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவிடம் கையளிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அண்மைக் காலமாக புற்றுநோய், சிறுநீரகம், நீரிழிவு மற்றும் மாரடைப்பு போன்ற நோய்களுக்கான மருந்து வகைகளுக்கு அரச வைத்தியசாலைகளில் பெரும் தட்டுப்பாடு நிலவியது தெரிந்ததே.

இந்த மருந்துத் தட்டுப்பாடு குறித்து சுகாதார அமைச்சருடன் அண்மையில் அதிகாரிகள் குழுவொன்று விசேட பேச்சு ஒன்றை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இதன்போது அனுமதிக்கப்பட்ட கேள்விப் பத்திர விநியோகத்தினை 50 சதவீத குறைப்பு குறிப்பிட்ட முன்னாள் இயக்குனரால் மேற்கொள்ளப்பட்டதாக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இதேவேளை, 24 ஆயிரம் வகையான மருந்து வகைகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் மற்றும் இரசாயன மருந்து வகைகள் என்பனவற்றை இறக்குமதி செய்வதற்கு சுமார் 450 கேள்வி பத்திர சபைகள் கூடி, அத[illegible] [illegible]முறைகளை மேற்கொண்[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணி மிக விரைவில் வலி.வடக்கிலும்

யாழ்ப்பாணம், மே 25

வலி.வடக்கில் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் விரைவில் 2011ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வு செய்யப்படவுள்ளதாக யாழ். மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் ' உதயனுக்குத்' தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

கடந்த 2010 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வுப் பணிகள் எதிர்வரும் 31 ஆம் திகதி நிறைவடையவுள்ளன.

இதன்போது மக்கள் மீளக் குடியமர்த்தப்படாத வலி.வடக்கில் 34 கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் வாக்காளர் இடாப்பு மீளாய்வுசெய்யப்படவில்லை.

இருப்பினும், தற்போது வலி வடக்கில் மீளக்குடியமர்த்தப்பட்ட 13 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு விரைவில் மீளாய்வு செய்யப்படும்.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் இடாப்பு மீளாய்வின் ஆரம்பக் கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்றார் உதவித் தேர்தல் ஆணையாளர். (த-9)

# சாட்டிக் கடற்கரையில் உல்லாசக் குடில்கள்

யாழ்ப்பாணம், மே 25

சாட்டி வெள்ளைக் கடற்கரைப் பிரதேசம் வேலணைப் பிரதேச சபையால் புனரமைக்கப்பட்டுள்ளது.

தென்பகுதியில் இருந்தும் குடாநாட்டில் இருந்தும் இங்கு வரும் பெரும் எண்ணிக்கையான உல்லாசப் பயணிகளின் வசதிக்காக நவீன குடில்கள் கடற்கரையில் அமைக்கப் பட்டுள்ளன.

வெள்ளைக் கடற்கரையில் நீராடும் சுற்றுலாப் பயணிகள் அந்தப் பிரதேசத்தைச் சுத்தமாக வைத்திருக்குமாறு வேலணைப் பிரதேச சபைச் செயலாளர் கெ.தவராசா கேட்டுள்ளார்.

தற்போது அந்தப் பகுதியில் சிற்றுண்டிச்சாலை ஒன்று அமைக்கப்படுகின்றது எனவும் அது விரைவில் செயற்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

வாகனங்களில் வருவோர் கடற்கரையை அண்மித்த பிரதேசத்தைத் தவிர்த்து அதற்கென ஒதுக்கப்பட்ட பிரத்தியேக இடத்தில் வாகனங்களை நிறுத்துமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-302)

# மூலப்பொருள்கள் வந்து சேர்ந்தும் கூட கோப்பாய் வீதிகள் திருத்தப்படாதமை ஏன்?

## அந்தப் பகுதி மக்கள் எழுப்பும் கேள்வி

யாழ்ப்பாணம் மே 25

கோப்பாய் தெற்கு இராச வீதி, கொட்டைக்காடு வீதி என்பன மக்கள் பயன்படுத்த முடியாத அளவுக்கு மிகவும் மோசமான முறையில் சேதமடைந்துள்ளமையால் அந்த வீதியூடாகப் பயணம் செய்யும் போது சிரமங்களை எதிர்கொள்கின்றோம் என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியானது வலி. கிழக்கு, நல்லூர் ஆகிய இரு பிரதேச சபைகளின் கீழ் உள்ள இராச வீதி, பலாலி வீதி ஆகிய இரு வீதிகளினதும் பிரதான இணைப்பாக உள்ளது.

வலி.கிழக்கு பிரதேச சபைக்கு உரித்தான 505 மீற்றர் நீளமான வீதி 1972 ஆம் ஆண்டுக்குப் பின் எந்தவித திருத்த வேலைகளும் செய்யப்படாமல் மிகவும் மோசமான நிலையில் சேதமடைந்துள்ளது.

இந்த வீதியைத் திருத்துவதற்கென நிதி ஒதுக்கீடு பல வருடங்களுக்கு முன் செய்யப்பட்டுள்ளதாகவும் 2005 ஆம் ஆண்டு மூலப்பொருள்கள் கொள்வனவு செய்யப்பட்டு வலி. கிழக்குப் பிரதேச சபை தலைமைக் காரியாலயத்தில் வைக்கப்பட்டுள்ளதெனவும் அறிய முடிகிறது

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தம்மால் பலமுறை முறைப்பாடு செய்யப்பட்டும் எந்த வித ஆக்கபூர்வமான நட வடிக்கையும் இதுவரை எடுக்கப்படவில்லை என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்தவீதித் திருத்த வேலையுடன் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சற்றுச் சிந்தித்து நடவடிக்கை எடுக்கும்படி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஒ-எ)

## மனித நேயத்துடன்...



மகத்தான பணி: 2600 ஆவது புத்தஜெயந்தி நிகழ்வையொட்டி தெல்லிப்பழைப் பொலிஸார் தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயத்தில் உள்ள மகளிர் இல்லப் பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங் கினார்கள்.
தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி லலித் வீரசிங்கா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் காங்கேசன்துறைப்பொலிஸ் அத்தியட்சகர் காமினி பெரேரா விருந்தினராகக் கலந்துகொண்டார். (த-86)

# போட்டிப் பரீட்சை விண்ணப்ப திகதி நீடிப்பு

அச்சுவேலி, மே 25

வடக்கு மாகாண அமைச்சின் அலுவலகங்களின் பணியாளர் சேவையில் வகுப்பு 3 பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை விண்ணப்ப இறுதித் தினம் ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்ப இறுதித் தினம் நீடிக்கப்பட்டிருப்பது பற்றி வடக்கு மாகாணப் பொதுச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் சி.திவாகரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பாகப் பொதுச் சேவை ஆணைக்குழுவின் செயலாளர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,

''அலுவலகங்களின் பணியாளர் சேவை வகுப்பு 3 பதவிக்கு ஆள் சேர்ப்புச் செய்வதற்குக்கோரப்பட்ட போட்டிப்பரீட்சை விண்ணப்ப இறுதித் தினம் இன்று மே 25 ஆம் திகதி என்பது ஜூன் மாதம் 10 ஆம் திகதி என மாற்றம் செய்யப்படுகின்றது'' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-11)

# புத்தர் சிலைகள் வருகையால் அச்சத்தில் யாழ். மக்கள்

யாழ்ப்பாணம்,மே 25

பௌத்த பிரதேசமாக மாற்றுவதற்கான முயற்சியாகவே யாழ்ப்பாணத்துக்குப் புத்தர் சிலைகள் எடுத்துவரப்படுகின்றனவோ என்ற அச்சம் இங்குள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

- இவ்வாறு சர்வதேச இந்துக் குருமார் ஒன்றியத் தலைவார் சபா வாசுதேவக் குருக்கள் தெரிவித்தார்.

இந்து, பௌத்த கலாசாரப் பேரவையின் அங்குரார்ப்பண நிகழ்வின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்.கிறீன்கிறாஸ் ஹோட்டலில் இடம்பெற்ற இந்த நிகழ்வின்போது அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

எமது கலை, கலாசாரங்களைப் பாதுகாக்க வேண்டிய சூழலில் நாம் தற்போது உள்ளோம்.

புத்தர் சிலைகள் யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வரப்படுகின்றன என்று செய்திகள் ஊடாக அறிகின்றோம்.

இவ்வாறு புத்தர் சிலைகள் பெருமளவில் எடுத்துவரப்படும் செயலால் இங்குள்ள மக்கள் மத்தியில் ஒரு வித பய உணர்வு ஏற்பட்டுள்ளது.

எமது பகுதிகளைப் பௌத்த பிரதேசமாக மாற்றப்போகிறார்கள், பௌத்த கலாசாரத்தைப் பரப்புவதற்கான முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றன என்பன போன்ற சந்தேகங்கள் இதன்மூலம் மக்களிடையே எழுந்துள்ளன - என்று தெரிவித்தார். (த-14-86)

# விவசாய ஆராய்ச்சி உதவியாளர் நேர்முகத் தேர்வு 30இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் , மே 25

எதிர்வரும் 30ஆம் திகதி முதல் ஜூன் 10 ஆம் திகதி வரை பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைந்துள்ள யாழ். மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள மாவட்டக் காரியாலயத்தில் நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற 10 ஆயிரத்து 860 விண்ணப்பங்களில் விண்ணப்ப முடிவு திகதிக்கு பின்பு கிடைக்கப்பெற்ற 110 விண்ணப்பங்களும், கோரப்பட்ட அடிப்படைத் தகைமைகள் அற்ற ஆயிரத்து 428 விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டு தகுதிவாய்ந்த 9 ஆயிரத்து 322 விண்ணப்பதாரிகளுக்கான நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இவற்றுள்ள தற்காலிக நலன்புரி நிலையங்களைத் தமது தற்காலிக முகவரியாகக் குறிப்பிட்டிருந்த விண்ணப்பதாரிகளின் அழைப்புக் கடிதங்கள் அவர்களால் குறிப்பிடப்பட்ட நிரந்தர முகவரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எனினும், நலன்புரி நிலைய முகவரியைத் தற்காலிக முகவரியாகக் குறிப்பிட்டிருந்த விண்ணப்பதாரிகளுக்கு 25 ஆம் திகதி வரை அழைப்புக் கடிதங்கள் கிடைக்கப் பெறாத பட்சத்தில் 27 ஆம் திகதிக்கு முன்னராக அலுவலக நேரத்தில் யாழ்.மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள மாவட்டக் காரியாலயத்துடன் நேரடியாகத் தொடர்புகொள்ளுமாறு உதவி ஆணையாளர் கேட்டுள்ளார். (த)

# போதையில் வாகனம் செலுத்தியவருக்கு அபராதம்

தென்மராட்சி, மே 25

மதுபோதையில் வாகனம் செலுத்திய நபருக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை 10 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரித்த நீதிவான், 10 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் 3 மாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தர விட்டார். (த-207)

# வடிகாலமைப்புச் சபை ஊழியருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம்,மே 25

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் அமய அடிப்படையில் பணியாற்றிய 22 ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கை சுதந்திரத் தொழிலாளர் சேவை சங்கத்தால் யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் வடக்கு-



தெற்கு மாகாண ஒன்றிணைப்புக் கலந்துரையாடல் ஒன்று நடத்தப்பட்டது.

இதன் போது வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய ஊழியர் தொழிற்சங்கம், இலங்கை சுதந்திர சேவைச் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளையின் ஊடாக முன் வைக்கப்பட்ட கோரிக்கையை அடுத்தே இந்த நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த 11 ஆம் திகதி இரத்மலானையில் உள்ள சபையின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து இந்த 22 பணியாளர்களுக்கும் நிரந்தர நியமனக் கடிதங்களை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன வழங்கினார். (த-26)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# விளம்பர அனுமதி வழங்கியதில் பெரும் மோசடி யாழ். மாநகர சபைக்கு 50 லட்சம் ரூபா நட்டம்

## தொடர்கிறது மாநகர முதல்வரின் ஊழல்

யாழ்ப்பாணம், மே 25

யாழ். மாநகர சபை எல்லைக்குள் விளம்பரப் பதாகைகளுக்கு அனுமதி வழங்கியதில் பெரும் மோசடி இடம்பெற்றுள்ளது. இதனால் 2010 ஆம் ஆண்டில் மாநகர சபைக்கு 50 லட்சத்து 09 ஆயிரத்து 833 ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளது.

இந்த ஊழல் தொடர்பாக உயர் மட்ட விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

இந்த மோசடி தொடர்பாக யாழ்.மாநகர முதல்வருக்கும் ஆணையாளருக்கும் விளக்கம் கேட்டு 13.10.2010 ஆம் திகதி என்என்/ கேஎல்/மாநச /2010/ 06 இலக்கம் இடப்பட்டு அனுப்பப்பட்டு கணக்காய்வாளர் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட கடிதத்துக்கு இன்று வரை மாநகர சபையிடம் இருந்து எந்தவித மான பதிலும் கிடைக்கவில்லை என கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் யாழ்.கிளையின் உயர் அதிகாரி ஒருவர் கூறினார்.

கணக்காய்வாளர் திணைக்களத்தின் கேள்விகளுக்கு விளக்கம் அளிக்கமுடியாமல் தடுமாறும் மாநகர முதல்வர், தனது அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி மோசடியைக் கண்டுபிடித்து வெளிப்படுத்திய அதிகாரிகளை இடமாற்றம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

மாநகர சபை எல்லைக்குள் நல்லூர் கோயில் பின் பக்கவீதியில் 14 விளம்பரப் பதாகைகள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கின்றன.

அவற்றுள் 5 இற்கு மட்டுமே மாநகரசபைக்கு கட்டணமாக 27லட்சத்து 83 ஆயிரத்து233 ரூபா அறவிடப்பட்டுள்ளது.

ஒன்பது பதாகைகள் எந்த விதமான கட்டணமோ அனுமதியோ இன்றிக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இதனால் மாநகர சபைக்குவர வேண்டிய50 லட்சத்து 09ஆயிரத்து 833 ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது.

மாநகர சபையின் அங்கீகாரம் இன்றி விளம்பரப் பதாகைகளுக்கான கட்டணம் இரண்டு மடங்காக அறவிடப்பட்டுள்ளதுடன் நில வாடகை சதுர அடி ஒன்றுக்கு 200 ரூபாவும் அறவிடப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டில் ஒரு சதுர அடிக்கு 25 ரூபா மட்டுமே அறவிடப்பட்டுள்ளது. கட்டணஅதிகரிப்புத் தொடர்பாக பகிரங்க அறிவிப்போ அன்றி அரச வர்த்தமானி அறிவித்தலோ விடப்படவில்லை.

வழமையாக விளம்பரப் பதாகைகளுக்கான விண்ணப்பப் படிவத்துடன் விளம்பர மாதிரி விளக்கங்கள் எதுவும் இணைக்கப்பட வேண்டும் ஆனால் அப்படி எதுவும் இணைக்கப்படவில்லை.

அங்கீகாரம் இன்றிக் காட்சிப் படுத்தப்பட்டுள்ள பதாகைகளில் தனிப்பட்ட தொலைபேசி இலக்கம் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது.

மாநகர சபையின் வருமான மேற்பார்வை அதிகாரிகளாக ஏழு உயர் அதிகாரிகள் இருக்கும் போது ஒரே ஒரு குறிப்பிட்ட அதிகாரி மட்டுமே அனுமதி வழங்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார். இதில் பெரிய சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

விளம்பரக் கட்டண அறவீட்டுப் பிரிவின் பொறுப்பதிகாரி கணக்கறிக்கையில் கையொப்பமிடவில்லை.

இவற்றுக்கு உடனடியாக விளக்கம் அளிக்கும் படியும் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக பதில் அளிக்கும்படியும் எழுதிய கடிதத்துக்கு எட்டு மாதங்களாகியும் முதல்வரிடமிருந்து எந்தவிதமான பதிலும் கிடைக்கப்பெறவில்லை. இதனால் உயர்மட்ட விசாரணை முடுக்கி விடப்பட்டுள்ளது. (த-02)

## ஓட்டோ தடம் புரண்டதில் நகரில் 6 பேர் காயம்

யாழ்ப்பாணம், மே 25

ஓட்டோ ஒன்று தடம் புரண்டு சரிந்து விழுந்ததனால் அதில் பயணம் செய்த 5 பேர் உட்பட குறித்த வீதி வழியே சென்ற ஒருவருமாக 6 பேர் காயமடைந்தனர்.

அவர்களில் இருவர் படுகாயமடைந்ததோடு ஏனையவர்கள் சாதாரண காயங்களுக்குள்ளாகி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகின்றனர்.

இந்தச் சம்பவம் யாழ்.ஆஸ்பத்திரி வீதி-வேம்படி வீதிச் சந்தியில் நேற்று முன்தினம் பி.ப.4.30 மணியளவில் இடம் பெற்றது. இந்தச் சம்பவத்தில் கல்வியங்காட்டைச் சேர்ந்த எஸ்.ஞானரூபன் (வயது-20) மற்றும் காலியைச் சேர்ந்த அஷேத் (வயது -19) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

வீதியைக் கடக்க முற்பட்ட மோட்டார் சைக்கிள் மீது ஓட்டோ மோதமுற்பட்ட வேளை அதனைத் தவிர்ப்பதற்காக பக்க வாட்டுக்குத் திரும்பியபோது இந்த விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)

## மலரும் மனிதம்...



*சுகமான வாழ்வு:* மானிப்பாய் வட்ட லயன்ஸ் கழக முன்னாள் தலைவரும், யாழ். போதனா வைத்தியசாலை முன்னாள் பணிப்பாளருமான செல்வி நவமலர் கனகரத்தினத்தின் மூன்றாவது சிரார்த்த தினத்தையொட்டி போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி டாக்டர் பவானி பசுபதிராஜா நோயாளி ஒருவருக்குச் சத்துணவு வழங்குகிறார். (த-236)

## கோப்பாய் பிரதேசத்துக்கு குழாய் மூலம் குடிதண்ணீர்

### பொக்கணையில் இருந்து வழங்கப்படும்

யாழ்ப்பாணம் மே 25

கோப்பாய்ப் பிரதேசத்துக்கு நிலத்தடி குழாய் மூலம் குடிதண்ணீரை வழங்குவதற்குத் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை துரித நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

'யுனிசெப் ' நிறுவனத்தின் நிதி உதவியுடன் இந்தக் குடிதண்ணீர் விநியோகத் திட்டம் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளது.

பொக்கணை நன்னீர்க் கிணற்றில் இருந்து குழாய் மூலம் இந்தக் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

பலாலி வீதி - கோண்டாவில் வீதியூடாக இருபாலை மற்றும் கோப்பாய்ப் பகுதி மக்களுக்கு இந்தக் குடிதண்ணீர் வழங்கப்படும்.

இந்தக் குடிதண்ணீர் வழங்கல் மூலம் சுமார் 4 ஆயிரம் குடும்பங்கள் நன்மையடைவார்கள் என்று சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-26)

# வலி. தென்மேற்கு விவசாயிகளின் பாவனைக்கு மூன்று டிராக்டர்கள்

யாழ்ப்பாணம் மே 25

வலி.தென்மேற்கு கமநல கேந்திர நிலையத்தில் உள்ள மூன்று டிராக்டர்களை விவசாயிகள் முழுமையாகப் பயன்படுத்த முடியும். விவசாயிகள் தமது நிலத்தைப் பிளவு போடுதல், உழுது மறுத்தல், நிலத்தைக் கிளறிப் பண்படுத்தல் ஆகிய மூன்று தேவைகளுக்கும் மூன்று விதமான டிராக்டர்கள் உள்ளன.

இவ்வாறு சண்டிலிப்பாய் கமநலகேந்திர நிலைய பெரும்பாக அலுவலர் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:

இந்திய அரசின் உதவித்திட்டத்தின் கீழ் கமநல கேந்திர நிலையத்துக்கு வழங்கப்பட்ட உழவு இயந்திரங்களில் மூன்று உழவு இயந்திரங்கள் எமக்குக் கிடைத்துள்ளன.

விவசாயிகள் உடன் பதிவு செய்து பணத்தைச் செலுத்துவதன் மூலம் அவற்றைப் பயன்படுத்தலாம் .

உடன் பணம் செலுத்த முடியாத விவசாயிகள் விவசாய சம்மேளனத் தலைவர் அல்லது செயலாளரின் சிபாரிசுடன் விண்ணப்பிக்கலாம் - என்றார் அவர்.

இதேவேளை - டிராக்டர் சாரதிகளை அமைய அடிப்படையில் நியமிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

ஒவ்வொரு கமநல கேந்திர நிலையங்களுக்கும் 5 டிராக்டர்கள் இலவசமாக வழங்கப்படவுள்ளன எனத் தெரியவருகிறது. (த-302)

## போக்குவரத்து பொலிஸ் சோதனை தீவிரம்

யாழ்ப்பாணம், மே 25

குடாநாட்டின் பல பகுதிகளிலும் கடந்த சில தினங்களாகப் போக்குவரத்துப் பொலிஸார் தமது சோதனை நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் சுற்றித் திரியும் இவர்கள், வீதிகளில் பயணம் செய்யும் வாகனங்களைத் திடீர் திடீர் என வழிமறித்து சாரதி அனுமதிப்பத்திரம், காப்புறுதிப் பத்திரம் மற்றும் வாகனச் சான்றிதழ் ஆகியவற்றைச் சோதிக்கின்றனர். (த-26)

# பதிவற்ற தனியார் வைத்தியசாலைகளுக்கு எதிராக விரைவில் உரிய நடவடிக்கை

யாழ்ப்பாணம், மே 25

யாழ் மாவட்டத்தில் பதிவு செய்யப்படாது இயங்கிவரும் தனியார் வைத்திய நிலையங்களுக்கு எதிராக விரைவில் நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாக யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த நடவடிக்கையின் முன்னேற்பாடாகத் தனியார் வைத்தியசாலைகளின் உரிமையாளர்களை அழைத்துப் பதிவு விடயம் தொடர்பாக வலியுறுத்தவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள பதிவு செய்யப்படாத தனியார் வைத்தியசாலைகளுக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனக் கேட்டபோதே அவர் இத்தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பதிவு செய்யப்படாமல் தனியார் வைத்தியசாலைகள் எவையும் இயங்க முடியாது.

யாழ் மாவட்த்திலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு ரீதியாக உள்ள தனியார் வைத்தியசாலைகளின் விவரங்களை தற்போது சேகரித்து வருகிறோம். அவற்றில் பதிவு செய்யப்படாது இயங்கி வரும் வைத்தியசாலைகள் குறித்து அதிக கவனம் செலுத்தவுள்ளோம்.

மாவட்டத்தில் விடுதி வசதிகள் உடைய ஆறு தனியார் வைத்தியசாலைகளும், விடுதிவசதியற்ற வெளிநோயாளர் பிரிவிலுள்ள 2 வைத்தியசாலைகளும் பகுதிநேரமாக இயங்கும் வெளிநோயாளர் பிரிவுள்ள 15 மருந்தகங்களும், பற்சிகிச்சை கிளினிக் ஒன்றும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடம் மற்றும் இந்த வருடத்தில் பதிவு செய்யப்பட்டவையும் பதிவை வருடா, வருடம் புதுப்பித்தவையும் இதில் அடங்கும்.

இவை தவிர பதிவு செய்யப்படாத அல்லது பதிவை புதுப்பிக்காத நிலையில் வைத்தியசாலைகள் பல இயங்கிவருகின்றன.

அவற்றுக்கெதிராக நடவடிக்கை எடுக்கவுள்ளோம். அதற்கு முன் ஏற்பாடாக தனியார் வைத்தியசாலை உரிமையாளர்கள் அனைவரையும் அழைத்து அறிவுறுத்தவுள்ளோம்.

விடுதியுள்ள தனியார் வைத்திய சாலைகள் நடத்துவதற்கு சில தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். குறிப்பாக கிருமி தொற்று கட்டுப்பாடு, கழிவு முகாமைத்துவம், சத்திரசிகிச்சைக்கான அடிப்படை வசதிகள் ஆகியவற்றை அவை கொண்டிருக்க வேண்டும். அதேபோல ஏனைய தனியார் வைத்தியசாலைகளும் வைத்திய சேவைகளுக்கான அடிப்படைகளைக் கொண்டிருக்க வேண்டும் என்றார். (த-14-04)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
25 மே 2011 புதன்கிழமை

# அக்கராயன் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர் பற்றாக்குறை நீங்குமா?

கிளிநொச்சி கல்வி வலயத்தில், கரைச்சிக் கல்விக் கோட்டத்தில் மிகமுக்கியமான பாடசாலையாக அக்கராயன் மகாவித்தியாலயம் விளங்குகிறது.

கிளிநொச்சி மேற்கில் கிளிநொச்சியில் இருந்து 19 கிலோமீற்றர் தூரத்தில் இந்தப் பாடசாலை அமைந்துள்ளது. முன்னர் அக்கராயன் கொத்தணிப் பாடசாலைகளின் தலைமைப் பாடசாலையாக இந்தப் பாடசாலை இயங்கியது.

1996 ஆம் ஆண்டு கிளிநொச்சி இடம்பெயர்வு ஏற்பட்ட போது கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனை இந்தப் பாடசாலையின் ஒரு பகுதியில் இயங்கியது.

1970 களில் தென்னிலங்கையில் ஜே.வி.பியின் வெற்றி பெறாத புரட்சி ஏற்பட்டு பெருமளவு சிங்கள இளைஞர்களின் புனர்வாழ்வு மையமாக அக்கராயன் மகாவித்தியாலயக் கட்டடங்கள் பயன் படுத்தப்பட்டன. ஒருபடைத்தளம் இருந்ததற்கான சுவடுகள் தற்போதும் பாடசாலைச் சூழலில் காணப்படுகின்றன.

1972 ஆண்டு முதல் இந்தப் பாடசாலை இயங்கத் தொடங்கியுள்ளதாகப் பாடசாலையின் குறிப்புகள் தெரிவிக்கின்றன.

அக்கராயன் பிரதேசத்தில் உயர்தர வகுப்புக்களைக் கொண்ட ஒரேயொரு பாடசாலையாக இந்தப் பாடசாலை விளங்குகின்றது.

இந்தப் பாடசாலையை நம்பி வன்னேரிக்குளம், ஆனைவிழுந்தான் குளம், ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம், முட்கொம்பன், கோணாவில், யூனியன்குளம், அமைதிபுரம், ஆரோக்கியபுரம், அம்பலபெருமாள்குளம், கோட்டை கட்டியகுளம் ஆகிய பகுதி மாணவர்கள் உள்ளனர்.

இந்நிலையில், இந்தப் பாடசாலையில் நிலவும் ஆசிரியர்கள் பற்றாக்குறையால் கற்றல் செயற்பாடு முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தற்போது தரம் 6 முதல் தரம் 13 வரையுள்ள வகுப்புக்களில் 719 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர்.

குறிப்பாக விஞ்ஞானம், ஆங்கிலம், விவசாயம், நாடகமும் அரங்கியலும், சித்திரம், நடனம், தமிழ் போன்ற பாடங்களுக்கு ஆசிரியர்கள் இல்லாத நிலை காணப்படுகிறது.

உள்ளக இடமாற்றம், மாவட்ட இடமாற்றம், பொது இடமாற்றம் என ஆசிரியர்கள் இடமாற்றங்கள் நிகழும் போதெல்லாம் மாணவர்களும் பெற்றோர்களும் பாடசாலைச் சமூகமும் இடமாற்றப் பட்டியலைப் பார்த்து ஏமாற்றமும் ஏக்கமும் அடைகின்றனர். ஆனால், பாடசாலையில் பணியில் உள்ள ஆசிரியர்கள் சிலருக்கு இடமாற்றம் வழங்கும் நிகழ்வு தொடர்கின்றது.

பாடசாலையில் ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பதைக் கடிதம் மூலமாகத் தெரியப்படுத்தும் போது பதிலளிக்க முடியாத நிலையில் பாடசாலை ஆசிரியர்கள் உள்ளார்.

கண்ணகைபுரம், ஆனைவிழுந்தான்குளம் பாடசாலைகளில் தரம் 6 இற்கு மேல் கற்க முடியாத நிலையில் அக்கராயன் மகாவித்தியாலத்தை நம்பி மாணவர்கள் வரும் நிலையில் பாடசாலையில் ஆசிரியர்கள் இல்லையென்றால் நிலைமை எப்படியிருக்கும் என்பதை கல்வி உயர் அதிகாரிகள் புரித்துகொள்ள வேண்டும்.

பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக மூன்று மாதங்களுக்கு முன்பு குழுமேற்பார்வை மேற்கொண்ட போது பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவர் உள்ளூராட்சித் தேர்தல் முடிந்தவுடன் ஆசிரியர் வெற்றிடம் நிரப்பப்படும் என்று பெற்றோர்களுடனான சந்திப்பில் உறுதியளித்திருந்தார். தேர்தல் வரும் வரை மாணவர்கள் கற்காமல் இருப்பதா என்று பெற்றோர்கள் கவலை கொண்டுள்ளனர்.

ஆசிரியர்கள் நெருக்கடி

> **கிளிநொச்சி கல்வி வலயத்தில், கரைச்சிக் கல்விக் கோட்டத்தில் மிக முக்கியமான பாடசாலையாக அக்கராயன் மகாவித்தியாலயம் விளங்குகிறது. இந்தப் பாடசாலை முன்னர் கொத்தணிப் பாடசாலையாக இருந்தது.**

என்பது பொதுவான பிரச்சினையாக உள்ளதென்று கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா நிகழ்வொன்றில் தெரிவித்துள்ளார். பாடசாலைகளுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் நெருக்கடிகளைக் காரணம் கூறி பின்தங்கிய பாடசாலைக்குச் செல்வதில்லை என்றும் கவலைத் தெரிவித்தார்.

சங்குப்பிடி பாதை திறந்த பின்னர் பூநகரி பாடசாலைகளில் அதிக ஆசிரியர்கள் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி இடம்பெயர்வு ஏற்பட்ட போது கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளின் இயக்கத்துக்கும் வலயக் கல்விப் பணிமனையின் செயற்பாட்டுக்கும் வழிசமைத்த அக்கராயன் மகாவித்தியாலயம் இன்று ஆசிரியர் நெருக்கடியால் திணறி நிற்கின்றது.

பாடசாலையில் நிலவும் ஆசிரியர்கள் நெருக்கடி தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் ஆகியோரிடமும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள் முறைப்பாடு செய்தும் பயன் கிடைக்கவில்லை.

கிளிநொச்சி நகரப் பாடசாலைகளில் ஆசிரியர்கள் நிரம்பி வழியும் நிலையில் அக்கராயன் மகாவித்தியாலயத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கு வலயக் கல்வியப் பணிமனை ஆக்கபூர்வமான நடவடிக்கையை உடனடியாக எடுக்க வேண்டும் என்பதே பெற்றோர்களின் வேண்டுகையாக உள்ளது.

**கி.பிருதிவி**

அக்கராயன் மகாவித்தியாலயத்தின் ஆசிரியர்கள் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதன் மூலம் வலயக்கல்விப் பணிமனை இயங்குவதற்குப் போர்க் காலத்தில் உதவிய பாடசாலையொன்றுக்கு வலயக் கல்விப்பணிமனை செய்யும் பேருதவியாக இருக்கும்.


## மரண அறிவித்தல்

## சின்னத்தம்பி சரவணமுத்து



விடத்தற்பளையைப் பிறப்பிடமாகவும் உசனை வதிவிடமாகவும் அமெரிக்காவில் வாழ்ந்துவந்தவரும் உசன் இராமநாதன் மகா வித்தியாலய ஓய்வு பெற்ற உப அதிபருமான பண்டிதர், வித்துவான், சைவப் புலவர் சின்னத்தம்பி சரவணமுத்து மே மாதம் 21 ஆம் திகதி சனிக்கிழமை கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வாலைப்பிள்ளை தம்பதியரின் ஏக புத்திரரும் காலஞ்சென்றவர்களான தம்பையா - சின்னப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் உசன் சின்னதங்கத்தின் ஆருயிர்க் கணவரும் சறோஜினிதேவி (Pharmacist - கனடா), DR. கணேசானந்தம் (லண்டன்), சுசிலாதேவி (Civil Engineer, Prime Engineering Ltd. -அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இராமநாதன் (Foreign Ministry - Sri lanka), DR. தமயந்தி (லண்டன்), சுகுணேஸ்வரன் (Civil Engineer , Prime Engineering Ltd. - அமெரிக்கா) ஆகியோரின் பரிவான மாமனும் சஞ்ஜீவ், கஜாளினி, றஜீவ், ஜிகான், டிலான், ஆர்த்தி, அர்வின் ஆகியோரின் பாசமிகு பாட்டனும் வின் மகாலிங்கம் (கனடா) அவர்களின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மே மாதம் 26 ஆம் திகதி வியாழக் கிழமையும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமையும் மாலை 5 மணி முதல் 9 மணி வரை Warden/ Sheppard சந்திக்கு அருகில், 3280 Sheppard Ave. East. Scarborough இல் அமைந்துள்ள Highland Funeral Home இல் பார்வைக்கு வைக்கப்பட்டு 28 ஆம் திகதி சனிக் கிழமை காலை 9 மணிக்கு அதே மண்டபத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று நண்பகல் 12 மணிக்கு Kingston/ Woodbine சந்திக்கு அருகில் 256 Kingston Rd. இல் அமைந்துள்ள St. Johns Norway மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகின்றனர்.

தொடர்புகளுக்கு: 416 -299 -6763 - சறோஜினி இராமநாதன் (கனடா),
1 -614- 582- 5008 - சுசீலாதேவி சுகுணேஸ்வரன் (அமெரிக்கா),
44-1-792-895142 - கணேசானந்தம் தமயந்தி (லண்டன்).

## German Institute

German, Swiss மொழிகள் தமிழ் மொழி பெயர்ப்புடன் நடைபெறுகின்றன. German Embassy யால் கேட்கப்படும் Al Certificate ஏற்றவாறு வெளிமாவட்டத்திலிருந்து வருவோர்க்குத் தங்குமிட வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். 10, Palaly Road, Jaffna.
T.P: 0771604823
(4530)

## பரிசுத்த ஆவிக்குச் செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நான் அடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே! உனது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக, உமது அருட்கொடைகளின் மூலம் என்னுள்ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரை நான் மன்னிக்க அருள் புரிபவரே! என் வாழ்வின் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்றதுணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்திற்கும் நன்றி கூறுகின்றேன். என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் எக்காரணம் கொண்டும் உம்மிலிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத்திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும் அனைவரும் என்றென்றும் உமது முடிவில்லா மகிமையில் பங்குபெற வேண்டுகின்றேன்.

(சி/178) அடியாள்.

## விரு காணி விற்பனைக்கு

கைலாசபிள்ளையார் கோயில் சந்திக்கு அருகில் கோயில் வீதி, யாழ்ப்பாணத்தில் 1¾ பரப்புக் காணியில் அமைந்த சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: சி.சி.நாதன்,
16/3, விதானையார் வீதி, சுண்டிக்குழி, யாழ்ப்பாணம். 0776146434

## வீடுகள் விற்பனைக்கு

- யாழ். பல்கலைக்கழக சுற்றாடலில் ஆடியபாதம் வீதிக்கு அருகில் 1½ பரப்புக் காணியில் 4 அறை, சுற்றுமதில் என அனைத்து வசதிகளும் உள்ள வீடு.
- கோண்டாவில் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் 3 பரப்புக் காணியில் தனிக் கிணறுடன், 4 அறை என சகல வசதிகளுடனும் உள்ளவீடு.

தொடர்பு:
0771023585
0775275125
(4539)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



அமரர்
தம்பு சுப்பிரமணியம்
(முன்னாள் Power house Foreman வத்தேகம, மாத்தளை, Ceylon Electricity Board Chavakachcheri. )

அன்னை மடியில்
23★04★1943

ஆண்டவன் அடியில்
04★06★2010

அன்புக்கும், பண்புக்கும், பாசத்துக்கும் எடுத்துக் காட்டாக விளங்கிய எங்கள் அன்பு அப்பாவே! காலம் ஓடிச் சென்றாலும் என்றும் எங்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள் அப்பா! நிலைத்து விட்ட உங்கள் அன்பால் நினைவிழக்க முடியாமல் என்றும் உங்கள் நினைவால் தவிக்கின்றோம் அப்பா நாம்! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நி.முகவரி:A-9 Road, Ariyalai.
த.மு: Navaly South, Manipay.

உங்கள் நினைவால் தவிக்கும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பாசமான உம்குரல் கேட்டு பறந்தது ஓராண்டு



திருமதி இராஜமலர்
எட்வின் யோசவ்

"நான் உங்களைத் திக்கற்றவர்களாக
விட மாட்டேன்
உங்களிடம் திரும்பி வருவேன்"
(யோ: 14:18)

மலர்வு
18 ★ 05 ★ 1946

உதிர்வு
25 ★ 05 ★ 2010

மாதங்கள் பத்து மடி சுமந்து எம்மைப் பெற்ற மம்மி
மண் உலகில் நீங்கள் இல்லை மகிழ்ந்து உறவாட
மண்ணோடு மடிந்து விண்ணோடு சேர்ந்து
இன்றோடு முடிந்தது மம்மி ஓராண்டு - ஆனால்
எமக்கோ அது ஆயிரம் ஆண்டுகள் போலல்லவா!
உங்களின் விசேட வேண்டுதல் தான்... எங்களுக்கு
வீட்டு விசேஷமாக மாறியதோ - மம்மி
மறைவாக இருந்து பார்த்து மகிழ்ந்தீர்களா!
கொஞ்சி வளர்த்த மம்மி உம்மைக் கெஞ்சிக் கேட்கிறோம்
பிஞ்சு நெஞ்சங்களின் பதறல்தான் புரிகிறதா...
கரிசனையான உங்கள் முகங்காணாது
கதறியழும் கணவனின் கண்ணீர் தெரிகிறதா...
கரங்கொடுக்கும் உங்கள் நினைவோடு மம்மி
கடைசி வரை சென்றடைவோம் உம் இலக்கினை மம்மி
விதி வரைந்த பாதையால் சதி செய்த விளையாட்டில்
மடிந்த எம் குலவிளக்கே உங்கள் ஆத்மா
இறைவன் அடிசேர என்றும் இறைஞ்சுகின்றோம்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிற்காக இன்று 25.05.2011 புதன் கிழமை யாழ்.புனித யுவானியார் ஆலயத்திலும், அருள் ஆச்சிரமத்திலும், சில்லாலை கதிரைமாதா ஆலயத்திலும் காலைத்திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

தகவல்:
(சி/576) கணவர், பிள்ளைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்சி வேறுபாடு காட்டாத நகரசபை உறுப்பினர்கள்

மன்னார், மே 25

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலையின் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் விளையாட்டுப் போட்டியில் மன்னார் நகரசபை உறுப்பினர்கள் ஏழுபேரும் கட்சி வேறுபாடுகளின்றிக் கலந்து கொண்டதாகத் தெரிய வருகின்றது.



இந்த விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியவில் பாடசாலை மைதானத்தில் ஆரம்பமானது. இந்த நிகழ்வுக்குப் பாடசாலை அதிபர் தலைமை தாங்கினார்.

மன்னார் நகரசபைத் தலைவர் சந்தானபிள்ளை ஞானப்பிரகாசம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். கௌரவ விருந்தினர்களாக மன்னார் நகரசபையின் உப தலைவர் ஜேம்ஸ் ஜேசுதாஸ், நெஸ்லே லங்கா விற்பனை நிறைவேற்றுப் பணிப்பாளர் ஏ.நிர்மலராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிறப்பு விருந்தினர்களாக மன்னார் நகரசபையின் ஏனைய உறுப்பினர்களான இரத்தின சிங்கம். குமரேஸ், எ.மொரினஸ் பெரேரா, நிலாமுதின் நகுசீன், செல்வராஜா, செல்வகுமார் (டிலான்), பிருந்தாவன நாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மன்னார் நகர சபையில் உள்ள ஏழு உறுப்பினர்களும் ஒற்றுமையாகக் கட்சி வேறுபாடின்றி இந்த நிகழ்வில் கலந்து கொண்டமை பொது மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மேற்படி நிகழ்வுக்கு நெஸ்லே லங்கா முழு அனுசரணையும் வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-601)

# சமாதான வாரத்தையொட்டி வவுனியாவில் கருத்தமர்வு

வண்ணை, மே 25

சர்வதேச சமாதான வாரத்தை முன்னெடுக்கும் வகையில் யாழ். சமாதானத்துக்கும், நல்லிணக்கத்துக்குமான நிலையம் (சீ.பீ.ஆர்) வவுனியா கிளையூடாக பாடசாலை மாணவ, மாணவிகள் மத்தியில் கருத்தமர்வுகளை நடத்தவுள்ளது.

நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை ஒரே நேரத்தில் இரு வேறு கல்லூரிகளில் மாணவர்களுக்கான சமாதானக் கல்வி மற்றும் வன்முறையற்ற தொடர்பாடல் சம்பந்தமான விழிப்புணர்வுகள் கொண்டு செல்லப்படுமென ஒருங்கிணைப்பாளர் எ.சுதாகரன் கூறினார்.

வவுனியா நெலுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயத்தில் தரம் 5, 6, 7, 8 மாணவர்களுக்கும் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் தரம் 9, 10, 11, 12, 13 மாணவர்களுக்கும் மேற்படி கருத்தமர்வுகள் நடைபெறும்.

இந்தக் கருத்தமர்வுகளில் வவுனியா நெலுக்குளம் கலைமகள் வித்தியாலயம், முஸ்லிம் மகாவித்தியாலயம் என்பவற்றுடன் வவுனியா விபுலானந்தக் கல்லூரி, அறபா வித்தியாலயம் மற்றும் இராஜேந்திரன் குளம் அ.த.க.பாடசாலை, சித்தி விநாயகர் வித்தியாலயம் ஆகியன கலந்துகொள்ளும். (க-160)

# பேருந்து தரிப்பிட வசதிகள் இல்லை

முல்லைத்தீவு, மே 25

முல்லைத்தீவு மாவட்டத்தில் மக்கள் மீள்குடியமர்ந்த பகுதிகளில் இன்னமும் பேருந்து தரிப்பிட வசதிகள் செய்யப்படாமையால் பயணிகள் சிரமத்துக்கு ஆளாகி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் இந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருந்த பேருந்து தரிப்பிடங்கள் யுத்தத்தின் காரணமாக அழிவடைந்து அரைகுறை நிலையில் காணப்படுகின்றன.

ஆனால் இவற்றைப் புனரமைப்பதற்கோ அல்லது இவற்றுக்குப் பதிலாக புதிய தரிப்பிடங்களை அமைப்பதற்கோ இதுவரை எவரும் முன்வரவில்லை. இதனால் இவை தொடர்ந்தும் சீரழிந்த நிலையிலேயே காணப்படுகின்றன.

பயணிகள் வெயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் தமது பயணத்தை மேற்கொள்கின்றனர்.

இது தொடர்பாக ஏற்கனவே செய்திகள் வெளிவந்துள்ள போதிலும் இவை சீர்செய்யப்படாமல் இருப்பதுடன் பயணிகளின் துன்பங்களும் தொடர்வதாகத் தெரிய வருகின்றது. (க-500)

# அஞ்சல் அலுவலக திறப்பு விழா இன்று

மன்னார், மே 25

நெடுங்கேணியில் அஞ்சல் அலுவலகத்தின் புதிய கட்டடம் இன்று திறந்து வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டம் நெடுங்கேணியில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் ஊடாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அஞ்சல் அலுவலகத்தின் புதிய கட்டடமே இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்குத் திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் கைத்தொழில் மற்றும் வர்த்தக விவகார அமைச்சர் றிசாட் பதியுதீன், அஞ்சல் சேவைகள் அமைச்சர் ஜீவன் குமாரதுங்க ஆகியோர் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அஞ்சல் அலுவலகக் கட்டடத்தைத் திறந்து வைப்பார். (க-601)

# பெரு விளையாட்டுப் போட்டியில் வென்ற அணிகளுக்கு பாராட்டு

மன்னார், மே 25

வடமாகாண பெரு விளையாட்டுப் போட்டியில் ஆண், பெண் இருபாலாருக்குமான மேசைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் ஆண்கள் பிரிவில் மன்னார் மாவட்ட அணியும், பெண்கள் பிரிவில் யாழ். மாவட்ட அணியும் வெற்றி பெற்று தேசிய போட்டிக்குத் தெரிவாகியுள்ளமையினையிட்டு தான் பெருமிதம் அடைவதாகவும் இந்த அணிகளுக்கு பாராட்டுக்களை தெரிவித்துக் கொள்வதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் திறமையுடைய பல விளையாட்டு வீரர்கள் உள்ளனர். கடந்த யுத்த காலத்தில் ஏற்பட்டிருந்த அசாதாரண சூழ்நிலை காரணமாக அவர்களுடைய திறமைகள் மாவட்டத்தினுள் மட்டுமே முடக்கிவைக்கப்பட்டிருந்த நிலை காணப்பட்டது.

தற்போது சகல இடங்களுக்கும் சென்று வரக்கூடிய நிலை உருவாகியுள்ளது.இதன்பொருட்டு எமது வீரர்கள் தங்களின் சாதனைகளையும் வெற்றிகளையும் வேறு மாவட்டத்தில் நிகழ்த்தி வருகின்றனர்.

இந்த நிலையில் வடமாகாண பெரு விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்ற மன்னார் அணிக்கு மாவட்ட மக்கள் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் மேலும் தெரிவித்தார். (க-601)

ஏனிந்த அவலம்...?



ஒழுங்கமைப்பில் குறைபாடு: முல்லைத்தீவு கரைதுறைபற்றுக் கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டியின்போது கொட்டகை வசதிகள் எதுவும் செய்து கொடுக்கப்படாமையால் மாணவர்களும், ஆசிரியர்களும் பற்றைகளுக்கு மத்தியில் மரநிழல்களின் கீழ் அமர்ந்திருக்கின்றனர். (20)

# திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தில் கணினி அறை திறந்து வைக்கப்பட்டது

அக்கராயன், மே 25

திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்தின் கணினி அறை கடந்த 16 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடசாலைக்கென ஐந்து கணினிகளும் இரண்டு அச்சுப் பதிவு இயந்திரங்களும் கல்வி அமைச்சால் கடந்த 14 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்தது. மாணவர்களுக்கு உடனடியாகப் பயன்படும் நோக்கில் இவை 16 ஆம் திகதியே பாடசாலையில் பொருத்தப்பட்டன.

இந்தக் கணினி அறையைப் பாடசாலையின் பிரதி அதிபர் சோ. நிரஞ்சனா திறந்து வைக்க பாடசாலை அதிபர் ஆ. சூசைநாதர் கணினியை இயக்கி வைத்தார். தொடர்ந்து ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் கணினிப் பயிற்சி வழங்கப்பட்டது.

இந்தப் பாடசாலையின் அபிவிருத்திக்கென மீள்குடியேற்ற அமைச்சால் 25 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது.

மேலும் கடந்த மாதம் 22 ஆம் திகதி பாடசாலையில் இரண்டு மாடிக் கட்டடமொன்றுக்கான அடிக்கல்லை நடுவதற்கென வருகைதந்த அமைச்சர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தப் பாடசாலைக்குத் தாம் தொடர்ந்தும் உதவுவதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தகவல்களைப் பாடசாலையின் அதிபர் ஆ.சூசைநாதர் தெரிவித்தார். (க-410)

# இராணுவத்தினருக்கு கௌரவிப்பு

முல்லைத்தீவு, மே 25

யுத்தத்தில் வெற்றியைப் பெற்றுக் கொடுத்த இராணுவத்தினரைக் கௌரவிக்கும் நிகழ்வு முல்லை மாவட்டம் புதுக்குடியிருப்புப் பகுதி மந்துவிலில் நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். முன்னதாக வடமாகாண ஆளுநர் உள்ளிட்ட குழுவினர் பாண்ட் வாத்திய இசையுடன் படையினர் அணி வகுத்து நிற்க மேடைக்கு அழைத்து வரப்பட்டனர்.

நிகழ்வின் மங்கல விளக்கினை ஆளுநர் ஏற்றிவைக்க வரவேற்புரையினை நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் நிகழ்த்தினார். தொடர்ந்து வவுனியா பாடசாலை மாணவ, மாணவிகளின் வரவேற்பு நடனத்தைத் தொடர்ந்து மாணவர்களால் இராணுவத்தினருக்குச் சின்னங்கள் சூட்டப்பட்டன.

இதனைத் தொடர்ந்து இராணுவத்தினரைக் கௌரவித்து வடமாகாண ஆளுநரால் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. பிரதம உரையினைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (க-500)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழுதடைந்தது 'அம்புலன்ஸ்' நாவிதன்வெளி நோயாளிகள் சிரமம்

## நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

மட்டக்களப்பு, மே 25

நாவிதன்வெளி பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மத்திய முகாம் மாவட்ட வைத்தியசாலையிலுள்ள 'அம்புலன்ஸ்' வண்டி அவசர சிகிச்சைகளுக்கு நோயாளிகளை ஏற்றிச் செல்ல முடியாதளவுக்குச் பழுதடைந்திருப்பதாக அந்தப் பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மூவின மக்களும் செறிந்து வாழும் இந்தப் பிரதேசத்திலுள்ள நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்காக மத்திய முகாம் வைத்தியாசலைக்குச் சென்று அவசர சிகிச்சையின்பொருட்டு கல்முனை ஆதார வைத்தியசாலை மற்றும் அம்பாறை போதனா வைத்தியசாலை என்பவற்றுக்கு ஏற்றிச் செல்வதற்கு 'அம்புலன்ஸ்' வண்டி தர மின்றிக் காணப்படுவதாக பிரதேச மக்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

குறிப்பாக நோயாளிகளை ஏற்றிவிட்டு நோயாளிகளின் உறவினர்களும், பொது மக்களும் இதனைத் தள்ளி இயங்க வைப்பதாகவும் 'அம்புலன்ஸ்' வண்டியின் அடிப்பாகம் துருப்பிடித்து உடைந்து விழும் நிலையிலுள்ளதாகவும் பொதுமக்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்த வைத்தியசாலைக்கு நாளாந்தம் நாவின்வெளி பிரதேச செயலகப்பிரிவு, உகணைப் பிரதேச செயலகப் பிரிவு, வெல்லாவெளிப் பிரதேச செயலகப் பிரிவு ஆகியவற்றில் வசிக்கும் மக்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆனால் இதுவரையும் அவசர சிகிச்சைக்கென வேறு வைத்திய சாலைகளுக்கு நோயாளிகளைக் கொண்டு செல்வதற்கு புதிய 'அம்புலன்ஸ்' வண்டி வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

பின்தங்கிய பிரதேச மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு மத்திய முகாம் மாவட்ட வைத்தியசாலைக்கு புதிய 'அம்புலன்ஸ்' வண்டியினை வழங்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கையும் விடுத்துள்ளனர். (ச)

# காத்தான்குடிப் பிரதேசத்தில் தொடர்பு சாதன மத்திய நிலையம்

தொடர்புசாதன மத்திய நிலையமொன்று காத்தான் குடியில் திறக்கப்படவுள்ளது. இதன் மூலம் இளைஞர், யுவதிகள், மாணவர்கள் ஆகியோருடைய கல்வி, கலை, இலக்கிய, ஊடக மற்றும் சமூகவியல் துறைகளில் அபிவிருத்தியை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையத்துக்கென காத்தான்குடி நகர சபையின் பழைய கட்டடம் தெரிவு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. மத்திய நிலையத்தின் பணிகளை ஆரம்பிப்பதற்காக சிறுவர் அபிவிருத்தி மற்றும் மகளிர் விவகார பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா காத்தான் குடிக்கு அடுத்த வாரம் செல்லவுள்ளார்.

புன்னகை எனும் பெயரில் இயங்கவுள்ள மத்திய நிலையத்தில் கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புகள், கண்காட்சிகள், முக்கிய பிரமுகர்களுடனான சந்திப்புகள் என்பவற்றை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ள அதேவேளை நூதனசாலை, ஆவணக்காப்பகம், தகவல் மையம் மற்றும் வெளியீட்டகம் என்பவற்றை அமைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளதாக காத்தான்குடி நகரசபையின் பிரதி தவிசாளர் எம்.ஐ.எம். ஜெஸீம் தெரிவித்தார். (ச)

# விதை நெல் சுத்திகரிப்பு நிலையம் பொத்துவிலில் திறந்து வைப்பு

அம்பாறை, மே 25

பொத்துவில் கமநல சேவை மத்திய நிலையத்தின் நிர்வாகத்தின்கீழ் பொத்துவில் விதை நெல் சுத்திகரிப்பு நிலையம் கடந்த வியாழக்கிழமை 32 விவசாய அமைப்புக்களின் ஏற்பாட்டில் திறந்து வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒரு கோடி இருபத்தி இரண்டு லட்சம் ரூபா நிதியில் ஐ.ஓ.எம். அரசசார்பற்ற நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்ட இந்தக் கட்டடத்தை பொத்துவில் பிரதேச செயலாளர் யு.எல். நியாஸ் மற்றும் உதவிச் செயலாளர் திருமதி மாலினி, பிரதேசசபை பிரதி தவிசாளர் ஏ.எம். தாஜுதீன், கமநல சேவைகள் அம்பாறை மாவட்ட உதவிப் பணிப்பாளர் பி.எம். என். தயாரத்தின மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஐ.ஓ.எம்.நிறுவனத்தைச் சேர்ந்த முன்னேற்ற திட்டமிடல் அதிகாரிகள்,கமநல சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டு விதை நெல் சுத்திகரிப்பு இயந்திரத்தை இயக்கி வைத்தனர்.

இந்த நிலையம் பொத்துவில், பாணமை, கோமாரி விவசாயிகளுக்கு பயனுடையதாக அமையும் என தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# கிழக்கில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

## லண்டன் சைவத் திருக்கோயில் ஒன்றியம் அன்பளிப்பு

மட்டக்களப்பு, மே 25

கிழக்கு மாகாணத்தில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்குவதற்காக லண்டன் சைவத் திருக்கோயில் ஒன்றியம் தென்கிழக்கு லண்டன் தமிழர் நலன் புரி ஒன்றியத்தினூடாக ஒன்பது லட்சத்து அறுபதாயிரம் ரூபாவை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையினருக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

இந்த நிதியின் மூலம் பாதிக்கப்பட்ட கிராமங்களில் உள்ள வறிய மாணவர்களுக்கு கட்டம் கட்டமாக உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட உள்ளதாகவும் இதன் முதல் கட்டமாக வாகரை பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கதிரவெளி திலகவதியார் மகளிர் இல்லத்துக்கும் களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள களுதாவளை கணேசா வித்தியாலய மாணவர்களுக்கும் உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக உதவி வழங்கிய புலம்பெயர்ந்து வாழும் லண்டன் அமைப்புக்களுக்கும் ஏற்பாட்டாளர்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையினரும் கிழக்கு வாழ் தமிழ் மக்களும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றனர். (ச)

எம்மிடமிருந்து விரைவாகவும், இலகுவாகவும் அதிக பணம்




அவசரமாகப் பணம் தேவைப்படும் போது கைமாற்றாக பெறுவதற்கு எங்கு செல்வதென சிந்தித்து அலையாமல் உடனடியாக அருகில் உள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைக்கு வாருங்கள். உங்கள் தங்க நகைகளுக்கு குறைந்த வட்டியில் அதிக தொகையை நிறைந்த பாதுகாப்புடன் கொமர்ஷல் வங்கியின் பொன் கடன் சேவை வழங்குகிறது.

பொன் கடன்
COMMERCIAL BANK

+94 112 353 333

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோறளைப்பற்றில் தனியான பிரதேச சபை; உருவாக்கித்தருமாறு மக்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,மே 25

கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட 18 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய கோறளைப்பற்று தெற்கு பிரதேசசபை என்ற தனியான தொரு புதிய பிரதேசசபையை உருவாக்கித் தருமாறு வலியுறுத்தி நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

அந்தப்பகுதி மக்கள் இனங்களுக்கிடையில் ஒற்றுமையைக் காப்போம் என்ற தொனிப்பொருளில் பல வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியவாறு பேரணியில் கலந்துகொண்டனர்.




கோறளைப்பற்று தெற்கு பிரதேச மக்கள், சமூக, பொருளாதார அபிவிருத்தி மன்றம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இந்தப் பேரணியானது முறக்கொட்டாஞ்சேனை முத்துமாரியம்மன் ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி கிரான் சந்தி பிள்ளையார் ஆலயத்தைச் சென்றடைந்தது.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம், மீள்குடியேற்ற பிரதியமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் பொ. இரவீந்திரன், கோறளைப்பற்று பிரதேசசபை தவிசாளர் தா.உதயஜீவதாஸ், பிரதேச செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோரிடம் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது. (ச)

# சப்ரகமுவ அரச ஊழியர்களுக்கு தமிழ்மொழி பயிற்சிச் செயலமர்வு

பதுளை,மே 25

தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சு நாடு முழுவதிலுமுள்ள சிங்கள அரச ஊழியர்களுக்கு தமிழ்மொழிப் பயிற்சியை வழங்கத் திட்டமிட்டுள்ளது.

இதன் முதற்கட்டம் வரக்காப்பொல தோலங்கமுவ மனிதவள அபிவிருத்தி மையத் தில் கடந்த 20 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு பத்து நாள் செயலமர்வாக இடம்பெற்று வருகின்றது.

தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தலைவி சீத்தா விதானச்சி தலைமையில் ஆரம்பமான இந்தச்செயலமர்வில் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள 31 பொலிஸ் நிலையங்கள் மற்றும் கேகாலை மாவட்டத்திலுள்ள 9 பிரதேச செயலகங்கள் ஆகியவற்றின் அதிகாரிகள் கலந்து கொள்கின்றனர்.

இங்கு தமிழ்மொழியில் சரளமாக உரையாடுவதற்கான விசேட பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. தேசிய மொழிப் பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பிரசாந் ஆர்.ஹேரத், செயலமர்வு இணைப்பாளர் கரீமா ஜயவீர, வளவாளர் பாத்திமா பியாஸா ஆகியோர் கலந்துகொள்கின்றனர். (ச)

# கிளிநொச்சிவாசி மாத்தளையில் கைது; ஜனாதிபதியை உளவு பார்க்கச் சென்றாராம்?

மாத்தளை,மே25

ஜனாதிபதி மாத்தளைக்குச் சென்றபோது அங்கு தகவல் சேகரிக்கச் சென்றவர் ஒருவரை சந்தேகத்தின்பேரில் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர் கைதுசெய்துள்ளனர். சந்தேகநபர் விடுதலைப்புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர். இறுதிக்கட்ட யுத்தத்தின்போது இரு கால்களையும் இழந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மாத்தளைக்குச் செல்வதற்கு முதல் நாளான கடந்த 19 ஆம் திகதி மாத்தளைக்கு வந்த இவர் பிச்சைக்காரர் போன்று விகாரை வீதி, வித்தியானந்த பிரிவெணாவுக்கு அருகில் இருந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் தொடர்பில் புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

# மரண உதவி நிதியம் வழங்குவதில் தொழிற்சங்க பேதம்; சாமிமலை கவரவில தோட்டத் தொழிலாளர்கள் விசனம்

## விவகாரம் அம்பகமுவ பிரதேச செயலாளரின் கவனத்துக்கு

நுவரெலியா, மே 25

சாமிமலை கவரவில தோட்டம் 200 ஏக்கர் பிரிவில் கடந்த காலங்களில் இயங்கி வந்த மரண உதவி நிதியம் தற்போது செயலிழந்து போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து மாதாந்தம் 30 ரூபா அறவிட்டு வந்த இந்த நிதியம் கடந்த காலங்களில் முறையாக இயங்கி வந்தது.

கடந்த இரண்டு வருடகாலமாக அந்தத் தோட்டப் பிரிவில் இரு தொழிற்சங்கங்களில் அங்கம் வகிக்கும் தொழிலாளர்களிடையே முரண்பாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து குறிப்பிட்ட ஒரு தொழிற்சங்கத்தை சார்ந்தோருக்கு மட்டும் மரண உதவி நிதியம் வழங்கப்படுகின்றது. மற்றைய தொழிற்சங்கத்தைச் சார்ந்தோர்களுக்கு நிதியம் வழங்கப்படுவதில்லை எனவும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்டவர்களிடம் நிதி கேட்டால் அராஜகமான முறையில் நடந்து கொள்கின்றனர் என்றும் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். எனவே, இந்த நிதியத்தின் நடவடிக்கைகள் தொடர்பில் அம்பகமுவ பிரதேச செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வரப்படும் என பாதிக்கப்பட்ட தொழிற்சங்கத்தைச் சார்ந்தோர் தெரிவித்தனர். (ச)

# திருமலை பழைய துறைமுகத்தை உலக மரபுரிமை இடமாக்க முயற்சி

திருகோணமலை, மே 25

திருகோணமலை பழைய துறைமுகம் மற்றும் திருகோணமலை கோட்டை ஆகியவற்றை உலக மரபுரிமை இடமாக அங்கீகரிக்கச் செய்வதற்கு தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதற்கான முன்மொழிவு யுனெஸ்கோவிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக தொல்பொருள் ஆராய்ச்சித் திணைக்களப் பணிப்பாளர் கலாநிதி சேனரத் பண்டார தெரிவித்தார்.

இந்த இரண்டு இடங்களும் உலக மரபுரிமை இடமாக அறிவிக்கப்பட்டால், சுற்றுலா பயணிகளைக் கவரக்கூடிய இடங்களாக்கலாம் என திருகோணமலை மாவட்ட தொல்பொருள் ஆராய்ச்சி அதிகாரி தெரிவித்துள்ளார். (ச)



இந்தியக் கடற்படைக் கப்பல் ஒன்று நேற்று செவ்வாய்க்கிழமை காலை திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இந்தக் கப்பல் நாளை வியாழக்கிழமை வரை திருகோணமலைத் துறைமுகத்தில் தரித்து நிற்கும். இந்தப் போர்க்கப்பலில் உள்ள இந்தியக் கடற்படையினரை இலங்கைக் கடற்படையினர் வரவேற்கின்றனர். (ச)

# மானிய உரம் வழங்கப்படவில்லை; சவளக்கடை விவசாயிகள் கவலை

அம்பாறை, மே 25

அம்பாறை மாவட்டத்திலுள்ள சவளக்கடை கமநல சேவை கேந்திர நிலையத்துக்குட்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை மானிய உரம் வழங்கப்படவில்லையென அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

விதைப்பு வேலைகள் முடிவுற்று மூன்று வாரங்கள் கடந்துவிட்ட நிலையிலும் மானிய உரம் வழங்கப்படாதுள்ளதால் விளைச்சலில் பாதிப்பு ஏற்படலாமென விவசாயிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

கடந்த போகத்தின்போது ஏற்பட்ட வெள்ளம் காரணமாக இந்தப் பிரதேச விவசாயிகள் அதிக நஷ்டத்தை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தப்போகத்தின் போது சவளக்கடை கமநல சேவை கேந்திர நிலையத்துக்குட்பட்ட பகுதிகளில் 8500 இற்கு மேற்பட்ட ஏக்கர்களில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உரிய வேளையில் உரத்தைப் பெற்றுப் பயிர்களுக்கு இட முடியாதுள்ளதால் பயிர்கள் மஞ்சள் நிறமாக மாறி நோய்த் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளது.

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மானிய உரத்தை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# பெருந்தோட்ட தமிழர்களிடையே கல்வியறிவை வளர்க்க அறிவுரை

கண்டி,மே 25

மலையக பெருந்தோட்ட பகுதிகளில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மத்தியில் கல்வியில் போதியளவான முன்னேற்றம் இன்னும் ஏற்படவில்லை: அதனை அவர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்க நாயக்க தெரிவித்தார்.

கண்டி, கட்டுகஸ்தோட்டை வலயத்தை சேர்ந்த 100 மாணவர்களுக்கு ஜனாதிபதி புலமை பரிசில் வழங்கும் நிகழ்வு நுகவெல மகளிர் கல்லூரியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை நடைபெற்றது.

இந்த நிகழ்வில் [illegible] கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது,

இலங்கை தற்போது கல்வியில் அதிக முன்னேற்றத்தைக் கண்டுள்ளது. அனைத்து மாண[illegible] முயற்சியை மேற்கொள்கின்றார்.

ஆனாலும், சில கிராமங்கள் கல்விக்கு ஒத்துழைப்பு வழங்குவதில்லை. முக்கியமாக பெருந்தோட்டப் பகுதிகளில் வாழ்கின்ற தமிழ் மக்கள் மத்தியில் இன்னமும் போதியளவான கல்வி வளர்ச்சி ஏற்படவில்லை. இவைகளை படிப்படியாக முன்னேற்றுவதற்கு நாம் முயற்சி செய்கின்றோம்.

மத்திய மாகாணத்திலுள்ள 1,470 பாடசாலைகளில் ஆரம்பப் பாடசாலைகளைத் தவிர 956 பாடசாலைகளுக்கு முழுமையான கணினி அறைகளை வழங்கியுள்ளோம். மாணவர்களுக்கு ஆசிரியர்கள் இல்லாமல் கல்வியை கற்கக்கூடிய வசதிகளை நாம் செய்துள்ளோம்- என்றார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொவிசெத

உத்தியோகப்பூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் **808**
சீட்டிழுப்பு திகதி **23.05.2011**

எழுத்து **T**

வெற்றி இலக்கங்கள் **07 11 23 68**

| | பொருத்தங்கள் | பரிசுத்தொகை | வெல்லப்பட்டோர் தொகை |
|---|---|---|---|
| சுப்பர் பரிசு | ஆங்கில வழுத்துடன் 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 14,874,036.00 | - |
| 1ம் பரிசு | 4 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000,000/= | 01 |
| 2ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 20,000/= | 12 |
| 3ம் பரிசு | 3 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 2,000/= | 328 |
| 4ம் பரிசு | ஆங்கில வழுத்துடன் 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 1,000/= | 651 |
| 5ம் பரிசு | 2 இலக்கங்கள் சரியாயின் | ரூ. 100/= | 16177 |
| 6ம் பரிசு | ஆங்கில எழுத்துடன் ஒரு இலக்கம் சரியாயின் | ரூ. 40/= | 9229 |
| 7ம் பரிசு | 1 இலக்கம் சரியாயின் | ரூ. 20/= | 229708 |
| 8ம் பரிசு | ஆங்கில எழுத்து மாத்திரம் சரியாயின் | ரூ. 20/= | 36142 |

இம்முறை வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை **9,850,860.00**

அடுத்த வார சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு **ரூபா. 15,434,900.80**

வெற்றிப் பெறும் சீட்டுகள் 6மாதங்களுக்குள் மட்டுமே செல்லுப்படியாகும். ஐந்து இலட்சமோ இதற்குக்கூடிய தொகைக்கான பரிசு அரசாங்க வரிச்சட்டதிட்டங்களுக்கு உட்பட்டது. பரிசைப் பெறுவதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

**தேசிய லொத்தர் சபை**
234/2, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2470662, 2470663 அவசர தேவைக்கு: 2473360

இணையதளம்: www.nlb.lk

# தோட்டத் தொழிலாளரின் சம்பள பிரச்சினையில் உடன் தலையிடுக

## தொழில் அமைச்சரைச் சந்தித்து ஐ.தொ.கா. தூதுக்குழு வலியுறுத்தல்

கொழும்பு, மே 25

தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையில் அரசு உடனடியாகத் தலையிடவேண்டும் என தொழில் அமைச்சர் காமினி லொக்குகேவை நேரடியாகச் சந்தித்து ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தூதுக்குழு வலியுறுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் காலை தொழில் அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பில் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் சார்பாக மத்திய மாகாணசபை உறுப்பினரும், நிதிச் செயலாளருமான முரளி ரகுநாதன், பிரதேச சபை உறுப்பினர்களான ஆர்.ஜெயகுமார், ஏ.ராஜ்குமார், பாஸ்கரன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இது தொடர்பில் ஜனநாயக மக்கள் முன்னணி வெளியிட்டுள்ள ஊடகச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளத்தை நிர்ணயம் செய்யும் கூட்டு ஒப்பந்தம் கடந்த மார்ச் மாதத்துடன் காலாவதியாகிவிட்டது. இந்நிலையில், கடந்த இரண்டு மாதங்களாக இழுபறிபட்டு வரும் இப்பிரச்சினையில் அரசு நேரடியாகத் தலையீடு செய்யவேண்டிய கட்டம் ஏற்பட்டுள்ளது.

பேச்சுகளில் ஈடுபடும் தொழிற்சங்கங்களும், முதலாளிமார் சம்மேளனமும் தமது பேச்சுகளை முடிவுக்குக் கொண்டு வந்து நியாயமான சம்பளத் தொகையை அறிவிப்பதாகத் தெரியவில்லை.

ஏற்கனவே விலைவாசி உயர்வினாலும், நீடித்த வறுமையினாலும் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கு நிபந்தனையற்ற அடிப்படைச் சம்பளமாக ரூபாய் 500 வழங்கப்படவேண்டும் என்ற கோரிக்கை அனைத்து தரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். விவசாயிகளுக்கும், மீன்பிடி தொழிலாளர்களுக்கும், ஆடைத் தொழிற்சாலை தொழிலாளர்களுக்கும், அரச ஊழியர்களுக்கும் நிவாரணங்களையும், மானியங்களையும், சம்பள உயர்வுகளையும் வழங்குகின்ற அரசு, தோட்டத் தொழிலாளர்களுக்கும் நியாயமான சம்பளத்தை உறுதிப்படுத்தவேண்டும். தோட்டத் தொழிலாளர்களை மாத்திரம் பாரபட்சமாக நடத்தக்கூடாது.

பேச்சுகளில் ஈடுபடும் பிரதான தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும், தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும் ஏனைய பேச்சுகளில் ஈடுபடாத தொழிற்சங்கங்களும் அரசை நேரடியாக ஆதரிக்கும் அமைப்புகளாகும்.

ஒரே அரசில் அங்கம் வகிக்கும் இந்த அனைத்து தொழிற்சங்கங்களையும் அழைத்து பேச்சுகள் நடத்தவேண்டியது ஆளுகின்ற அரசின் கடமையாகும்.

இந்தக் கருத்துகள் தொழில் அமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில் அரச உயர்மட்டத்துக்கு அறிவிப்பதாக தொழில் அமைச்சர் காமினி லொக்குகே உறுதியளித்தார் என்று ஐ.தொ.கா. தூதுக்குழு தெரிவித்துள்ளது. (சி)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், நட்சத்திரம் ஆயிலியம், 7இல் செவ்வாய், கிரகபாவம் 70, 1977 இல் பிறந்த பட்டதாரி மணமகனுக்குப் படித்த மணமகள் தேவை.
தொடர்பு:- 0750481186

## வீடு விற்பனைக்கு

கோண்டாவில் கிழக்கு, வன்னியசிங்கம் வீதியில் 4 பரப்புக் காணியில் ஒரேவளவில் இரண்டு வீடுகளுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0719505166

## தேவை

1. Account Cleark - 2
2. Pharmacy அனுபவம் உள்ளவர் - 2
3. Clinic Assistant - 5

20 வயதில் இருந்து 35 வயதுக்குட்பட்ட பெண்கள்-
மாலை 3 மணி முதல் 7 மணிவரை பகுதி நேர வேலை.

**சம்பந்தர் மொடேன் கிளினிக்**
08, இராமையாச் செட்டியார் வீதி,
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.0212227259

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி





அன்னை மடியில்
06
10
1945

இறைவன் அடியில்
04
06
2010

## அமரர் நடராசா கனகரத்தினம்

திதி: அபரபக்க அட்டமி (25.05.2011)
அப்பா......
ஆண்டுகள் சென்றாலும்
என்றும்
உம் பாச நினைவுகளுடன்...

கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (49,19,50)

-குடும்பத்தினர்.

(1685)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima No.1புறொயிலர் கோழிக்குஞ்சுகள் Prima கொம்பனி உத்தர வாதத்துடன் நியாயமான விலையில் [ரூபா 80/=] 26.05.2011 காலை விநியோகிக்கப்படும். முன்பதிவு செய்யவும்.

- ★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை - 0778996085
- ★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமானாறு - 0776904590
- ★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி - 0774656377
- ★ நல்லூர் பாம் சென்ரர், பிரதான வீதி, பருத்தித்துறை - 0771392593

இறைச்சிக் கோழிகள் திருப்பிக் கொள்வனவு செய்யப்படும்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19,முருகேசர் லேன், நல்லூர், தொ.பே இல:- 021 222 6944.

(4505)

## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2Kg இற்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய BAHIRAHA No-1 புறொயிலர் குஞ்சுகள், 25.05.2011 விநியோகிக்கப்படும். பதிவுகளை முன்கூட்டியே மேற்கொள்ளவும். விலை ரூபா 90/= கூடுதல் கொள்வனவு செய்பவர்களுக்கு கழிவு வழங்கப்படும்.

- ★ றாஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை,
- ★ துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.
- ★ ஜென்சி பாம்-1 ஆம் கட்டை, பருத்தித்துறை. (0773541771)
- ★ P.ரவி - சாவகச்சேரி T.P: 021 222 2867, 0776090926

(4496)

## மேசன் பணியாளர் தேவை

யாழ். நகரப்பகுதியில் தொடர்ச்சியான வேலைக்கு மேசன் வேலையாள்கள் தேவை.
தொடர்பு: 0773965961
0750417301
(4522)

## தவறிவிட்டது

சுன்னாகம் தெற்கு, மின்சார நிலைய வீதியைச் சேர்ந்த தமிழ்ச்செல்வன் தக்சலா என்பவரது தே.அ.அ. (947012240V) மருதனார் மடத்துக்கும் சுன்னாகத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். அல்லது 0779022041 என்னும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (4531)

## இறைச்சிக் கோழி விற்பனை

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6மணி தொடக்கம் இரவு 8மணி வரை பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன்,நல்லூர்.

## பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0750405723.
(4432-20-21)

# 2ஆம் ஆண்டு நினைவுகள்

மலர்வு
20.01.1975

உதிர்வு
17.05.2009



திதி: அபரபட்ச அட்டமி

## தயாகரன் சுபத்திராதேவி

சிதைகளின் நடுவில்
போர் நடந்த நாளில்
உன் முகம் மறைந்து ஈராண்டு
போனதம்மா!
கட்டிய கணவனும்
நீ தொட்டிலில் வளர்த்த
பிள்ளைகளும் ஈரவிழிகளுடன்
உன் பிரிவுத் துயரில் வாழ்வது
தெரிகிறதா?

குடும்பத்தின் முதற் கொடியாய்
குலமகளாய் குலவிளக்காய்
தாயாய், நல்ல மனைவியாய்,
அன்பு நிறை அக்காவாய்
வாழ்ந்த எங்கள் செல்வமே!
மீண்டுமொரு பிறப்பெடுத்து
எமதருகே வாராயோ?

17A, சிவன் புது வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

என்றும் நினைவில்:
குடும்பத்தினர்.

(4512) (49,21,25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆனைக்கோட்டை, சாவற்கட்டு பிரதேசத்தில் தரம் ஐந்து புலமைப் பரீட்சையில் சித்தியடைந்த மூன்று மாணவர்களையும் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட பதின்மூன்று மாணவர்களையும் சாவற்கட்டு முருகன் ஆலய பரிபாலன சபையினரும் மானிப்பாய் இலங்கை வங்கி கிளையினரும் இணைந்து கௌரவித்துள்ளனர். கௌரவிக்கப்பட்ட பல்லைக்கழக மாணவர்களுடன் வங்கி ஊழியர்கள் நிற்கின்றனர். (100)

# இந்துக்கள் - பௌத்தர்களிடையேயான உறவை வலுப்படுத்துவதே புதிய பேரவையின் சேவை

## செயலாளர் ராமச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 25

30 வருடங்களில் யுத்தத்தால் இடம்பெற்ற துன்பங்கள், அழிவுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை இந்து, பௌத்த கலாசாரப் பேரவைமேற் கொள்ள உள்ளது.

அத்துடன், இந்துக்கள் பௌத்தர்களின் உறவை வலுப்படுத்தவும் தன்து சேவையை வழங்கும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். இந்து, பௌத்த பேரவையின் செயலாளர் எம்.ரி.எஸ்.ராமச்சந்திரன்.

கந்தரமடம், பழம் வீதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்து, பௌத்த பேரவை அலுவலகத்தின் அங்குரார்ப்பண நிகழ்வில் உரைநிகழ்த்தும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவிக்கையில்:

பௌத்தர்கள் சிங்களவர் என்பது உண்மையான கருத்தல்ல. இவர்கள் ஆன்மிக வாதிகள் தான். சில அரசியல் வாதிகள் பௌத்தர் சிங்களவர் எனக்கூறி வருகின்றனர். இது ஏற்றுக்கொள்ள முடியாத கருத்தாகும்.

மகிந்த சிந்தனையின் கீழ் இந்து பௌத்த மதங்களிடையே தொடர்பை வலுப்படுத்தும் நோக்கில்தான் இந்தப் பேரவையை யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், இது ஒரு சமூக சேவையாகவும் அமைகின்றது. இந்துக்களும் பௌத்தர்களும் ஒற்றுமையாக வாழவேண்டும்.

இந்தப் பேரவைக்குரிய ஆலோசனைக்குழுவும் கல்விசார் சமூகத்தினரிடம் இருந்து தெரிவு செய்யப்படவுள்ளது.

கடந்தகாலப் போரில் ஏற்பட்ட விளைவுகள், அனர்த்தங்கள் அனைத்தையும் மறந்து புதிய தொரு சமுதாயத்தை உருவாக்க வேண்டியதும் எமது கடமையாக உள்ளது.

எனவே, அதற்காகக் கல்விசார்ந்த சமூகவியலாளர்கள், மத குருமார்கள், மாணவர்கள் பூரணமான ஒத்துழைப்பை வழங்க வேண்டும் - எனவும் அவர் கேட்டுக்கொண்டார். (வ-313-14)

# இறந்தகாலத்தைப் பற்றி நினைப்பதை விடுத்து எதிர்காலம் குறித்த நம்பிக்கையுடன் வாழுங்கள்

## ஹவாய் ஆதீனத்தின் துறவி சுவாமி தண்டபாணி

சுன்னாகம், மே 25

இறந்த காலத்தைப் பற்றி நினைத்துக் கொண்டிருப்பதை விடுத்து, எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையுடன் நடப்பதே அவசியமாகும். எதிர்காலப் பாதையைச் செப்பனிட்டு அதன் வழியே பயணிக்க வேண்டும்.

- இவ்வாறு தெரிவித்தார் அமெரிக்காவின் ஹவாய் ஆதீனத்தின் இளந்துறவியான சுவாமி தண்டபாணி .

சிவபூமி முதியோர் இல்லத்தின் 4 ஆவது ஆண்டு நிறைவு விழா செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற போது அதில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றும் போது மேலும் தெரிவித்ததாவது:

பலவித துன்பங்களை இங்குள்ளமக்கள் அனுபவித்துள்ளனர்.

எமக்கு என்ன தேவையோ இறைவனிடம் கேட்க வேண்டும். இது சித்தர்கள் வாழ்ந்த புனித பூமி. இந்தப் பூமியில் வாழ்வதே பாக்கியமாகும். வேறெந்த நாட்டிலும் கிடையாத அரிய வைரங்கள் இங்குள்ள மக்களின் கரங்களில் உள்ளன. அதை ஒவ்வொருவரும் உணர வேண்டும் - என்றார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெற்றோருக்கு அமெரிக்காவில் பிறந்த இளந்துறவியான சுவாமி தண்டபாணி ஆங்கில மொழியில் உரையாற்றியிருந்தார்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய தகைசார் பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரையாற்றுகையில் -

சிவபூமி என்று சிறப்பிக்கப்படும் மண்ணில் சிவபூ+மி என்ற பெயரில் வலுவிழந்த பிள்ளைகளுக்கு வலுக்கொடுத்தும், மனதாலும் உடலாலும் தளர்ந்த முதியவர்களுக்கு மனநிறைவை ஏற்படுத்தியும் இரு நிறுவனங்களை ஆறு.திருமுருகன் செயற்படுத்தி வருகின்றார். நிறைந்த திறனும் ஆற்றலும் தொண்டுள்ளமும் கொண்ட அவர், நல்லுள்ளங்களின் உதவியுடன் முதியோரைப் பராமரிக்கும் காலத்தால் அழியாத பெரும் பணியை ஆற்றி வருவது போற்றுதற்குரியது. அப்பர் சுவாமிகள் செய்தவை எனச் சொல்லக்கேட்ட அருந்தொண்டை எல்லாம் நாம் கண்ணாரக் காணும் வகையில் அவர் செய்து வருகின்றார் - என்றார்.

கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், அமெரிக்காவிலிருந்து வந்திருந்த சமூகத்தொண்டர் பாலகுமாரன் ஆகியோர் இங்கு உரையாற்றினர். நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (வ-38)

# உடுவில் கோட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், மே 24

உடுவில் கோட்டத்தில் நடந்த தமிழ்த்தினப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

நாடகம் - ஸ்கந்தவரோதயக் கல்லூரி, உடுவில்மகளிர்கல்லூரி, ஏழாலை ம.வி

**குழு நடனம் - பிரிவு - II (நாட்டியம்)**

இராமநாதன் கல்லூரி, இணுவில் மத்திய கல்லூரி.

**தனி இசை - பிரிவு - II**

கு.குணசர்மிளா (இராமநாதன் கல்லூரி), செ.வியூதன் ( ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்), த.ஆரணி (உடுவில் மகளிர் கல்லூரி).

**தனி இசை - பிரிவு - III**

வி.கல்யாணி( இணுவில் மத்திய கல்லூரி), சி.திபாஜினி (இராமநாதன் கல்லூரி), யோ. சுரேந்திரன் ( ஸ்கந்தவரோதயக் கல்லூரி).

**தனி இசை - பிரிவு - IV**

ற.நிஷா (இராமநாதன் கல்லூரி), அ.அருட்செல்வி (ஏழாலை ம.வி), விகோபிதா (இணுவில் மத்திய கல்லூரி).

**தனி இசை - பிரிவு - V**

லோ.சிந்துஜா (இணுவில் மத்திய கல்லூரி), ஜெ.தேவரூபி (இராமநாதன் கல்லூரி).

**தனி நடனம் - பிரிவு - II**

க.ஆருண்யா (இணுவில் மத்திய கல்லூரி), சு.அபிநயா (உடுவில் மகளிர் கல்லூரி), வா.அருள்பான் (இணுவில் இந்துக் கல்லூரி).

**தனி நடனம் - பிரிவு - III**

வி.[illegible] (உடுவில் மகளிர் கல்லூரி), அ.சுஜீவா (இணுவில் மத்திய கல்லூரி).

**தனி நடனம் - பிரிவு - IV**

தி.நாகலிங்கேஸ்வரி (இராமநாதன் கல்லூரி), சி.சிவகாசிக்கா (உடுவில் மகளிர் கல்லூரி), வி.விஜிதா (இணுவில் மத்திய கல்லூரி).

**தனி நடனம் - பிரிவு - V**

வி.வானதி( இணுவில் மத்திய கல்லூரி), ம.சஞ்சினி (இராமநாதன் கல்லூரி), சி.லாவண்யா (இணுவில் இந்துக் கல்லூரி).

## நிர்வாகிகள் தெரிவு

வலி.வடக்கு, மே 25

கொல்லங்கலட்டி கிளானை ஞானவைரவர் ஆலய பரிபாலன சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட பரிபாலன சபை உறுப்பினர் விவரம் வருமாறு:

தலைவராக ச.ஈஸ்வரன், உப தலைவராக மா.நடராசா, செயலாளராக இ.சிறீதரன், உப செயலாளராக கா.சோதிலிங்கம், பொருளாளராக து.சண்முகநாதன் ஆகியோரும் -

மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களாக வமுருகையா, மா.தேவராசா, கு.சந்திரகுமார், வி.சிவசுதன், மா.அரியபாலன், சி.தயாபரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (வ-86)

* * *

## கருத்தமர்வு

யாழ்ப்பாணம், மே 25

பல்கலைக்கழக வாய்ப்பைத் தவறிய மாணவர்களுக்கான உயர்கல்வி வாய்ப்புக்கான கருத்தமர்வு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கைதடி நிலையக் கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

தேசிய தொழில் தகமை சான்றிதழை வழங்கும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் யாழ்.கிளையால் இந்தக் கருத்தமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தமர்வில் ஆர்வமுடைய மாணவர்கள் முன்பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(வ-313)

## அன்னையர்களுக்கு கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 25

சமூக - சமய மற்றும் அறப்பணிகளில் சேவையாற்றிய 5 அன்னையர் உட்பட 105 பேர் உலக அன்னையர் தினத்தையொட்டி ஊன்றுகோல் அறப்பணியகத்தினால் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

ஊன்றுகோல் அறப்பணியகத் தலைவர் க.நடேசன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொக்குவில் இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபர் அ.பஸ்சுலிங்கம் அன்னையர்களுக்கான பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

ஆசியுரையை நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலய அருட் தந்தை ஜே.சோதிநாதன், நவாலி அமெரிக்க மிசன் திருச்சபை அருட் திரு பி.தேவதாஸ் ஆகியோர் வழங்கினர்.

சிறப்புரை [illegible] நவாலி முருகானந்த சனசமூக நிலையத் தலைவர் செ.மகேந்திரன், நவாலி முருகானந்தா, சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கத் தலைவர் யோ.அஞ்ச[illegible] ஆகியோர் வழங்கினர். கௌரவிக்கப்பட்ட அன்னையர்களின் விபரம் வருமாறு:

செல்லப்பா செல்வம், அன்ரனி குறூஸ் கமலா, முருகேசு பரஞ்சோதி, அருமைநாயகம் அதிசயம் , சிவராசா புவனேஸ்வரி ஆகியோருக்கு கௌரவிக்கப்பட்டு பரிசி[illegible] வழங்கப்பட்டன. (வ-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தருவது வித்தியா**

## இன்றைய நாள்
### உங்களுக்கு எப்படி?

**மேடம்**
யாராவது உங்களை நம்பி பணப் பொறுப்புகளை ஒப்படைக்கலாம். வீட்டில் வசதிகளை அதிகரிக்க முற்படுவீர்கள். கணவன் மனைவி இடையே அன்யோன்யம்கூடும். எதிர்பாராத நிகழ்ச்சிகள் நடக்கலாம். சிக்கலில் இருக்கும் நண்பர் ஒருவருக்கு அவசர உதவி செய்யலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம்.

**இடபம்:**
குடும்பத்தில் கலகலப்பு, சந்தோஷம் அதிகரிக்கும். வியாபாரிகள் வளமான சூழ்நிலையைக் காண்பர். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரும். நண்பர் ஒருவர் உங்களிடம் யோசனை கேட்டு செயற்படலாம். திட்டமிட்ட வேலை ஒன்று நடக்காமல் போனாலும், திட்டமிடாத வேலை ஒன்று நடக்கலாம். பிள்ளைகளால் செலவு உண்டு.

**மிதுனம்:**
இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த காரியம் இன்று முடிவுக்கு வரும். தொழில் ரீதியாகவோ அல்லது வேறு வேலையாகவோ வெளியூர் பயணம் செல்லலாம். புதிய முதலீடுகள் தொடர்பான விடயங்களில் எச்சரிக்கை அவசியம். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். பக்தி நாட்டம் கூடும்.

**கடகம்:**
திட்டமிட்ட வேலை ஒன்றை திடீரென மாற்றி அமைக்கலாம். குடும்பச் செலவுகள் கட்டுக்கடங்காமல் செல்லும். சிலருக்காக வெளியிடங்களில் நீண்ட நேரம் காத்திருக்கலாம். பஸ் பயணங்கள் எரிச்சல், தொந்தரவு தருவதாக அமையும். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றாமல் இழுத்தடிக்கலாம். வெறுப்பு உண்டாகும்.

**சிங்கம்:**
தம்பதியர் இடையே ஒற்றுமை அதிகரிக்கும். உங்களின் தொழில் ரீதியான செயற்பாடுகளை நாலுபேர் பாராட்டலாம். எதிர்பார்த்த விடயங்கள் மட்டுமின்றி, எதிர்பாராத சில விடயங்களும் நடக்கலாம். தந்திரமான செயற்பாடுகள் மூலம் எதிர்ப்புகளை முறியடிப்பீர்கள். நன்றியுடன் நடந்து கொண்ட ஒருவரை பற்றி நினைத்துப் பார்ப்பீர்கள்.

**கன்னி:**
உறவினர்கள் மீதான பாசம் அதிகரிக்கும். தேக ஆரோக்கியம் தெம்பு, உற்சாகம் தரும். பொது விடயங்களில் ஈடுபடுவீர்கள். உதிரி வருமானங்கள் கிடைக்கும். தொழில் ரீதியாக ஏற்பட்ட வெறுப்பு விலகி, உற்சாகத்தோடு செயற்படுவீர்கள். பிள்ளைகளின் சின்ன, சின்ன ஆசைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும்.

**துலாம்:**
தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். வேலையாள்கள் திடீர் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். குடும்ப உறுப்பினர்கள் உங்களை புரிந்து கொள்ளாமல் ஏட்டிக்குப் போட்டியாக செயற்படலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில செலவுகளைச் செய்வீர்கள்.

**விருச்சிகம்;**
இழப்புகளைத் தவிர்க்க எதையும் ஒன்றுக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது. திடீரென சந்திக்கும் நண்பர்களுக்காக செலவுகளைச் செய்யலாம். வியாபாரிகளுக்கு கடன் மிகுதிகள் வசூலாகும். சொத்து விவகாரங்களில் ஏற்பட்ட சிக்கல்கள் தீரும். சிலரின் தகுதிக்கு மீறிய செயற்பாட்டால் எரிச்சல் அடையலாம்.

**தனுசு:**
எந்த வேலையையும் உடனுக்குடன் செய்து முடிப்பீர்கள். பணத்தை சேமிப்பதில் நாட்டம் செல்லும். சொல்வாக்கைக் காப்பாற்றி செல்வாக்குப் பெறுவீர்கள். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள். சண்டை போட்ட ஒருவர் உங்களிடம் சமாதானமாகச் செல்லலாம். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டு.

**மகரம்:**
தடுமாற்றங்கள், மனக்குழப்பங்களைச் சந்திக்கலாம். விரும்பிய ஒருவருடன் தொலைபேசியில் பேச முற்பட்டு அவரின் தொடர்பு கிடைக்காமல் போகலாம். பிள்ளைகள் விடயங்களில் அதிக அக்கறை காட்டுவீர்கள். பரபரப்புகளை ஓரம் கட்டி விட்டு, எதிலும் நிதானமாகச் செயற்படுவீர்கள். சிலரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆளாகலாம்.

**கும்பம்:**
மதிப்பு, கௌரவம் மேம்படும். உறவினர்கள் தொடர்பான விடயங்களில் நாசுக்காக நடந்து கொள்வீர்கள். ஓய்வாக இருக்க நினைத்தாலும், அது முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடிகளைச் சந்திக்கலாம். நீங்கள் நம்பிய ஒருவர் உங்களுக்கு கைகொடுத்து உதவுவார். எதிலும் ஆர்வம், அக்கறையோடு செயற்படுவீர்கள். உதிரி வரவு கிட்டும்.

**மீனம்:**
வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். வாங்கிய கடன் ஒன்றை உடனே திருப்பிக் கொடுக்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். பல நாள்களாக தொலைபேசியில் மட்டும் பேசிக் கொண்டிருந்த ஒருவரை நேரில் சந்திப்பீர்கள். பெண்கள் விசேட நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். விருந்தினர் வருகையால் வழக்கத்திற்கு மாறாக கூடுதலாகச் செலவிடலாம்.

# போர்க் குற்றச் இருந்து இலங் காப்பாற்றுமா



மனித குலத்துக்கு எதிரான யுத்தக் கொடூரங்கள் என்ற மன்னிக்க முடியாத குற்றங்களைப் புரிந்தமைக்காக உலகப் பொதுமன்றமான ஐ.நா. முன்னிலையில் இலங்கை ஆட்சித் தரப்பு நிறுத்தப்படும் வேளை நெருங்கிவிட்டது. காட்டாட்சி நடத்தும் மஹிந்த குடும்பத்தினர் ராஜபக்ஷ அன்ட் பிரதர்ஸின் தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருக்கும் யுத்தக் குற்றங்கள் என்ற கத்தி எந்நேரமும் வீழலாம் - என சில மாதங்களுக்கு முன்னர் குறிப்பிட்டிருந்தோம்.

அது யதார்த்தமாகி வருவதை இப்போது கண் கூடாகப் பார்க்க முடிகிறது.

அதிகாரங்களை அளவுக்கு மீறி வரித்துக் கொண்டு அட்டூழியங்களைப் புரிந்து வரும் ராஜபக்ஷ சகோதரர்களுக்கு ளெகடு காலம்- நெருங்கி விட்டது என்பதுதான் இன்றைய நிலைமை. விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்த காண்டத்தில் அதர்ம வெற்றியை ஈட்டி, அதனைக் கொண்டாடிக் கொண்டிருந்த இலங்கை ஆட்சித் தரப்புக்குச் சரிவு காலம் இப்போது ஆரம் பித்து விட்டது. அதனால் அது, சரணாகதிப் படலத் தைத் தொடங்கியிருக்கின்றது என்பதுதான் லேட் டஸ்ட் தகவல்.

**நெருக்கடியில் கொழும்பு**

இதில் புதுமை என்னவென்றால், எந்தத் தரப்பைத் தனது யுத்தத் தந்திரோபாயங்களுக்காக ரகசியமாக அணி சேர்த்துக் கொண்டு இலங்கை காய் நகர்த்தியதோ. - யுத்த வெற்றிக்குப் பின்னர் எந்தத் தரப்பை புறம் ஒதுக்கிவிட்டு இலங்கை எக்காளமிட்டு முழக்கமிட்டதோ.. - அந்தத் தரப்பின் காலடியில் இலங்கை சரணாகதி அடையும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதுதான் கொழும்புக்கு இன்று ஏற்பட்டுள்ள பெரும் துரதிஷ்டமாகும்.

புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் வென்றதும் இந்தியாவின் யுத்தத்தையே நாம் முன்னெடுத்து நடத்தி வென்றோம் என்று பகிரங்கமாக அறிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. அதேபோன்று, இந்திய அதிகார வர்க்கத்துடன் கலந்தாலோசனை நடத்தி, அவர்களது வழிகாட்டுதலுடனேயே யுத்த நடவடிக்கைகளை முன்னெடுத்தோம் - என்று அப்பாவி ஈழத் தமிழர்களின் பேரழிவுக்குச் சூத்திரதாரியான கோத்தபாய ராஜபக்ஷ யுத்தத்தின் இறுதியில் உண்மையைப் பகிரங்கப்படுத்தினர். அதே இந்தியாவிடம் தான் இப்போது யுத்தக் குற்றச் சிக்கலில் இருந்து தன்னை விடுவிப்பதற்காக இலங்கை சரணாகதி அடைந்திருக்கிறது என்கின்றன கொழும்பில் விஷயமறிந்த வட்டாரங்கள்.

இலங்கையில் யுத்த நடவடிக்கைகளை இந்திய அதிகார வர்க்கத்தின் அனுசரணையுடன்தான் தாங் கள் முன்னெடுத்தார்கள் என்பதால், யுத்தக் குற்றம் புரிந்த சிக்கல் வரும்போது இந்தியா தானாக முன் வந்து தங்களைக் காப்பாற்றும் என்றே ராஜபக்ஷ சகோதரர்கள் திடமாக நம்பியிருந்தார்கள்.

அப்படியில்லாமல், இந்த விவகாரத்தில் இந்தியா, தம்மைக் கைவிட முயற்சிக்குமானால், உங்களோடு சேர்ந்து, இணைந்து தானே யுத்தத்தை நடத்தினோம். எனவே, நாங்கள் யுத்தக் குற்றம் புரிந்திருந்தால் நீங்களும் சேர்ந்து அதற்குப் பொறுப்பு என்று இந்தியத் தரப்பை அச்சுறுத்துவதோடு, யுத்தக் கொடூரங்களில் இந்தியப் பங்களிப்பை அம்பலப்படுத்துவோம் என்று

**இதுவரை சீனப் பூச்சாண்டியைக் காட்டி, இந்தியாவை உசுப்பேற்றி வந்த கொழும்பு, இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு இப்போது வாலைச் சுருட்டிக்கொண்டு இந்தியப் புகழ் பாடத் தொடங்கியுள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ச்சாட்டுகளில் ...ங்கையை ... இந்தியா?



...மிரட்டுவதன் மூலமும் புதுடில்லியைப் பணிய வைத்து விடலாம் என்றுதான் அவர்கள் கணக்கிட்டனர்.

### புறமொதுக்கிய புதுடில்லி

ஆனால், அவர்களின் கணக்குப் பிழைத்து விட்டது. யுத்தக் குற்றச் சுருக்குக் கயிறு, கொழும்பு ஆட்சிப் பீடத்தை நோக்கி நேரடியாக வீசப்பட்டதுமே புதுடில்லி மெல்லப் புறம் ஒதுங்கிக் கொண்டது. இலங் கையைக் காப்பாற்றத் தான் முன்வரப் போவதில்லை என்ற சமிக்ஞையை இவ்விடயத்தில் தனது அதீத மௌனத்தை நீடிப்பதன் மூலம் அது கொழும்புக்குப் புலப்படுத்தியது.

அது மட்டுமல்ல, யுத்த காலத்தில் ராஜபக்ஷ ஆட்சித் தரப்புக்கு இந்தியா நேரடியாக வழங்கிய யுத்த உதவி களாகட்டும், அல்லது நிபுணத்துவ ஆலோசனைகளா கட்டும், அவை எல்லாமே ரகசியமாக செய்யப்பட்ட வையே. அரசல் புரசலாக அவை பற்றிய செய்திகள் வெளியே கசிந்த போதிலும், அவற்றை வெளிப்படை யாக இந்தியா வழங்கவில்லை என்பதே உண்மை.

### மறைமுக உதவி

போர் தீவிரமடைந்த காலகட்டத்தில் மறைமுகமாக யுத்த உதவிகளை வழங்கி அப்பாவித் தமிழர்களுக்கு எதிரான கொடூர யுத்தத்துக்கு ஊக்கமளித்து, உந்து சக்தியாக புதுடில்லி விளங்கிய போதிலும், வெளியில் யுத்தத்தின் நடுவில் சிக்கியுள்ள அப்பாவிகளின் பாதுகாப்பை உறுதி செய்து கொள்ளுங்கள்; யுத்தத்தை நிறுத்தி, அமைதித் தீர்வைக் காண முயற்சியுங்கள்!- என்றுதான் புதுடில்லி பகிரங்க அறிவிப்புகளை விடுத்து வந்தது.

யுத்தம் மிக மோசமான மனிதப் பேரழிவுகளை ஏற்படுத்திய காலகட்டத்தில் கொழும்புக்கு வருகைதந்த அப்போதைய இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜி, யுத்தத்தை நிறுத்தி, அமைதித் தீர்வுக்கு வழி வகுப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் எத்தனமாகவே தமது கொழும்புப் பயணத்தை வெளியில் காட்டிக் கொண்டபோதும், மூடிய அறைக்குள் வைத்து, எந்த இழப்பு வந்தாலும் யுத்தத்தை ஒரேயடியாக நடத்தி முடியுங்கள் என்ற செய்தியையே உறுதியாகவும், திடமாகவும் ராஜபக்ஷ ஆட்சித் தரப்புக்கு வழங்கினார் என்பது ராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படும் உறுதியான தகவல்.



அப்படி இந்தியா இரட்டை வேடம் போட்டதன் காரணத்தைக் கொழும்பு இப்போதுதான் புரிந்து கொள்ளத் தொடங்கியிருக்கின்றது.

புலிகளை அழித்த போரிலும், அந்த வெற்றியிலும் கொழும்புடன் சேர்ந்து செயற்பட்டு மகிழ்ந்து கொள்ளும் புதுடில்லி, அதனால் ஏற்படப்போகும் பாவத்துக்கும், தீங்குக்கும், குற்றத்துக்கும் கொழும்பை மட்டுமே பொறுப்பாக்கிக் கொண்டு தான் தப்பிக் கொண்டு விட்டது என்பது தான் உண்மை.

இப்போது, யுத்தக் குற்றக் கொடூரங்களுக்காக சர்வதேசமே இலங்கைக்கு எதிராக வரிந்து கட்டிக் கொண்டு முனைப்பாக நிற்கின்றது.

### இந்தியாவின் இரட்டைவேடம்

இந்தச் சமயத்தில் சர்வதேசக் கெடுபிடிகளில் இருந்து தம்மை காப்பாற்றிக் கொள்வதானால் அதற்கு இந்தப் பிராந்தியத்தின் வல்லாதிக்க சக்தியான இந்தியாவின் நேரடி ஒத்துழைப்பு, ஆதரவு, பக்கபலம் எல்லாம் தமக்கு அவசியமானவை என்பதை ஜனாதிபதி ராஜபக்ஷ நன்கு உணர்ந்து கொண்டுள்ளார்.

யுத்தக் குற்றம் என்ற சுருக்குக் கயிறு தனது கழுத்தில் விழாமல் காப்பாற்ற இந்தியாவினால் மட்டுமே முடியும் என்ற உண்மை ராஜபக்ஷவுக்கு இப்போது உறைக்கத் தொடங்கியிருப்பதால், நட்புக் கரம் நீட்டும் அவரது செய்திகள், சமிக்ஞைகள் புது டில்லிக்குப் பறக்கத் தொடங்கியுள்ளன.

இதுவரை தான் இழுத்தடித்து வந்த 'சீபா' எனும் வர்த்தக ஒப்பந்தத்தை உடனடியாகச் செய்யத் தயார், திருகோணமலை சம்பூரில் இந்தியா அமைப்பதற்கு இணக்கம் காணப்பட்ட அனல் மின் நிலையத் திட்டங்களுக்கான கெடுபிடித் தடைகள் உடனடியாக நீக்கப்படும், காங்கேசன்-துறை துறைமுக அபிவிருத்திப் பொறுப்பு இந்தியாவிடமே உடனடியாக ஒப்படைக்கப்படும் என்றெல்லாம் மஹிந்தரிடமிருந்து புதுடில்லிக்கு பச்சைக் கொடித் தகவல்கள் பறக்கின்றன.

புதுடில்லி தலையிட்டு, சர்வதேசத்தை சமாளித்து, காப்பாற்றினால்தான் யுத்தக் குற்ற நெருக்குதலில் இருந்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குடும்பமும் அவரது அதிகார வர்க்கமும் தப்பிப் பிழைக்க வாய்ப்புண்டு என்பது இன்றைய நிலைமை.

### இந்தியப் புகழ்பாடும் இலங்கை

இதுவரை சீனப் பூச்சாண்டியைக் காட்டி, இந்தியாவை உசுப்பேற்றி வந்த கொழும்பு, இந்த யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு இப்போது வாலைச் சுருட்டிக் கொண்டு இந்தியப் புகழ்பாடத் தொடங்கியுள்ளது. இதற்கு மயங்கி இந்தியா எடுபடுமா, இலங்கை ஆட்சித் தரப்பைக் காபந்து பண்ணி, யுத்தக் குற்றச்சாட்டுக்களில் இருந்து அதைக் காப்பாற்றுமா என்பதே இன்றைய கேள்வியாகும்.

அடிபணிய முனையும் கொழும்பின் இக்கட்டு நிலையை வசமாகப் பயன்படுத்தி, இதுவரை அழிவுகளைச் சந்தித்து வந்த ஈழத் தமிழர்களுக்கு ஏதேனும் நியாயம் பெற்றுக் கொடுக்க முடியுமா என புதுடில்லி சிந்திப்பதாகத் தெரிகின்றது.

---

## என்.வி.

ஈழத்தமிழர் தரப்புடன் விரைந்து பேசி ஓர் இணக்கத்துக்கு வாருங்கள். அதைச் செயற்படுத்துவதை உறுதிப்படுத்துங்கள். அப்படி நடந்து கொண்டால், உங்களை யுத்தக் குற்றங்கள் என்ற நெருக்கடியிலிருந்து காப்பாற்றும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்புத் தரலாம் - என்ற செய்தியை புதுடில்லி கொழும்புக்கு ஏற்கனவே தெளிவாகத் தெரியப்படுத்தி விட்டதாவும் கூறப்படுகின்றது.

எது, எப்படியென்றாலும், உறுதிமொழி வழங்கி, அதன் மூலம் தனக்குத் தேவையானதைச் சாதித்துக் கொண்டு, பின்னர் வழங்கிய உறுதியைக் காற்றில் பறக்க விடுவது என்பது சிங்கள அதிகார வர்க்கத்தின் பரவணிப் பழக்கம். அந்தத் தந்திரத்துக்கு மீண்டும் ஒரு தடவை தானும் இரையாகாமல் பார்த்துக் கொள்வது புதுடில்லி அதிகாரத் தரப்பின் பொறுப்பாகும்.

அதேசமயம், யுத்தக் கொடூரங்கள் என்ற மனித குலத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்த அதிகாரத் தரப்பை காப்பாற்ற முயல்வது காந்தி தேசத்துக்கு அழகல்ல என்பதையும் புதுடில்லி புரிந்து கொள்ள வேண்டும். (நன்றி: சூரியகதிர்)

---

## முதலுதவி



இன்றைக்கு விபத்து என்பது சர்வ சாதாரணமாக நடக்கிறது. வாகன விபத்து... வெடி குண்டு விபத்து.... தீ விபத்து... கட்டடம் சரிந்து விபத்து... இப்படி பல்வேறு வழிகளில் விபத்து ஏற்படுகின்றது.

ஒரு விபத்தைப் பார்த்து விட்டுப் பலபேர் ''எமக்கு என்னத்துக்கு வீண் பிரச்சினை'' என்று ஒதுங்கிப் போய் விடுவதும் உண்டு. சிலபேர் துணிவுடன் கிட்டப் போய்உதவி செய்வதும் உண்டு. அப்படி உதவி செய்ய நினைக்கிறவர்களுக்கு இந்தத் தகவல் உபயோகப்படும்.

விபத்தில் காயமடைந்தவர்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். முதல் வகை கொஞ்சம் கடுமையானது அதாவது உயிருக்கு ஆபத்தைத்தரக்கூடிய மூளைக் காயம், கழுத்துக் காயங்கள், இதயம், நுரையீரல் காயங்கள், வயிற்றின் உட்புறக் காயங்கள், அதிகப்படியான இரத்தப் போக்கு இவற்றால் பாதிக்கப்பட்டிருந்தால் அதுதான் முதல்வகை என்று நாம் கருதிக் கொள்ள வேண்டும். தாமதப்படுத்தாமல் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லவேண்டும். இப்படிக் கொஞ்சம் எச்சரிக்கையாக நடந்தால் காயப்பட்டவர்களில் பலபேரைக் காப்பாற்றி விடலாம்.

இரண்டாவது வகை எப்படியென்றால் முதலுதவி விரைவாகக் கிடைத்தால் உயிர் பிழைக்கக் கூடிய மார்புக் காயங்கள் கை, கால், எலும்பு முறிவு, இடுப்பு, முதுகெலும்புக் காயங்கள் சீரான இரத்தச்சேதம் உடையவர்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

ஆபத்து இல்லாத சிராய்ப்புகள், சிறுகாயங்கள், இரத்த உறவுகள் இதனால் பாதிக்கப்பட்டவர்களை மூன்றாவது வகையினுள் அடக்கலாம்.

ஒருவர் தலையில் அடிபட்டு நிலத்தில் விழுந்துவிட்டார் எனில் அவருக்கு வாந்தி வந்து புரையேறி மூச்சு அடைப்பு உண்டாகும். இப்படி ஆகாமல் இருக்க தலையை ஒரு பக்கமாகச் சாய்த்து வைக்கலாம்.

நாடித்துடிப்பையும் இதயத் துடிப்பையும் தொட்டுப் பார்த்துக் கொள்ள வேண்டும். அது குறைந்திருந்தாலும் சரி நின்று இருந் தாலும் சரி அவரின் மார்பை நிமிடத்துக்கு 80 தடவைகள் உள்ளங்கையாலே அழுத்தி இதயத்துடிப்பை மீட்பதற்கு உதவ வேண்டும்.

கழுத்தில் காயம்பட்டாலும் ஆபத்து அதிகம். கழுத்துக்கு அடியில் ஒரு துண்டை மடித்து வைக்கலாம். இரண்டு பக்கமும் சிறு தலையணை அல்லது துணி மடிப்புக்களை வைத்து கழுத்து அதிகமாக அசையாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்.

முதுகு எலும்பு முறிந்து இருக்குமோ என்ற சந்தேகம் இருந்தால் அவரை அதிகமாக அசைய விடக்கூடாது. அசைந்தால் தண்டுவடத்தில் பாதிப்பு ஏற்பட்டு கை, கால் செயற்படாது போய்விடும். அத்தகையவரை ஒரு கனமான போர்வை அல்லது பாயில் படுக்க வைத்து நாலுபேர் மெதுவாகத் தூக்கி மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

கை எலும்பு முறிந்திருந்தால் முறிந்த பாகத்தை உடம்போடு சேர்த்து அசையாமல் கட்டி வைக்கலாம். கால் எலும்பு முறிந்தால் மற்றக் காலோடு சேர்த்துக் கட்டிவிடலாம். முறிந்த பாகம் தொங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போதுதான் வீக்கம் உண்டாகாமல் இருக்கும்.

வெட்டுக்காயம், குண்டுவெடிப்பால் காயம் இவற்றிலெல்லாம் இரத்தப்போக்கு அதிகமாக இருக்கும். இரத்தம் வெளியேற வெளியேற ஆபத்து அதிகம். சுத்தமான துணியை பல மடிப் புக்களாக மடித்து காயத்தின் மேல் வைத்து அழுத்தமாக ஒரு பத்து நிமிடம் பிடித்திருக்கவேண்டும். இரத்தம் நின்றவுடன் காயத்துக்கு கட்டுப் போடலாம். சில சமயம் காயம்பட்ட பாகத்தை உயரமாகத் தூக்கிப் பிடித்துக் கொண்டாலும் இரத்தக் கசிவு நிற்கும்.

. இந்த விபரங்களையெல்லாம் கொஞ்சம் மனதில் வைத்துக் கொண்டால் தக்க சமயத்தில் உதவும். ஏனென்றால் இந்தக் காலத்தில் விபத்து எந்த ரூபத்தில் வருமென்று யூகிக்கவே முடியாது.

நண்பர் ஒருவர் ''நேற்று என் கண் முன்னால் ஒரு சின்ன விபத்து நடந்தது'' என்று கூறினார். என்னென்று விசாரித்தால் ஒரு பஸ்ஸில் வந்து கொண்டிருந்தேன். அந்த பஸ்ஸின் பின்பக்கமாக நின்ற ஒருவர் வீதியில் விழுந்து விட்டார். சாரதி அதைக் கவனிக்கவில்லை. பஸ்ஸை நிறுத்தாமல் போய் விட்டார்'' என்றார்.

நடத்துனர் உடனே விசில் ஊதி பஸ்ஸை நிறுத்த வேண்டியது தானே'' என்று கேட்டார் மற்றவர்.

''அது தானே முடியவில்லை என்றார். ஏன் என்று கேட்ட போது விழுந்ததே அவர்தானே'' என்றார்.

கோ. சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைத்தொலைபேசியில் பேசினால் ஞாபக மறதி ஏற்படாது



கைத்தொலைபேசியில் பேசினால் மறதி குணமாகும் எனப் புதிய ஆய்வில் தெரியவந்துள்ளது. அல்ஷெகெய் மெர்ஷ் என்ற மறதி நோயினால் உலகில் பலர் அவதிப்பட்டு வருகின்றனர்.

மூளையில் உள்ள செல்கள் கொஞ்சம் கொஞ்சமாகச் செயல் இழப்பதால் இந்த நோய் உருவாகிறது.

இந்த நோயை ஜேர்மனியை சேர்ந்த ஆலியோஸ் என்ற விஞ்ஞானி கடந்த 1906ஆம் ஆண்டு கண்டுபிடித்தார். அன்று முதல் இந்த நோயைக் குணப்படுத்த விஞ்ஞானிகள் தீவிரமாக முயன்று வருகின்றனர்.

இந்த நிலையில் தற்போதுதான் இந்த நோயைக் குணப்படுத்த புதிய யுக்தி ஒன்றை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

தொடர்ந்து கைத்தொலைபேசியில் பேசுவதன் மூலம் இந்த நோயைக் குணப்படுத்தலாம் என ஆய்வு மூலம் தெளிவுபடுத்தியுள்ளனர். அமெரிக்காவின் தெற்குப் புளோரிடாவில் உள்ள பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இந்தப் புதிய ஆய்வை மேற்கொண்டனர். இவர்கள் 96 எலிகளுக்கு நாள் ஒன்றுக்கு இருமுறை கைத்தொலைபேசிகள் மூலம் எலக்ட்ரோ மேக்னடிக் அலை கற்றைகளை ரிமோட் கண்ட்ரோல் மூலம் பாய்ச்சினர்.

இதன் மூலம் அல்ஷெகெய் மெர்ஷ் நோயினால் பாதிக்கப்பட்ட எலிகளின் நினைவாற்றல் அதிகரித்தது எனக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் மறதி நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் கைத்தொலைபேசியில் உள்ள எலக்ட்ரோ மேக்னடிக் அலைக்கற்றைகள் மூலம் சிகிச்சை அளித்துக் குணப்படுத்த முடியும் என்ற முடிவுக்கு ஆராய்ச்சியாளர்கள் வந்துள்ளனர்.

# முன்னோக்கி ஓடுவதை விட பின்னோக்கி ஓடினால் பலன் அதிகம்




நமது உடல் நன்றாக இருப்பதற்கு உடற் பயிற்சி செய்ய வேண்டும் என்ற அறிவுரையை மருத்துவ நிபுணர்கள் கூறுவது உண்டு. தற்போது ஆய்வாளர்கள் உடல் நலத்திற்கான புதிய முறையை தெரிவித்துள்ளனர். முன்பக்கமாக ஓடுவதைக் காட்டிலும் பின்னோக்கியபடி ஓடினால் உடல் நல்ல வலிமையுடன் இருக்கும் என நிபுணர்கள் கூறியுள்ளனர். பின்னோக்கி ஓடுவதால் கூடுதல் கலோரிகள் எரிக்கப்பட்டு உடல் மிகுந்த வலிமையுடன் திகழும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பின்பக்கமாக ஓடிப் பயிற்சி செய்வதால் கால், கை மூட்டுகள் நன்றாகப் பலம் அடைகின்றன. நமது பார்வைத்திறனும் கூடுதலாகிறது. முழங்கால் மற்றும் முதுகுப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண பின்னோக்கிய ஓட்டம் மிகச் சிறந்த பயிற்சியாக அறிவுறுத்தப்படுகிறது. அமெரிக்காவின் ஓர்கான் பல்கலைகழக ஆராய்ச்சி முடிவின் படி முன்னோக்கி ஓடுவதில் செலவழிக்கப்படும் சக்தியில் 80 வீதம் பின்னோக்கி ஓடுவதில் பயன்படுத்துவதால் நல்ல உடல் தகுதி பலன்கள் கிடைக்கின்றன எனத் தெரிவித்துள்ளது. இதய இரத்தக் குழாய்கள் சீரான இயக்கத்திற்கு பின்னோக்கி ஓடுவது நல்ல பலனைத் தருகிறது எனத் தென் ஆபிரிக்காவின் ஸ்டெலன்போஸ் பல்கலைகழகம் தெரிவித்துள்ளது. முன்னோக்கி ஓடுவதில் ஆயிரம் அடிகளை எடுத்து வைக்கும் பயிற்சியின் பலனை பின்னோக்கி ஓடுவதில் 100 அடி வைப்பதன் மூலம் பெறலாம் எனப் பிரிட்டன் பின்னோட்டப் பந்தய அமைப்பாளர் ஜேம்ஸ் பாம்பர் தெரிவித்துள்ளார்.

# சிந்திக்கச் சில...

* தவறே செய்யாதவர்கள் கட்டாயம் எந்தவிதமான ஒரு புதுமையையும் கண்டுபிடிக்காதவர்களாகத்தான் இருப்பார்கள்- **சாமுவேல்.**
* அடையமுடியாத இலட்சியங்களையும், ஆசைகளையும் தவிர்த்து விடுங்கள்- **வியர்ப்மென்**
* பேச்சுப் பெரிதுதான் ஆனால் மௌனம் அதனினும் பெரிது- **தாமஸ் கார்லைல்**
* இருட்டைச் சகித்துக் கொண்டிருப்பதை விட்டுவிட்டு ஒரு சிறு மெழுகுவர்த்தியை ஏற்றுங்கள்- **கன்பூசியஸ்**
* தர்மம் என்பது கைகள் செய்வது மட்டுமல்ல அது இதயத்தின் அறம்- **எடிசன்**
* கேட்டு பெறும் அன்பு சிறந்தது. ஆனால் கேட்காமலேயே கொடுக்கும் அன்பு சாலச் சிறந்தது- **ஷேக்ஸ்பியர்**
* அடிக்கடி கோபம் கொள்பவர் சீக்கிரம் முதுமை அடைந்துவிடுவர்.
* கல்வியின் வேர்கள் கசப்பானவை. ஆனாலும் அதன் வேர்கள் இனிப்பானவை- **அரிஸ்ரோட்டில்**
* உண்மையை நம்புங்கள். உங்களை நீங்கள் நம்புங்கள். ஊரார் பேச்சை நம்பாதீர்- **பென்னடியான்.**
* இளமைப் பருவத்தில் ஓர் எண்ணம் மனதைக் கவர்ந்து விட்டால் அதனின்றும் மாறுவது கடினம்- **சாக்ரடீஸ்**
* முடியாது என்ற சொல் முட்டாளின் அகராதியில்தான் உண்டு- **நெப்போலியன்**
* பிறருடைய குறைகளை நாம் சுட்டும்போது நம்முடைய குறைகளை உலகம் ஆராய ஆரம்பிக்கிறது- **இயேசுநாதர்**
* கருணையின் வழியே சென்றால் உயரிய அனுபவங்களைப் பெறலாம். இறுதியில் உண்மையின் ஒளியும் கிடைக்கும்- **காந்தி**
* இன்பம் பனித்துளி போன்றது. அது சிரிக்கும்பேஉலர்ந்துவிடும்- தாகூர்.

**வி.கீர்த்தனா,**
**மானிப்பாய்.**

# ஆஸ்துமா நோயைக் குணப்படுத்த சூரியஒளி



மனித வாழ்க்கையுடன் இயற்கை எவ்வாறு பின்னிப் பிணைந்துள்ளது என்பது வியப்பை ஏற்படுத்துகின்றது. அந்த வகையில் இயற்கையின் அற்புதமான கொடை நோய் நிவாரணியாகவும் திகழ்கின்றது.

சிறுவயதில் ஏற்படும் ஆஸ்துமா நோய்க்குச் சூரிய ஒளி அரிய மருந்தாக அமைகின்றதென ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர். உயிர்ச்சத்து டி பொதுவாக சூரிய ஒளியிலிருந்து பெற்றுக் கொள்ளப்படுகின்றது.


வெலன்சியன் ஆய்வாளர்களினால் நடத்தப்பட்ட ஆய்வின் மூலம் சூரிய ஒளிக்கும் ஆஸ்துமா நோய்க்கும் இடையிலான தொடர்பு கண்டறியப்பட்டுள்ளது. அதிகளவில் சூரிய ஒளி உடலில் பட்டால் புற்று நோயைக்கூட ஏற்படுத்தக் கூடிய ஆபத்துக் காணப்படுகின்றது.

எனினும் முற்று முழுதாகச் சூரிய ஒளியை நிராகரிப்பதும் ஆபத்துக்களை ஏற்படுத்தும். சூரிய ஒளியினால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்து சமநிலையாகப் பேணுவதே புத்திசாதுரியமானது என ஆஸ்துமா நோய் தொடர்பான முன்னணி ஆய்வாளர் அல்பர்ட்டோ அர்னிடொ பென்னா தெரிவித்துள்ளார். மனித உடலுக்குத் தேவையான 90 வீதமான உயிர்ச்சத்து டி சூரிய ஒளியின் மூலம் உடலுக்குக் கிடைக்கப்பெறுகின்றது. ஆஸ்துமா நோயாளிகளின் உடலில் உயிர்ச்சத்து டி குறைந்தளவிலேயே காணப்படும்.

ஸ்பெய்னின் முக்கியமான ஒன்பது நகரங்களில் 45,000 சிறுவர் மற்றும் இளைஞர்களிடம் ஆஸ்துமா தொடர்பான ஆய்வு நடத்தப்பட்டுள்ளது. இந்த ஆய்வு தொடர்பான தரவுகள் சர்வசே பியோமெட்ரியல் ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஆஸ்துமா நோய் ஏற்படுவதற்குப் பிரதான காரணியாகக் காலநிலை மாற்றத்தைக் குறிப்படுகின்றனர். போதியளவு உயிர்ச்சத்து டி கிடைப்பதற்கு சூரிய ஒளி மிகவும் அவசியமானது. ஆஸ்துமா, கசம் போன்ற தொற்று நோய்களைக் கட்டுப்படுத்த உயிர்ச்சத்து டி மிகவும் இன்றியமையாதது என ஆய்வாளர் அர்னிடொ பென்னா தெரிவித்துள்ளார். நாள்தோறும் 20 முதல் 30 நிமிடங்கள் சூரிய ஒளியைப் பெற்றுக் கொள்வது போதியளவு உயிர்ச்சத்து டி யைப் பெற்றுக்கொள்ள வழிகோலும் எனக் குறிப்பட்டுள்ளார். குளிர்காலங்களில் சில நாடுகளில் போதியளவு சூரிய வெளிச்சம் கிடைக்காது. எனவே இவ்வாறானவர்கள் செயற்கையாக உயிர்ச்சத்து டியைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# பால் சார்ந்த உணவுப் பொருள்களை சாப்பிட்டால் மாரடைப்பு அபாயம் இல்லை



பாலாடைக்கட்டி மற்றும் பால் சார்ந்த பொருள்களைச் சாப்பிடுவதற்கு யாருக்குத்தான் விருப்பம் இருக்காது. இந்தப் பால் பொருள்களைச் சாப்பட்டால் கொழுப்பு அதிகரித்து மாரடைப்பு ஏற்படும் என்ற பொதுவான அச்சம் நிலவுகிறது.

இத்தகைய சுவையை விரும்புபவர்களுக்கு மகிழ்ச்சியான தகவலை ஆராய்ச்சியாளர்கள் தந்துள்ளனர். வெண்ணெய், பாலாடைக் கட்டி சாப்பிடுவதால் மாரடைப்பு அபாயம் அதிகரிக்காது என விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

நுண் ஊட்டச்சத்து நிபுணர்கள் ஆயிரக்கணக்கான நபர்களை ஆய்வு செய்தபோது அரைக் கிலோவுக்கு மேல் பாலாடைக் கட்டி சாப்பிட்டவர்களுக்கும் மாரடைப்பு அபாயம் ஏதும் ஏற்படாததைக் கண்டறிந்தனர்.

ரோட்டே தீவின் ப்ரௌன் பல்கலைகழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர் ஸ்டெல்லா அஸ்லி பெய்யான் தலைமையில் மேற்கொண்ட ஆய்வில் வெண்ணெய்ப் பொருள்கள் மாரடைப்பு அபாயம் அதிகரிக்காது எனத் தெரிவிக்கப்படுகிறது.

பால் மற்றும் பாலாடைக்கட்டி கூட்டுப் பொருள்களை கொண்டது. ஆய்வின் போது பால் பொருள்களுக்கும் மாரடைப்புக்கும் உள்ள தொடர்பு குறித்துத் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டது. குறிப்பாக பால் பொருள்களில் உள்ள கொழுப்புக் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

பாலில் உள்ள கொழுப்பு தீங்கு விளைவிக்காது என ஆய்வுக் குழு உறுதியாக நம்பாத போதும் அதில் உள்ள கல்சியம், விற்றமின் டி, பொற்றாசியம் ஆகியன இதய நோய் ஏற்படாமல் தடுக்க உதவுகின்றன என ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமும் 593 கிராம் பால் பொருள்கள் எடுத்துக் கொண்டபோது மாரடைப்புப் பாதிப்பு இல்லாததை ஆய்வாளர்கள் கண்டறிந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழை மக்களின் வாழ்வை மேம்படுத்த பாடுபடும் காரைநகர் வியாவில் ஆலயம்



(சென்ற வாரத்தொடர்ச்சி)

16 நூற்றாண்டில் ஒல்லாந்தர் ஆட்சியின் போது காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயப் பூசைகளை நடத்த விடாது துன்புறுத்தினர். அப்போது கவலையடைந்த பூசகர் மங்களேஸ்வரக் குருக்களின் மகனாகிய கனகசபா பதிக்குருக்கள் விக்கிரங்களைக் ஆலயத்திலிருந்து எடுத்துச் சென்று நில அறை ஒன்றில் வைத்துப் பூசைகள் செய்து வந்தார்.

அந்த வேளையில் வந்த ஒல்லாந்தப் படை வீரர்கள் ஆலயத்தையும் இடித்தும் அந்த விக்கிரங்களைக் கிணற்றுக்குள் போட்டுவிட்டு ஆலய ஆபரணங்கள் எல்லாவற்றையும் சூறையடிக் கொண்டு சென்றனர். அதன் பின்னர் காலக்கிரமத்தில் கிணற்றுக்குள் போடப்பட்ட ஐயனார் விக்கிரகத்தை அடியார் ஒருவர் எடுத்துக்கொண்டு வடக்கு நோக்கிச் சென்று திண்ணைக்களிக்கு அருகேயுள்ள மருதடியில் மறைத்து வைத்துச் சென்றார்.

இராமநாதபுரம் சேதுபதி மகாராசாவின் கட்டளைப்படி சேதுக்கரையைக் காவல்செய்து வந்த மறக்குடி மரபினரான ஆண்டி என்னும் பெரியார் தமது குலதெய்வமாகிய ஐயனாரை வழிபாடு செய்து தலயாத்திரை மேற்கொண்டு தமிழகம் எங்கும் சென்று இறுதியில் இலங்கைக்கு வந்து திருக்கேதீஸ வரம், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், கதிர்காமம் போன்ற புண்ணிய தலங்களையும் வழிபட்டனர்.

காரைநகர் ஐயனாருக்கு ஆலயம் சிறப்பாக அமைந்திருப்பதைக் கேள்வியுற்று அங்கே சென்றபோது கோயில் ஒல்லாந்தரால் இடித்து அழிக்கப்பட்ட நிலையில் காணப்பட்டது. ஐயனாரைத் தன் கண்குளிரக் கண்டு தரிசிக்க முடியவில்லையே என்று வருந்திய ஆண்டியாருக்கு இறைவன் கனவிலே தோன்றி ''யாம் ஊருக்கு வடக்கேயுள்ள திண்ணைக்களி என்னும் மேட்டுக்கு அண்மையில் நிற்கும் அரசின் கீழ் இருக்கின்றோம். வந்து தரிசிப்பீராக'' என்று அருள் செய்து மறைந்தார்.

கி.பி 1796 இல் ஆங்கிலேயர் ஆட்சி ஆரம்மாகியது. அவர்கள் போத்துக்கீசர், ஒல்லாந்தர் போலல்லாது மக்களுக்குச் சிறிது சமய சுதந்திரம் வழங்கினார்கள். அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் காரைதீவிலும் மக்கள் ஆலயங்களை அமைத்தனர். வியாவிலிலும் அடியார்கள் ஐயனாருக்கு ஒரு சிறு கோயில் அமைத்து வழிபட்டனர். பின்னர் பொருத்தமான இடத்தில் இப்போதுள்ள ஐயனார் கோயில் கட்டப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. காரைநகரில் இப்போது விளங்கும் ஐயனார் ஆலயம் அண்மைக்காலத்தில் வசந்தமண்டபம், மகாமண்டபம், சுற்றுமதில் என்பன அடியார்களால் அமைக்கப்பட்டு 1972 ஆம் ஆண்டு மகாகும்பாபிஷேகம் நடந்தேறியது. 17 ஆண்டுகளின் பின்னர் ஆலயம் மீண்டும் புனரமைக்கப்பட்டு 1989 இல் கும்பாபிஷேகம் நடந்தேறியது. தொடர்ந்தும் 1999 இலும் 2009 இலும் பல்வேறு புனருத்தாரணப் பணிகள் இடம்பெற்று மகாகும்பாபிஷேகம் இடம் பெற்றது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற இந்த ஆலயத்தில் ஆடி அமாவாசையைத் தீர்த்த உற்சவமாகக் கொண்டு முதல் பத்து நாள்கள் பெருந்திருவிழாவும் வேள்வியும் தைமாதத்தில் அபிஷேகமும் இடம்பெறுகின்றன. இந்த ஆலய சூழலில் பிதிர்க்கடன்களைச் செய்வதற்கு வசதியாகத் தீர்த்தக்கரை அமைந்துள்ளது. வாரிவளவு பிள்ளையார் கோயில், கருங்காலி முருகமூர்த்தி கோயில், கிழவன்காடு கதிர்காம சாமி கோயில் ஆகிய ஆலயங்களில் இருந்து சுவாமி இந்தத் தீர்த்தக்கரைக்குத் தீர்த்தமாட வருவது வழக்கம். இந்த ஆலயத்தில் அண்மையிலேயே புதிய தேர் மற்றும் தேர்முட்டி என்பன அமைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இந்த ஆலயத்தின் ஊடாக இன்று காரைநகரில் பல்வேறு சமய, சமூகப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆலயத்தின் பரிபாலகரும் தொழிலதிபருமான அகில இலங்கை சமாதான நீதிவான் மகாராணி க.சோமசேகரம் பல்வேறு அமைப்புக்கள், புலம் பெயர்ந்து வாழும் எமது ஊரவர்களிடம் நிதி உதவி பெற்று ஆலயங்களின் வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, சுகாதாரம், சமூக மேம்பாடு போன்றவற்றுக்கு உதவிபுரிந்து வருகின்றார்.

பாடசாலைகளுக்கான கணினி வழங்கல், பாலர் பாடசாலைகளுக்கான தளபாடங்களைப் பெற்றுக் கொடுத்தல், ஏழை மாணவர்கள் பாலர் வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை கற்பதற்கான உதவு தொகை வழங்கல், வறிய மாணவர்களுக்குத் துவிச்சக்கர வண்டிகள் வழங்கல், காரைப் பிரதேசத்தில் புலமைப் பரிசில், க.பொ.த சாதாரணதரம், உயர்தரம் ஆகிய பரீட்சைகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் மாணவர்களைப் பாராட்டிக் கௌரவிப்பதுடன், அவர்களுக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்குதல், காரைநகர் வைத்தியசாலையின் புனரமைப்புப் பணிகளுக்கு உதவிபுரிதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஏழை மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அவர்கள் சுயதொழில் மேற்கொள்வதற்கான உபகரணங்களைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற பணிகள் காரைநகர் பகுதி மக்களுக்காக ஆரம்பிக்கப்பட்டு இன்று குடாநாட்டின் பல பகுதிகளுக்கும் ஐயன் ஆலயம் ஊடாக இவ்வாறான பணிகள் இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், ஆலயத்தில் விபூதி தயாரித்தல், பசுமாடுகள் வளர்த்தல், தென்னம் தோட்டம் அமைத்துப் பராமரித்தல் என்பவற்றின் ஊடாக ஏனைய ஆலயங்களுக்கு விபூதி, பால், இளநீர்

டர்ஷிகன்

என்பன இலவசமாக வழங்கப்பட்டு வருகின்றன. அத்துடன், ஆலய வளாகத்தில் மூதறிஞர் க.வைத்தீஸ்வரக் குருக்களின் தந்தை கணபதீஸ்வரக்குருக்கள் ஞாபகார்த்தமாக அவரது பெயரில் நூலகம் அமைக்கப்பட்டு காரைநகர் பிரதேச மக்களின் அறிவுப் பசியைப் போக்குவதுடன், அங்கு கணினிக் கல்வியும் போதிக்கப்படுகின்றது. இந்த நூலகத்துக்கு வைத்தீஸ்வரக் குருக்கள் தன் வாழ்நாளில் சேகரித்த 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சமய, சமூக, அறிவியல் நூல்களை வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு இந்த ஆலயம் ஈழத்தில் சைவ ஆலயங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்வதுடன், ஐயனார் ஆலயத்தின் பரிபாலகர் மகாராணி க.சோமசேகரம் தனி ஒருவராக நின்று பல்வேறு சமய, சமூகப் பணிகளை மக்களை ஒன்றிணைத்துத் திறம்பட நடத்துவதைப் பாராட்டுவதுடன், அவரது சமூக, சமயப் பணிகள் தொடர எல்லாம் வல்ல பூரணை, புட்கலை சமேத ஐயனாரைப் பிரார்த்திப்போமாக. ★

# ஐரோப்பியர் காலத்தில் ஊர்காவற்றுறையில் தோற்றம் பெற்ற உருண்டிக் கோட்டை

பச்சைப் பசேல் என்று இருக்கும் மரங்கள், உள்ளே அமைந்துள்ள கட்டடங்களின் சிவந்த கூரைகள், சுற்று மதிலை அண்டி நிமிர்ந்து நிற்கும் காவற்கோபுரங்கள், படகுகளை நிறுத்தக்கூடியதாக உள்ள சிறிய துறைமுகம் போன்றவற்றைச் சூழ்ந்ததும் கடலில் பட்டுத் தெறிக்கும் சூரியவெளிச்சம் எனக் கண்கவர் அழகுடன் காட்சியளிக்கின்றது கடற்கோட்டை. இவற்றுடன் ஊர்காவற்றுறையின் ஆதிக் குடியேற்றப் பகுதியுமான உருண்டித் துறைமுகப் பகுதியில் தற்போது சிதைந்து காணப்படும் கோட்டையும் ஊர்காவற்றுறைப் பிரதேசத்தின் முக்கியத்துவம் மிக்க வரலாற்றுச் சின்னங்களாகும்.



ஊர்காவற்றுறைக் கோட்டை எனும் போது எல்லோர் மனதிற்கும் நினைவில் வருவது காரைநகருக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையில் கடலின் மத்தியில் அமைந்துள்ள கடற்கோட்டை மட்டுமே. உருண்டிக் கோட்டை குறித்துப் பெரிதாக மக்கள் அறிந்து கொண்டதாகவோ பேசிக் கொள்வதாகவோ இல்லை.

இலங்கையின் வடபுலத்தில் ஐரோப்பியர்களால் அமைக்கப்பட்ட கோட்டைகளில் மிகவும் முக்கியத்துவம் மிக்க ஒன்றாகக் காணப்படுவது 'ஹ மென் கில்' (FORT HAMMENHIEL) என அழைக்கப்படும் இந்தக் கடற்கோட்டையே ஆகும். ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி அதன் பாதுகாப்பை மையமாகக் கொண்டு இந்தக் கோட்டையை அமைத் தார்கள் என்று பொதுவாகக் கூறப்படுகின்றது. அதனால் ஒல்லாந்தரின் கடற்கோட்டை என்ற பேச்சு வழக்கும் உள்ளது. எனினும், இலங்கை- இந்தியாவுக்கு இடையில் பயணிக்கும் கப்பல்களைக் கண்டறிவதற்கும் குடா நாட்டின் வெளித் தொடர்புகளைக் கட்டுப்படுத்துவதற்கும் கேந்திர முக்கியத்துவம் மிக்கதாக 16 ஆம் நூற்றாண்டில் போத்துக்கேயர்களே இந்தக் கோட்டை அமைக்கப்பட்டு காரைநகரின் இலங்கைப் பகுதியில் உள்ள வெடியரசன் மாளிகைக்கு அருகில் கால்வாயின் மறுகரையில் இந்தக்கோட்டை அமைந்துள்ளதாகவும் இதனை 'சூரம்பன்' வென்றான் என்ற வெடியரசனின் வரலாறு கூறுவதாகவும் கதை உண்டு. வெடியரசன் காலம் கி.பி. முதலாம், இரண்டாம் நூற்றாண்டுகள் என்பதால் இந்தக் கதை ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இல்லை.

பொதுவாக இங்கு காணப்படுவது ஒல்லாந்தர் காலத்துக் கோட்டைகள் என்று கூறப்பட்டாலும் போத்துக்கேயர்களால் அமைக்கப்பட்ட கோட்டைகளைப் பின்பு ஒல்லாந்தர் தமது கட்டட பாணிகளுக்கேற்ப மாற்றி அமைத்துக் கொண்டனர் எனவும் வரலாற்றாளர்கள் கருதுகிறார்கள். ஆனால் 'அமிநால் டெமன்சீஸ்' என்ற போத்துக்கேயத் தளபதியே இந்தக் கோட்டையைக் கட்டியவனாவான்.

இந்தக் கோட்டையைக் கட்டப்படுவதற்கு முன்பாகவே உருண்டிக் கோட்டையை அவர்கள் கட்டியிருக்கலாம். காலப்பகுதியில் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயத்தை இடிந்த போத்துக்கேயர், அதன் கற்களை ஊர்காவற்றுறை சங்குமால் பகுதியில்

லக்ஸ்மன்

கோட்டை கட்டுவதற்காகப் பயன்படுத்தினர் எனவும் கற்களைப் படகு மூலம் லம்பஸ்தீன் என்ற போத்துக்கேயன் எடுத்து வந்தான் எனவும் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயம் பற்றிய வரலாற்றில் கூறப்பட்டுள்ளது. உருண்டிக் கோட்டைக்கும் ஹமென்கில் கோட்டைக்கும் இந்தக் கற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கலாம்.

தற்போது 'பழங்கோட்டை' என்று இங்குள்ள மக்கள் கூறும் உருண்டிக் கோட்டை அறுபது வருடங்களுக்கு முன் 1950 காலப்பகுதியில் நல்ல நிலையில் இருந்துள்ளதாகவும் பழங் கோட்டையின் கோயில், கூரை ஓடுகள் என்பன தேமின்றிக் காணப்பட்டன எனவும் முதியவர்கள் சிலர் தெரிவித்தனர்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் வெளியீடான
கல்விச்சுடர்
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு
தயார்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு

ஆசிரியர்
திரு.எஸ். தீபன்
பரீட்சை இலக்கம்: 02



# தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011


பெயர்/சுட்டெண்:......................... | வினாத்தாள்-1 | நேரம்: 45 நிமிடங்கள்

* 1ஆம், 2ஆம் வினாக்களில் தரப்பட்ட சொற்றொடர்களுடன் மிகப்பொருத்தமாக அமையும் உருவைத் தெரிவுசெய்க.


01. கல்வி - மாணவர் - வாசிப்பு




02. மின்சாரம் - ஒலி - தகவல்



* 3ஆம், 4ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள 4 உருக்களில் ஒன்று மற்றைய உருக்களில் இருந்து வேறுபட்டது. அவ் உருவைத் தெரிவுசெய்க.

03. 

04. 

* 5ஆம், 6ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள பழமொழிகள் உணர்த்தும் கருத்தினை தெரிவுசெய்க.

05. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
   1. மின்னும் தன்மை உடையவை எல்லாம் பொன்னாக மாட்டாது.
   2. பொன் எல்லாச் சந்தர்ப்பத்திலும் மினுக்கமுடையது அல்ல.
   3. கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை அல்ல.

06. காகம் திட்டி மாடு சாகாது.
   1. காகம் திட்டுவதால் மாட்டுக்கு ஒன்றும் நடக்கப் போவதில்லை.
   2. வீணான பழிச்சொல்லுக்கு யாரும் பயப்படத்தேவையில்லை.
   3. காகத்தால் ஏற்படுவதில்லை சாவு. அது இயற்கையானது.

07. இவ் உருவில் அமையும் முக்கோணிகளின் எண்ணிக்கை யாது?



1. 12
2. 13
3. 15

* 8ஆம், 9ஆம் வினாக்களில் தரப்பட்டுள்ள கட்டங்களுள் உள்ள உருவங்களில் ஏதோ ஒரு கட்டத்தில் உள்ள உருவங்களுக்கிடையில் தொடர்பற்ற தன்மை காணப்படுகின்றது. அக் கட்டத்தைத் தெரிவுசெய்க.

08. 

09. 


* பின்வரும் பாடல் அடிகளைக் கொண்டு 10ஆம், 11ஆம் வினாக்களுக்கு விடை தருக.
  ''தோளில் கலப்பை தூக்கிடுவான்
  துரத்தி மாட்டை ஓட்டிடுவான்''

10. இப்பாடல் அடிகளால் விவரிக்கப்படும் தொழில் யாது?
   1. மேய்ச்சல் 2. உழவு 3. வண்டிபூட்டல்

11. இங்கு கலப்பை எனக் கூறப்படுவது யாது?
   1. ஏர் 2. கரண்டி 3. தடி


12. பின்வரும் எண்கோலத் தொடரில் அடுத்து வரும் எண்ணைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.
   1, 3, 7, 15, 31, ..............................
   1. 63 2. 67 3. 71

13. A எனும் இடத்தில் வரவேண்டிய பெறுமானம் யாது?




1. 2
2. 3
3. 4

14. B எனும் இடத்தில் வரவேண்டிய பெறுமானம் யாது?





1. 9
2. 12
3. 15

15. கதிரை : தளபாடம் எனின், பேனா : ..........................................................
   1. பென்சில் 2. மை 3. எழுதுகருவி

16. சொல் : எழுத்து எனின், பந்தி : ..........................................................
   1. கட்டுரை 2. வாக்கியம் 3. நிறுத்தற்குறி

* தரப்பட்டுள்ள வரிப்படத்தின் உதவியுடன் 17 தொடக்கம் 19 வரையான வினாக்களுக்கு விடை தருக. மல்லிகை மலரினை விரும்புவோர் வட்டத்திலும், ரோசா மலரினை விரும்புவோர் செவ்வகத்திலும், தாமரை மலரை விரும்புவோர் சதுரத்திலும் காட்டப்பட்டுள்ளது.






17. மல்லிகை, ரோசா, தாமரை ஆகிய மூன்று மலர்களையும் விரும்புபவரின் பெயர் யாது?
   1. நிமலன் 2. வசந் 3. கதிரவன்

18. பின்வருவோரில் தாமரையையும் ரோசாவையும் மட்டும் விரும்புபவரின் பெயர் யாது?
   1. நிமலன் 2. நிசார் 3. பசீர்

19. மல்லிகையை மட்டும் விரும்புபவரின் பெயர் யாது?
   1. வசந் 2. கதிரவன் 3. வேணு


20. பின்வரும் தொடர்கள் தொடர்ச்சியாக அமையும் மிகப்பொருத்தமான ஒழுங்கு யாது?
   A - பொழுது சாயும் வேளையில் B - உல்லாசமாகத் திரிந்து
   C - வானத்தில் வட்டமிட்டபடி
   D - பறவைகள் கூட்டம் கூட்டமாக
   E - இருப்பிடத்திற்குச் சென்றன
   1. CBDEA 2. DBCAE 3. DCBAE

21. 

22. சிறுவன் ஒருவன் தினந்தோறும் ஆங்கில அகராதி ஒன்றில் சொற்களை மனப்பாடம் செய்யும் விதம் பின்வருமாறு அமைந்துள்ளது.
''குறித்த ஒரு நாளில் மனப்பாடம் செய்யும் சொற்களை விட அடுத்தநாள் மனப்பாடம் செய்துகொள்ளும் சொற்கள் இருமடங்காகும்.'' எனின், அச் சிறுவன் முதலாம் நாள் 2 சொற்கள் மனப்பாடம் செய்தான். அவ்வாறெனின், ஆறாம் நாள் முடிவில் எல்லாமாக எத்தனை சொற்களை சிறுவன் மனப்பாடம் செய்திருப்பான்?
   1. 64 2. 96 3. 126

* தாயக்கட்டைகளின் அமைவு ஒழுங்கைக் கொண்டு 23ம், 24ம் வினாக்களுக்கு விடை தருக.




23. A இன் எதிர்ப்பக்கமாக அமையும் எழுத்து எது?
   1. F 2. E 3. D

24. F இன் எதிர்ப்பக்கமாக அமையும் எழுத்து எது?
   1. C 2. B 3. E

25. மொசாம்பிலின் தந்தையிடம் ரூபா 150.00 இருந்தது. அதில் அவர் தன்மகன் மொசாம்பிலிக்கு ரூபா 25.00ஐக் கொடுத்தபோது தந்தையினதும், மொசாம்பிலினதும் பணம் சமனாக இருந்தது எனின், ஆரம்பத்தில் மொசாம்பிலிடம் இருந்த பணம் எவ்வளவு?
   1. ரூபா 125.00 2. ரூபா 100.00 3. ரூபா 150.00

(21ஆம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொதிப்பேற்றும் 'கூல்' சோடா!

வெயில் 'சுள்'ளென்று சுட்டெரித்துக் கொண்டிருந்தது.மத்தியான வெயிலில் இருந்து தப்பிக்கும் வேகத்தோடு, யாழ்ப்பாணம் நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்துகொண்டிருந்தார் அந்த ஆசிரியர். அவர் கிளிநொச்சிப்பகுதியிலுள்ள பாடசாலையில் கற்பிப்பவர். வெயிலோடு சோளகக் காற்றும் சேர்ந்து கொள்வதால், ஆனையிறவு வெளி கடப்பதற்கிடையில் உடம்பிலுள்ள ஈரப்பதன் முழுதும் உறிஞ்சப்பட்டு விடும். நாக்கு கருவாடாக மாறியிருக் கும். அப்போது ஒரு சொட்டுத் தண் ணீர் குடித்தாலும் அது தேவாமிர்தம்தான்.

மாஸ்ரர் பொக்கற்றைத் தொட்டுப் பார்த்தார். 30 ரூபா தட்டுப்பட்டது. ஒரு சோடா வாங்கலாம். இன்று அவர் எதிர்பாராத செலவுகளால் காலையில் கொண்டு சென்ற ஆயிரம் ரூபா இப் போது 30 ரூபாவாகச் சுருங்கிவிட்டது. இயக்கச்சிச் சந்தியில் கடைகளில் அடுக் கப்பட்டிருந்த சோடாப் போத்தல் கள் மாஸ்ரரை வா! வா! என்று ஆசை யூட்டின.

ஆனாலும் தாகத்தை ஒருவாறு அடக்கிக் கொண்டு அக்ஸிலேட்டருக்கு வேகம் கொடுத்தார் மாஸ்ரர்.

''இப்ப குடிச்சால் பிறகு சாவகச்சேரி போக முதல் திரும்பவும் தண்ணி விடாய்க்கும். எதுக்கும் கொடிகாமத்தில போய்க் குடிப்பம்''.

கண்மண் தெரியாத வேகத்தில் பறந்த மோட்டார் சைக்கிள் கொடிகா மத்தில் தன்பாட்டில் அமைதியானது. கண்ணெதிரே குளிர்பானங்களோடு நிறைந்திருந்த கடைக்குள் மாஸ்ரர் நுழைந்தார்.

''ஒரு சின்ன பெப்ஸியொண்டு தாங்கோ''. மாஸ்ரரின் கோரிக்கை நிறைவேற்றப்பட்டது. குளிர்சாதனப் பெட்டிக்குள் இருந்த சோடா மாஸ்ரரின் கைகளுக்குள் வந்தது. 30 ரூபாவை கடைக்காரரிடம் நீட்டினார் அவர். அதை எண்ணிப் பார்த்த கடைக்காரர் ''மாஸ்ரர்! இன்னும் ஒரு 5 ரூபா தர வேணும்'' என்றார்.

மாஸ்ரருக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஒரு சிறிய (படி) சோடாவின் விலை 30 ரூபா என்றுதான் அவருக்குத் தெரியும். 'நாளுக்கு நாள் ஒவ்வொரு பொருளும் விலையேற்றப்படுவது போல சோடாவும் விலையேறி விட்டதோ?' என்ற சந்தேகத்தோடு, அதன் விலை அச்சிடப் பட்டுள்ள இடத்தை அவதானித்தார்.

## கோணல் கோலங்கள்

அதில் 30 ரூபா என்றே இருந்தது.

''அண்ணை! அடிச்ச விலை 30 ரூபாதானே? பிறகென்னத்துக்கு 35 ரூபா கேக்கிறியள்?''

இது மாஸ்ரரின் சந்தேகம்.

''நீங்கள் எல்லாரும் அடிச்ச விலையைப் பாக்கிறிங்கள். அதைக் 'கூல்' பண்ணுறதுக்கு எங்களுக்கு 5 ரூபா முடியுது. இஞ்ச கூல் பண்ணின சோடா 35 ரூபா. கூல் இல்லாத சோடாதான் 30 ரூபா''. கடைக்காரர் தன் விலை நிர்ணய விளக்கமளித்தார்.

''என்னண்ணை புதுக்கதை சொல்றீங்கள்? கிளிநொச்சியில கூல் பண்ணின சோடா 30 ரூபாக்கு வாங்கினனான்''.

''அப்ப அங்க போய்க் குடியுங்கோ. இஞ்ச இதுதான் விலை?''

''என்னண்ணை அநியாயம்? ஏனிப்படி விலையைக் கூட்டி விக்கிறீங்கள்? அவங்களுக்கும் கூல் பண்றதுக்கு காசு போகும்தானே? அப்பிடியிருந்தும் அவங்களால 30 ரூபாவுக்கு விக்கமுடியுது தானே?''

மாஸ்ரர் 'எவனோ ஒருவன்' படத்தில் வருகின்ற மாதவன் போல பொங்கியெழுந்து, நியாயம் கேட்கப் புறப்பட்டார்.

பதிலுக்குக் கடைக்காரரிடமிருந்து தூஷணை வார்த்தைகள் புறப்பட்டன. காது கொடுத்தே கேட்க முடியாத அந்த வார்த்தைப் பிரயோகங்கள் மாஸ்ரரின் சோடாக் கனவைத் தகர்த்து அவ்விடத்திலிருந்து அவசரமாக வெளியேற்றின. இப்போதெல்லாம் 'சோடா' என்ற சொல்லைக் கேட்டதுமே தலை தெறிக்க ஓடுகிறாராம் அந்த மாஸ்ரர்.

இதுபோன்ற தம்மிஷ்டப்படியான விலை நிர்ணயங்களில் கடைக்காரர்கள் ஈடுபடுகின்றனர். அதுவும் குளிர்பான விடயங்களில் அவர்கள் சொன்னதுதான் விலை. அதற்குக் 'கூல்' என்ற காரணத்தைக் கூலாகச் சொல்லி நுகர்வோரைக் கொதிப்பேற்றுவார்கள். உண்மையில் குளிர்பாணங்கள் மட்டுமல்லாது, அவற்றைக் குளிராக வைத்திருப்பதற்குரிய குளிர்சாதனப் பெட்டிகளையும் மென்பான நிறுவனங்கள் வழங்குகின்றன.

ஆக கடைக்காரர் களுக்கு மின்சாரச் செலவு மட்டுமே ஏற்படும். அதுவும் கணக்கிடப்பட்டே - லாப மீட்டக் கூடிய வகை யில்- மென்பானங்களை நிறுவனங்கள் கடைகளுக்குக் கொடுக்கின்றன.

ஆனால் அந்த இலாபம் போததென்று பொல்லால் அடிக்கும் விலைகளை கடைக்காரர் பலரும் தாமே நிர்ணயம் செய்கின்றனர்.

சிறியரகச் சோடாக்களுக்கு 5 ரூபாவும் , பெரிய 'மெகா சைஸ்' சோடாக்களுக்கு 10 ரூபாவும் மேலதிகமாக பல கடைக்காரர்கள் அறவிடுகிறார்கள்.

பாவம் நுகர்வோர்! வெயில் கொடுமையால் கடைக்காரர் சொல்கின்ற பணத்தைக் கொடுத்து அவற்றைக் குடிப்பதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்?

தனியே குளிர்பானங்களுக்கு மட்டும்தான் இந்த 'அறாவிலை' என் றில்லை. நிலைமையைப் பொறுத்து கடைக்காரர்கள் பொருள்களின் விலைகளையும் அடிக்கடி கூட்டுவதுண்டு. வாடிக்கையாளர்கள் அவசரத்தோடு கடைப் படிகளில் ஏறியதைக் கண்டவு டனேயே கடைக்காரர்களுக்கு புளுகம் வந்துவிடும். ஏனெனில் இப்படி அவசரத்தோடு வருகின்றவர்களில் அனேகம் பேர் சொன்ன விலையைக் கொடுத்துவிட்டு பொருள்களை வாங்கிக் கொண்டு சென்றுவிடுவார்கள். பொருளில் குறிக்கப்பட்ட விலையைக் கவனிக்க அவசரமும், நேரமும் அவர்களுக்கு இடம் கொடுப்பதில்லை. எனவே வழமை யான விலையை விடவும் 5, 10 ரூபாக்கள் அதிகமாக வைத்து அந்தப் பொருள்களை வருபவர்களின் தலைகளில் சுமத்தி விடுகிறார்கள்.

இதனைத் தடுப்பதற்கு இருக்கின்ற ஒரேவழி சகல பொருள்களுக்கும் விலைகள் நிர்ணயம் செய்யப்பட்டு அவை ஒவ்வொரு வர்த்தக நிலையங்களிலும் நுகர்வோருக்குத் தெரியக்கூடிய வகையில் காட்சிப்படுத்தப்பட வேண்டும். இவ்வாறு விலை நிர்ணயப் பட்டியல் வியாபார நிலையங்களில் வைக்கப் பட வேண்டும் என அரச அதிகாரிகள் அவ்வப் போது அறிவித்தாலும் கூட அதனை நடைமுறைக்குக் கொண்டு வர வர்த்தகர்கள் பின்னடிக்கிறார்கள்.

காலப்போக்கில் அதிகாரிகளும் தாம் போட்ட கட்டளைகளை மறந்து விடுவதும் வர்த்தகர்களுக்கு வசதியாகிவிட்டது.

ஓடுகாலி

---


(20ஆம் பக்கத் தொடர்ச்சி)

26. பொருள் ஒன்றின் விலை ரூபா 453.50 எனக் குறிப்பிடப்பட்டிருந்தது எனின், இவ் விலைக்குரிய இரகசியக் குறியீட்டு நிலை யாது?

1. STV.SP 2. PVK.VK 3. STN.TW


27. பொருள் ஒன்றின் இரகசியக் குறியீடு NMP.ZP எனக் குறிப்பிடப்பட்டிருந்தது எனின், அப்பொருளின் விலையாக இருக்கக்கூடியது யாது?
 1. 952.25 2. 845.35 3. 758.68

28.



.......................................

அடுத்து வரும் உரு எது?
 1. 2. 3.




* 29ஆம், 30ஆம் வினாக்களில் மிகச் சரியான கருத்தை வெளிப்படுத்தும் வாக்கியத்தைத் தெரிவுசெய்க.

29. 1. அமர்ந்திருந்த மனிதன் சவாரி மீது குதிரை செய்தான்.
 2. சவாரி செய்த குதிரை மனிதன் மீது அமர்ந்திருந்தது.
 3. குதிரை மீது அமர்ந்திருந்த மனிதன் சவாரி செய்தான்.

30. 1. குருவிக்குஞ்சை பருந்து இலாவகமாக வட்டமிட்டபோது வானத்தில் தூக்கிச்சென்றது.
 2. வானத்தில் வட்டமிட்ட பருந்து இலாவகமாக குருவிக்குஞ்சை தூக்கிச் சென்றது.
 3. வானத்தில் வட்டமிட்டபோது குருவிக்குஞ்சு பருந்தை இலாவகமாக தூக்கிச் சென்றது.

31. உருளை வடிவான A மரக்குற்றியில் இருந்து எத்தனை B அளவிலான மரக் குற்றிகளை அரிந்து எடுக்கலாம்?




 1. 10
 2. 15
 3. 20

* A,B எனும் இருவருக்கு இடையிலான தூரம் 1km ஆகும். இருவரும் ஒருவரை ஒருவர் நோக்கி, A நிமிடத்திற்கு 150m தூர வேகத்திலும் B நிமிடத்திற்கு 100m தூர வேகத்திலும் பயணிக்கின்றனர்.




32. A,B இருவரும் எந்தப்புள்ளியில் சந்திப்பர்?
 1. 5 2. 6 3. 4

33. A,B இருவரும் எத்தனையாவது நிமிட நிறைவில் சந்திப்பர்?
 1. 4 2. 5 3. 6


* 34ஆம், 35ஆம் வினாக்களில் மிகப்பொருத்தமான அடைமொழிச் சொற்களைத் தெரிவுசெய்க.

34. ............................................... மழை பெய்ததால் மரங்கள் பாறி விழுந்தன.
 1. வேகமான 2. அடை 3. கனதியான

35. ............................................... தெருக்கள் அபிவிருத்தி செய்யப்பட உள்ளன.
 1. நீண்ட 2. உயரமான 3. பெருந்

36. வழுக்கு மரம் ஏறுதல் போட்டி ஒன்றில் ஒருவர் ஒரு தடவை 1m உயரம் ஏறினால் அரைவாசித் தூரம் கீழே வந்து விடுவார் எனின், 4m உயரத்தில் இருக்கும் கொடியை எடுப்பதற்கு அவர் எத்தனை தடவை முயலவேண்டும்?
 1. 6 2. 7 3. 8

* இவ்வரிப்படத்தின் உதவியுடன் 37ஆம், 38ஆம் வினாக்களுக்கு விடைதருக.




37. மாம்பழம் ஒன்றின் விலை யாது?
 1. ரூபா 20.00 2. ரூபா 22.00 3. ரூபா 24.00

38. ஒரு வாழைப்பழத்தின் விலை யாது?
 1. ரூபா 7.00 2. ரூபா 6.00 3. ரூபா 8.00

* 39ஆம், 40ஆம் வினாக்களுக்கு பின்வரும் சட்டத்தைப் பயன்படுத்திவிடை தருக.

39. இங்கு எழுத்து ''A'' யை விட எழுத்து ''அ'' அதிகம் எனில், முதலாவது நிரையின் இறுதி எழுத்தைச் சுற்றி வட்டமிடுக. அவ்வாறு இல்லை எனின், முதலாவது நிரலில் உள்ள முதலாவது இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.

40. இலக்கம் ''2'' ஐ விட இலக்கம் ''3'' குறைவாக உள்ளதெனின், இரண்டாவது நிரையில் உள்ள "5" ஆவது கூட்டத்திற்கு புள்ளடி இடுக. அவ்வாறு இல்லையெனின், இறுதி நிரையில் இறுதி இலக்கத்திற்கு புள்ளடி இடுக.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| A | 1 | ச | அ | A | ன் | ஐ | 3 |
| E | ல் | B | 2 | எ | ச | 2 | அ |
| ச | 3 | வி | மு | ர | 3 | வ | 4 |
| அ | ட் | ந் | ங் | B | ச | பு | ம் |
| த | C | இ | ற் | 3 | 6 | 6 | D |
| ல | ட | க | 5 | 6 | 3 | இ | 2 |
| 4 | 5 | 7 | ப் | C | வ | | த |
| A | இ | வ | அ | 2 | ச | B | சி |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜப்பான் உணவுப் பொருள்கள் மீதான தடையைத் தளர்த்த சீனா இணக்கம்

டோக்கியோ, மே 25

ஜப்பானில் ஏற்பட்ட ஆழிப் பேரலை பேரழிவையொட்டி அந்நாட்டின் உணவுப் பொருள்கள் இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள தடையைத் தளர்த்த சீனா ஒப்புக்கொண்டுள்ளது.

ஜப்பான், சீனா, தென்கொரியா ஆகிய நாடுகளின் பிரதமர்கள் கலந்துகொண்ட 3 நாள்கள் மாநாடு ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அதன்போது, ஜப்பானில் கடந்த மார்ச் மாதம் 11ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை, பூகம்பம், அதனால் ஏற்பட்ட அணுமின் நிலையப் பாதிப்பு ஆகியவை குறித்து இந்த மாநாட்டில் விவாதிக்கப்பட்டது.

மாநாட்டில் ஜப்பான் பிரதமர் நெடோ கான், சீனப் பிரதமர் வென் ஜியோபோ, தென்கொரிய ஜனாதிபதி லீ மியுங்க்பாக் ஆகியோர் கலந்துகொண்டு விவாதம் நடத்தினர்.

இயற்கைப் பேரழிவிலிருந்து ஜப்பான் நாடு மீளத் தேவையான உதவிகளைச் செய்வோம் என சீனா, கொரியா ஆகிய நாடுகள் உறுதியளித்தன.

அணுக்கதிர் கசிவையடுத்து ஜப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் 12 வகை உணவுப் பொருள்களுக்கு சீனா தடை விதித்திருந்தது. இதில் இரு பொருள்கள் மீதான தடையை விலக்கிக் கொள்கிறது என சீனப் பிரதமர் வென் ஜியாபோ அறிவித்தார்.

சீன மக்கள் ஜப்பானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ள ஊக்கமளிக்கப்படும் என்றும் உறுதியளித்தார். இதற்காக அனுமதிபெற்ற ஜப்பானைச் சேர்ந்த சுற்றுலா முகவர்கள் சீனாவில் அனுமதிக்கப்படுவர் என்றார்.

ஜப்பான், சீனா, கொரியா ஆகிய பிராந்தியங்களில் உணவுப் பாதுகாப்பு அவசியம் குறித்தும் மாநாட்டில் விவாதிக்கப் பட்டது.

புகுஷிமா அணுமின் நிலையத்திலிருந்து அதிகளவு கதிரியக்க வீச்சு தண்ணீரை ஜப்பான் கடலில் திறந்துவிட்டதற்கு சீனப் பிரதமரும், கொரிய ஜனாதிபதியும் அவர்களது அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டனர்.

மாநாடு தொடங்குவதற்கு முன் அதாவது சனிக்கிழமை சீனப் பிரதமர் வென்ஜியோபோ, தென்கொரிய ஜனாதிபதி லீ மியுங்க்பாக், ஜப்பான் பிரதமர் நெடாகான் ஆகியோர் புகுஷிமா அணுஉலை அமைந்துள்ள பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர். (த)

# ஸ்ட்ராஸ்கானை பிணையில் விடுவிக்க மனைவி வாஷிங்டன் வீட்டை அடமானம்

வாஷிங்டன், மே 25

ஐ.எம்.எவ் முன்னாள் தலைவர் டொமினிக் ஸ்ட்ராஸ் கானை பிணையில் விடுவிக்க வாஷிங்டனிலுள்ள வீட்டை அவரது மனைவி அடமானம் வைத்தமை தெரியவந்துள்ளது.

ஐ.எம்.எவ் தலைவராகவிருந்த டொமினிக் ஸ்ட்ராஸ் கான், மன்ஹாட்டான் ஹோட்டல் ஊழியரை பாலியல் ரீதியாகத் துன்புறுத்தினார் எனக் குற்றச்சாட்டு எழுந்தது.

அவர் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து அவரை அமெரிக்கப் பொலிஸார் கைது செய்து நியூயோர்க் சிறையிலடைத்தனர்.

சில தினங்களுக்கு முன் பிணையில் அவர் வெளியே வந்தார். 27 கோடி ரூபா மதிப்பிலான பத்திரத்தைத் தாக்கல் செய்தால் மட்டுமே ஸ்ட்ராஸை பிணையில் விடுவிக்க முடியும் என்று நீதிமன்றம் கூறிவிட்டது.

ஸ்ட்ராஸின் மனைவி வாஷிங்டனிலுள்ள தனக்குச் சொந்தமான வீட்டை அடமானம் வைத்து ரூபா 27 கோடிக்கான பத்திரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்.

இதையடுத்தே அவருக்கு நீதிமன்றம் பிணை வழங்கியது எனப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

வாஷிங்டனிலுள்ள அந்த வீட்டை கடந்த 2007இல்தான் ஸ்ட்ராஸின் மனைவி வாங்கினார். ஆசையோடு வாங்கிய அந்த வீட்டை அடமானம் வைக்க நேர்ந்தமை ஸ்ட்ராஸின் மனைவிக்கு இலேசான சோகத்தை ஏற்படுத்தினாலும், கணவரை பிணையில் மீட்டுவிட்ட மகிழ்ச்சியில் உள்ளார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (த)

# ஐஸ்லாந்தில் மீண்டும் எரிமலை வெடிப்பு; நான்கு விமான நிலையங்கள் மூடப்பட்டன

ரெய்க்ஜாவிக், மே 25

ஐஸ்லாந்தின் தலைநகரான ரெய்க்ஜாவிக் அருகே உள்ள கிரிம்ஸ்வோட் எரிமலை திடீரென வெடித்தது.

இதனால் அந்த எரிமலை அமைந்துள்ள பகுதியில் வசிப்பவர்கள் வெளியேற்றப்பட்டு வேறு இடங்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே குழம்புடன் புகையையும், சாம்பலையும் எரி மலை வெளியேற்றி வருகிறது. இந்தச் சாம்பல் 20 கிலோ மீற்றர் உயரத்துக்குக் காற்றில் பரவி அருகே உள்ள ரெய்க்ஜாவிக் நகரில் படர்ந்து கிடக்கிறது.

இது பரவி ஐஸ்லாந்திலுள்ள விமான நிலையங்களுக்கும் சென்றடைந்துள்ளது. இதனால், விமானப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. கெப்லாவிக் உள்ளிட்ட 4 விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இதைத் தொடர்ந்து வெளிநாடுகளுக்குச் செல்ல முன்பதிவு செய்திருந்த பயணிகள் பெரும் அவதிக்குள்ளாகினர்.

எரிமலை தொடர்ந்து வெடித்து சாம்பல் பரவும் பட்சத்தில் அது மற்ற ஐரோப்பிய நாடுகளுக்கும் பரவும். இதனால் கடந்த ஆண்டைப் போன்று மற்ற நாடுகளிலும் விமானப் போக்குவரத்து பாதிக்கும் அபாயம் உள்ளது.

ஐஸ்லாந்தில் கடந்த ஆண்டு ஒரு எரிமலை வெடித்தது. அதிலிருந்து வெளியேறிய புகையும், சாம்பலும் காற்றில் பரவின. இதனால் ஐரோப்பா கண்டத்தில் விமானப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டது. (த)

# டுபாய் சிறைக் கைதிகளுக்கென பிரத்தியேக தொலைக்காட்சி சேவை

டுபாய், மே 25

டுபாய் மத்திய சிறைச்சாலையில் கைதிகளுக்கென்று பிரத்தியேகமாக தொலைக்காட்சிச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.வளைகுடா நாடுகளிலேயே டுபாய் சிறைச்சாலையில்தான் கைதிகளுக்கென்று முதல் தடவையாகப் பிரத்தியேக தொலைக்காட்சிச் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த தொலைக்காட்சிச் சேவையின் ஆரம்ப விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் உயர் பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இந்தத் தொலைக்காட்சிச் சேவை தினசரி 18 மணி நேரம் பொதுவான நிகழ்ச்சிகளையும், மற்ற நேரத்தில் கைதிகள் தயாரிக்கும் நிகழ்ச்சிகளையும் ஒளிபரப்பும்.

''டுபாயின் மத்திய சிறையை சர்வதேச தரத்தில் உயர்த்தும் நோக்கில் இந்த தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தொகுக்க கைதிகளை ஊக்குவிப்பதன் மூலம் அவர்களது சிந்தனையை ஆக்கபூர்வமாக மாற்றலாம். இதன் மூலம் அவர்கள் மறுவாழ்வு பெற்று எதிர்காலத்தில் இந்தச் சமூகத்துக்கு பயனுள்ளவர்களாக மாறுவதற்கான வாய்ப்புள்ளது'' என்று டுபாய் பொலிஸ் அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)


## வாழ்த்துகிறோம்



மணிவிழாக் காணும் எமது
பாடசாலை அதிபர்
திரு.குமரேஸ்வரநாதன்
(யா/வேலணை கிழக்கு,
ம.வித்தியாலயம்)
அவர்கள் பணியில்
இருந்து ஓய்வுபெறும்
இந்நாளில் மேலும்
பல்லாண்டு காலம்
சிறப்புடன் வாழ
வேண்டுமென
வாழ்த்துகின்றோம்.

(4542) (38)

வாழ்த்தும் மாணவர்கள்:
செ.சுவேதா, செ.சுகனியா, உ.டினோதன்.






சீட்டிழுப்பு இலக்கம் 752 திகதி 23-05-2011

வெற்றி எண்கள்

07 23 38 59 X (ஆங்கில எழுத்து)

ஜக்பொட் பரிசு ரூ. 12,109,410/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 12,109,410/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 01 | 400,000/= | 400,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 19 | 50,000/= | 950,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 337 | 1,000/= | 337,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 561 | 1,000/= | 561,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15095 | 60/= | 905,700/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 7996 | 40/= | 319,840/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 197372 | 20/= | 3,947,440/= |
| ஆங்கில எழுத்து | 28642 | 20/= | 572,840/= |
| | | மொத்தம் ரூ. | 7,993,820/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா 50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மாத்தறை | 600040900-4-34 |
| கம்பஹா | 600047730-4-34 |
| அம்பாந்தோட்டை | 600040148-2-42 |
| கேகாலை | 600049797-4-14 |
| கொழும்பு | 600052161-3-23 |
| கொழும்பு | 600059988-9-49 |
| கம்பஹா | 600051921-7-37 |
| நுவரேலியா | 600043937-2-12 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,393,820/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்

ரூ. 12,495,530/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள்
2011 மே 26 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

Enriching Your Life

DEVELOPMENT LOTTERY

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை,
யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொ.பே. 2333516/7



## வியாபாரமொன்றிற்காக முதலீடு செய்யமுடியுமா?

எமது நிறுவனம் குடிதண்ணீர் பழவகை பானங்கள் மற்றும் நுகர்வோர் பொருள்களை உற்பத்தி செய்யும் முதல் தரமான நிறுவனமாகும்.

எமது வியாபாரத்தின் உற்பத்தித் தேவைகள், மற்றும் வியாபாரச் சந்தையின் கோரிக்கைகளின் பேரில் பிளாஸ்டிக் போத்தல் உற்பத்தியை ஆரம்பம் செய்வத்றகான பின்னணிகள் சகலத்தையும் செய்துள்ளோம்.

அதற்காக நிதி ரீதியான பங்களிப்பு (50லட்சம் தொடக்கம் 150 இலட்சம் வரை) பெற்றுத்தரமுடியுமானால், உங்களுக்கு அந்த வியாபாரத்தில் முதலீட்டாளராகவோ அல்லது பங்குதாரராகவோ ஆக முடியும். மிகவும் குறுகிய காலத்திற்குள் அதன் பிரதிபலன்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

விசாரணைக்கு : 077-9082864



## Computer Express
Institute of Information Technology

பாடசாலை மாணவர்களுக்கும், கணனி ஆர்வலர்களுக்குமான தொழில்சார் கற்கைநெறிகள் ஆரம்பமாகின்றன....

| | | |
|---|---|---|
| * Dip. in computer science. | 4 Months | 1000/= |
| * Dip. in web page Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Graphic Designing. | 4 Months | 1000/= |
| * Dip. in Desk top publishing. | 4 Months | 1000/= |
| * Dip. in Hardware Engineering. | 3 Months | 1000/= |
| * Dip. in Auto CAD. | 3 Months | 1000/= |
| * Dip. in MicroSoft Office. | 3 Months | 1000/= |
| * Dip. in Acc.Package. (MYOB,Accpac,Q Book) | 3 Months | 1000/= |
| * Honours Dip. in computer science. | 5 Months | 1000/= |

Advances Courses

| | | |
|---|---|---|
| Diploma in Video Editing | 4Months | 1000/= |
| Diploma in Multimedia | 4Months | 1000/= |

31.05.2011 மட்டுமே பதிவுகளுக்கு முந்துங்கள்

மேலும் எமது நிறுவனத்தில்...
Fast track Courses ஆக
1Week course / 1 Month Course
Monday to Friday 9Am to 3.30Pm
Diploma in Graphic Designing
Diploma in Video Editing
Diploma in Hardware Engineering.
Diploma in Acc.Package.
Course Fee 1000/=

Batch I - 25.05.2011 9Am or 3pm Batch II - 27.05.2011 9Am or 3pm
Batch III -28.05.2011 9Am or 3pm Batch IV - 29.05.2011 9Am or 3pm

சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி
பிரபல விரிவுரையாளர்களினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.

Tally புதிய பிரிவுகளும் ஆரம்பமாகின்றன

No.15 ,Sirampiyady lane, off Stanly Road, (Cosy Hotel 2nd floor) Jaffna.
021 222 8250, 0777222422 , 0774907444


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலிபான்கள் கைப்பற்றிய கராச்சி கடற்படைத்தளம் கடும் சமருக்குப் பின் பாக். இராணுவத்தால் மீட்பு

## 13 சிப்பாய்கள், 4 தீவிரவாதிகள் பலி; 16 பேர் காயம்!

கராச்சி, மே 25

தலிபான் தீவிரவாதிகளால் கைப்பற்றப்பட்ட கராச்சி கடற்படைத்தளத்தை 17 மணித்தியால கடும் சமருக்குப் பின்னர் பாகிஸ்தான் இராணுவத்தினர் மீட்டனர்.

ஒசாமா பின்லேடன் கொலைக்குப் பழி வாங்கும் விதத்தில், பாகிஸ்தானின் கராச்சி கடற்படைத் தளத்தில் ஞாயிற்றுக்கிழமை தலிபான் தீவிரவாதிகள் புகுந்து திடீர் தாக்குதல் நடத்தினர்.

17 மணி நேரத்துக்குப் பின்னர் இந்தப் போராட்டம் முடிவுக்கு வந்தது. இதில், 13 பாகிஸ்தான் சிப்பாய்கள், நான்கு தீவிரவாதிகள் பலியாயினர்; 16 பேர் காயமடைந்தனர். நான்கு தீவிரவாதிகள் பிடிபட்டனர்; இரு அமெரிக்க விமானங்கள் தீக்கிரையாக்கப்பட்டன.

அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடன் கடந்த 8ஆம் திகதி அமெரிக்க இராணுவ நடவடிக்கையில் இஸ்லாமாபாத் அருகே சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதையடுத்து பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், அமெரிக்கா ஆகிய நாடுகளின் மீது கடும் தாக்குதல் நடத்தப் போகின்றனர் எனத் தலிபான்கள் மிரட்டியிருந்தனர்.

அதன்படி ஆப்கனிலும், பாகிஸ்தானிலும் கடந்த மூன்று வாரங்களில் தொடர்ந்து பல்வேறு தாக்குதல்கள் நடத்தப்பட்டன. பாகிஸ்தானில் நடந்தவற்றில் சவூதி, அமெரிக்கா ஆகிய நாடுகளின் தூதரகங்களின் மீதான தாக்குதல்கள் குறிப்பிடத்தக்கவை.

**புகுந்தனர் தீவிரவாதிகள்**

பாகிஸ்தான நேரப்படி ஞாயிற்றுக்கிழமை இரவு 10.30 மணியளவில், பல்வேறு நவீன ஆயுதங்களுடன் தீவிரவாதிகள் சிலர், கராச்சி நகரின் புகழ்பெற்ற 'பி.என்.எஸ்., மெஹ்ரான் கடற்படைத் தளத்திற்குள் புகுந்தனர்.

முதலில், தங்களிடமிருந்த ஏவுகணைத் துப்பாக்கிகள் மூலம், அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அமெரிக்காவின் கண்காணிப்பு விமானங்களைத் தாக்கினர். இதில், இரு விமானங்கள் தீக்கிரையாயின; ஒரு விமானம் பெரும் சேதமடைந்தது.

கடற்படைத் தளத்தில் இருந்தவர்களைச் சிறைபிடித்த தீவிரவாதிகள், அங்கிருந்த உயரமான கட்டடமொன்றில் புகுந்து கொண்டனர். கண்மூடித்தனமாக நான்கு திசையிலும் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.

**பாகிஸ்தான் சிப்பாய்கள் பதிலடி**

சுதாரித்துக் கொண்ட பாகிஸ்தான் கடற்படைச் சிப்பாய்கள் பதிலடி கொடுத்தனர். இரு தரப்பிற்கும் இடையிலான சண்டை பல மணி நேரம் நீடித்தது. அதிகாலையில் இராணுவ ஹெலிக்கொப்டர்கள் கடற்படைத் தளத்தின் மீது வட்டமிட ஆரம்பித்தன.

தொடர்ந்து குண்டுவெடிப்புச் சத்தங்களும், துப்பாக்கிச் சத்தங்களும் கேட்டபடி இருந்தன. கராச்சியில் ஒருவித பீதி பரவ ஆரம்பித்தது.

இச்சண்டையில், 13 கடற்படைச் சிப்பாய்கள் பலியாயினர்; 16 சிப்பாய்கள் காயமடைந்தனர். கடற்படைச் சிப்பாய்களின் தாக்குதலில் நான்கு தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**17 மணி நேரச் சண்டை**

கடற்படைச் சிப்பாய்களுக்குத் துணையாக, திங்கட்கிழமை அதிகாலையில் இராணுவத்தினரும், துணை நிலை இராணுவப் படைச் சிப்பாய்களும் கடற்படைத் தளத்தில் குவிக்கப்பட்டனர்.

தீவிரவாதிகளிடம் பணயக் கைதிகள் இருந்ததாலும், அவர்கள் தற்கொலை குண்டுகளோடு வந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்பட்டதாலும், இராணுவ நடவடிக்கை மிகவும் கவனமாக நடத்தப்பட்டது.

தொடர்ந்து 17 மணி நேரம் நீடித்த இச்சண்டை ஒருவழியாக திங்கட்கிழமை பாகிஸ்தான் நேரப்படி பகல் 3.40 மணிக்கு முடிவுக்கு வந்தது என அறிவிக்கப்பட்டது. எனினும், கடற்படைத் தளத்திற்குள் சில தீவிரவாதிகள் இருக்கின்றனர் எனக் கூறப்பட்டது.

**பயங்கரவாதிகள் கைது?**

பாகிஸ்தான் உள்துறை அமைச்சர் ரஹ்மான் மாலிக் சம்பவ இடத்திற்கே நேரில் வந்து பார்வையிட்டார். கடற்படைத்துறை செய்தித்தொடர்பாளர் கூறுகையில், சில தீவிரவாதிகளை கைது செய்திருக்கின்றோம் எனத் தெரிவித்தார்.

ஆனால், எத்தனை தீவிரவாதிகள் வந்தனர், எத்தனை பேர் கொல்லப்பட்டனர், எத்தனை பேர் பிடிபட்டனர் போன்ற தகவல்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

**பாகிஸ்தானி தலிபான் பொறுப்பேற்பு:**

தலிபான்களின் ஒரு பிரிவான பாகிஸ்தானி தலிபான் செய்தித்தொடர்பாளர் எசனுல்லா எசன் வெளியிட்ட அறிக்கையில், ''ஒசாமாவின் கொலைக்குப் பழி வாங்குவதற்காக இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. நாங்கள் இன்னும் ஒற்றுமையுடனும், சக்தியுடனும் இருக்கிறோம் என்பதை இச்சம்பவம் நிரூபித்துள்ளது'' என்று கூறியுள்ளார்.

# லிபியாவில் நேட்டோ தாக்குதல் 33பேர் பலி; 150 பேர் காயம்!

திரிபோலி, மே 25

லிபிய தலைநகரான திரிபோலி மீது நேட்டோ விமானங்கள் மேற்கொண்ட உக்கிர தாக்குதல்களில் 33பேர் கொல்லப்பட்டனர். 150 பேர் காயமடைந்தனர் என லிபிய அரச பேச்சாளர் மூஸா இப்ராஹிம் தெரிவித்தார்.

லிபிய இராணுவ தொண்டர் பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்கும் விடுதிகளை இலக்கு வைத்து தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. எனினும், அவ்விடுதிகளுக்கு அருகில் பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளிலேயே பெரும் சேதங்கள் விளைந்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

லிபிய தலைநகரானதிரிபோலி மீது நேட்டோ விமானங்கள் உக்கிர தாக்குதல்களை மேற்கொண்டன. இதுவரை மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்களில் இவை பெரும் தாக்குதல்களாகும் என நிருபர்கள் தெரிவித்தார்கள்.

லிபிய தலைவர் கேர்ணல் மும்மர் கடாபியின் பப் அல்-அஜிஜிஸா வளாகத்தை இலக்காகக் கொண்டே பல தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அப்பகுதி கரும் புகை மண்டலங்களால் சூழப்பட்டிருந்தது என்றும் அவர்கள் விவரித்தார்கள்.

திரிபோலி நகரில் செவ்வாய்க்கிழமை அதிகாலை 12 முதல் 20 குண்டுவீச்சு சம்பவங்கள் இடம்பெற்றன. பின்னர் இத்தாக்குதல்கள் இதர பகுதிகளுக்கும் பரவின என திரிபோலி, பி.பி.ஸி. நிருபர் அன்றூ நோர்த் குறிப்பிட்டார்.

திரிபோலியில் ஹோட்டலொன்றில் ஊடகவியலாளர்கள் தங்கியுள்ளார்கள். சில குண்டுத் தாக்குதல்களால் இந்த ஹோட்டல் கட்டடமும் அதிர்ந்தது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# அமெரிக்காவில் சுழல்காற்று; 24 பேர் பலி!

சிக்காகோ, மே 25

தென்கிழக்கு அமெரிக்க மாநிலமான மிசூரியில் கடும் மழையோடு வீசிய சுழற்காற்றில் சிக்கி 24 பேர் உயிரிழந்துள்ளனர்.


மிசூரி மாகாணத்தின் ஜோப்லின் நகர்ப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை பலமான சுழற்காற்று வீசியது.

இதில் பல வீடுகள் நொறுங்கின. பல கடைகள், பெற்றோல் நிலையங்கள், கட்டடங்கள் ஆகியவை சேதமடைந்துள்ளன.

சில கட்டடங்கள் முற்றிலும் தரைமட்டமாகியுள்ளன. அங்கிருந்த வைத்தியசாலைக் கட்டடம் மிக மோசமாக பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்தவர்கள் பத்திரமாக வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

தேசிய பாதுகாப்புப் படைச் சிப்பாய்கள் மீட்புப் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாநில ஆளுநர் ஜே நிக்ஸன் இந்தப் பகுதியில் நெருக்கடி நிலையை அறிவித்துள்ளார்.

இப்பகுதியில் மேலும் சுழற்காற்று தொடர்ந்து வீசக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



அயர்லாந்து வந்திருந்த அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா (இடது), அயர்லாந்து பிரதமர் ஈன்டாகென்னியை, தலைநகர் டப்ளின் பிரதமர் அலுவலக மாளிகையில் சந்தித்துப் பேசுகிறார்.

# சீன சுரங்க விபத்தில் 7 பேர் உயிரிப்பு

பீஜிங், மே 25

சீனாவில் நிலக்கரி சுரங்கத்திலேற்பட்ட விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர். ஞாயிற்றுக்கிழமை இச்சம்பவம் நடந்தது.

சீனாவின் மத்திய பகுதியான ஹுவான் மாகாணத்தில் ஜோங்லியான் குடியிருப்புப் பகுதியிலுள்ள நிலக்கரி சுரங்கத்தில் பணியாற்றும்போது இந்த விபத்து ஏற்பட்டது.

அப்போது சுரங்கத்தினுள் மொத்தம் 15 பேர் பணிபுரிந்து வந்தனர். இதில் 7 பேர் இறந்தனர். நிலத்தடியில் திடீரென்று வெளிப்பட்ட வாயுவினால் வெடிவிபத்து ஏற்பட்டது எனத் தெரிகிறது. ஆனாலும் விபத்துக்கான முழு விவரங்கள் வெளியிடப்படவில்லை.

இந்த விபத்தை மறைக்கப் பார்த்த குற்றத்துக்காக நிர்வாகத்தின் சட்டபூர்வ பிரதிநிதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.

1994ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது இந்தச் சுரங்கம். கூட்டுறவு முறையில் இயங்கிவரும் இச்சுரங்கத்தில் ஆண்டுக்கு 60 ஆயிரம் தொன் நிலக்கரி எடுக்கப்படுகிறது.

கடந்த இரண்டு மாதங்களில் பல்வேறு சீன நிலக்கரி சுரங்கங்களில் திடீரென்று நிலத்தடி வாயு வெளிப்பட்டதால் நடந்த வெடி விபத்துகளில் 46 பேர் உயிரிழந்துள்ளனர்.

# முல்லா ஓமர் கொலை செய்திக்கு ஆப்கன் தலிபான் அமைப்பு மறுப்பு

காபூல், மே 25

தலிபான் தலைவர் முல்லா ஒமர் படுகொலை செய்யப்பட்டார் என்ற தகவல் உண்மைக்குப் புறம்பானது. அவர் பத்திரமாக இருக்கிறார் என ஆப்கன் தலிபான் அமைப்பு தெரிவித்துள்ளது.

தலிபான் தலைவர் முல்லா ஒமர் திங்கட்கிழமை பாகிஸ்தானில் இராணுவ நடவடிக்கை ஒன்றில் படுகொலை செய்யப்பட்டார் என ஆப்கன் தொலைக்காட்சி ஒன்று கூறியது.

ஆனால், ஆப்கன் தலிபான் அமைப்பு அதை மறுத்து, அவர் ஆப்கனில் பத்திரமாக இருக்கிறார் எனத் தெரிவித்துள்ளது. அதேநேரம், ஆப்கனின் புலனாய்வுத்துறையான தேசிய பாதுகாப்பு இயக்குநரான செய்தித்தொடர்பாளர் வெளியிட்ட அறிக்கையில், ''அவர் சமீப காலம் வரை பாகிஸ்தானின் பலுசிஸ்தானில் உள்ள க்வெட்டா நகரில் இருந்தார். ஆனால், அதன் பின்னர் தலைமறைவாகிவிட்டார்'' என்று கூறியுள்ளார்.

அமெரிக்க அதிகாரிகள், பாகிஸ்தான் அதிகாரிகள் ஆகியோர் இத்தகவல் குறித்து சந்தேகம் கொண்டுள்ளனர்.

முல்லா ஒமர் 1959இல் ஆப்கன் தலைநகர் கந்தகார் அருகிலுள்ள நோடக் எனும் இடத்தில் பிறந்தார். சிறு வயதிலேயே தந்தையை இழந்தார்.

ஆப்கனில் ரஷ்யப் படைகளுக்கு எதிரான போரின் போது, முஜாகிதீன் பயங்கரவாத அமைப்பின் சார்பில் ஒமர் சண்டையிட்டார். ஆப்கனில் 1996 முதல் 2001 வரை இவர் தலைமையிலான தலிபான்கள் ஆட்சி நடத்தினர்.

2001 அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்குப் பின்னர் அமெரிக்கப் படைகள், ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்த ஆரம்பித்தன. சமீபத்தில் சுட்டுக்கொல்லப்பட்ட அல்-குவைதா தலைவர் ஒசாமா பின்லேடனுக்கு, உதவி புரிந்தார் என அமெரிக்க படைகள் இவரையும் தேடி வந்தன. அப்போது முதல் தலைமறைவு வாழ்க்கை நடத்தி வந்தார்.

தொடர்ந்து அமெரிக்க படைகள், இவரை தீவிரமாகத் தேடின. இவரைப் பற்றிய தகவல் அளிப்போருக்கு 50 கோடி ரூபாய் பரிசு வழங்குவதாக அமெரிக்க அரசு அறிவித்தது. இந்தத் தொகை பின்னாளில் 125 கோடியாக அதிகரித்தது.

**தலிபான் தொடக்கம்:**

ஆப்கனில் ரஷ்யப் படைகளுக்கும், முஜாகிதீன் தீவிரவாதிகளுக்குமிடையே நடந்த சண்டையின்போது, முல்லா நான்கு தடவைகள் காயமடைந்தார். ஒரு கண்ணையும் இழந்தார் எனக் கூறப்படுகிறது.

1989இல் ரஷ்யப் படைகள், ஆப்கனை விட்டு வெளியேறிய பின்னர் முஜாகிதீன் அமைப்பு உடைந்தது. இதையடுத்து ஒமர், 50இற்கும் குறைவான மாணவர்களைக் கொண்டு 1994 இல் தலிபான் என்ற இயக்கத்தை ஆரம்பித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டில்லி திஹார் சிறையில் கனிமொழியை சந்தித்து ஆறுதல் கூறினார் கருணாநிதி

டில்லி, மே 25

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு முறைகேடு குறித்த வழக்கு விசாரணையில் டில்லி திஹார் சிறையில் உள்ள தனது மகள் கனிமொழியை தி.மு.க. தலைவர் கருணாநிதி நேற்றுமுன்தினம் மாலையில் சந்தித்தார். இந்தச் சந்திப்பு சுமார் ஒரு மணி நேரம் நீடித்தது.

டில்லிக்கு திங்கட்கிழமை காலையில் வந்த கருணாநிதி தனியார் ஹோட்டலில் தங்கினார். மாலை 5.30 மணியளவில் அவர் திஹார் சிறைக்குச் சென்றார்.

மகள் கனிமொழியைக் காண்பதற்காக ஏற்கனவே டில்லி வந்துள்ள ராஜாத்தியும், கருணாநிதியுடன் சிறைக்கு வந்தார். தி.மு.க. நாடாளுமன்ற கட்சித் தலைவர் டி.ஆர். பாலு, கனிமொழியின் கணவர் அரவிந்தன், கனிமொழியின் மகன் ஆதித்யா ஆகியோரும் உடன் வந்தனர்.



கருணாநிதியின் வயதைக் கருத்தில் கொண்டு அவரை சிறைக்குள் அனுமதிக்கும்படி தி.மு.க. தரப்பில் சிறைத் துறையினரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இதை ஏற்று, அவரது கார் ஆறாம் எண்ணுள்ள சிறை வரை செல்ல அனுமதிக்கப்பட்டது.

பின்னர், சிறைத் துறை கண்காணிப்பாளர் அறையில் கனிமொழியும், கருணாநிதியும் சந்திக்க அனுமதி வழங்கப்பட்டது. மகளும், தந்தையும் சிறிது நேரம் கண்கலங்கி உணர்ச்சிவசப்பட்டனர் என தி.மு.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

குடும்பத்தினரின் சந்திப்பு சுமார் ஒரு மணிநேரத்துக்கு மேல் நீடித்தது என சிறைத் துறை கண்காணிப்பாளர் நீரஜ் குமார் தெரிவித்தார்.

கருணாநிதி குடும்பத்தினருக்கு, சிறைத் துறை அதிகாரிகள் தேநீர் வழங்கினர். முன்னாள் அமைச்சர் ஆ.ராசா, கலைஞர் ரி.வி. நிர்வாக இயக்குநர் சரத்குமார் ஆகியோரையும் கருணாநிதி சந்தித்துப் பேசினார்.

2 ஜி அலைக்கற்றை ஒதுக்கீடு குறித்த வழக்கில் கனிமொழி கைதுசெய்யப்பட்ட பிறகு, அவரது தந்தையும், முன்னாள் முதல்வருமான கருணாநிதி சந்திப்பது இதுவே முதல்முறையாகும்.

கருணாநிதி குடும்பத்தினருடன் தி.மு.கவைச் சேர்ந்த சட்டசபை உறுப்பினர்கள் பலரும் சிறைக்கு வந்திருந்தனர். அவர்கள் யாரும் சிறைத்துறை கண்காணிப்பாளர் அறைக்குள் செல்ல அனுமதிக்கப்படவில்லை.

பொதுவாக கருணாநிதி டில்லிக்குச் செல்லும் போதெல்லாம் ஐக்கிய முற்போக்குக் கூட்டணித் தலைவரான சோனியா காந்தியை சந்திப்பது வழக்கம். ஆனால், இந்த முறை சந்திக்கவில்லை.

இந் நிலையில், மாலையில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம், கருணாநிதியைச் சந்தித்தார். ஆனால் அவர்கள் என்ன பேசிக் கொண்டனர் என்பது தெரிவிக்கப்படவில்லை.

(வ)

# ரஜினிக்கு அமெரிக்க மருத்துவர்கள் நவீன சிகிச்சை



ரஜினியின் உடல் நிலையை நேரில் ஆய்வு செய்ய 4 அமெரிக்க வைத்தியர்கள் சென்னைக்கு வந்துள்ளனர். அவர்கள் ரஜினிக்கு புதிய முறையில் நவீன சிகிச்சைகள் அளிக்கவுள்ளனர். மேலும் 3 நாள்கள் சென்னையிலேயே தங்கி சிகிச்சை அளிக்க உள்ளனர்.

உடல்நலக் குறைவால் நடிகர் ரஜினிகாந்த் கடந்த 13 ஆம் திகதி போரூர் ராமச்சந்திரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவர்கள் அவருக்கு தீவிர சிகிச்சை அளித்து வருகின்றனர்.

தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து தற்போது தனியான நோயாளர் விடுதிக்கு மாற்றப்பட்டுள்ளார். நுரையீரல் நீர் கோப்பு சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டு உள்ளது. சிறுநீரகப் பாதிப்பு இருந்ததால் டயாலிசிஸ் சிகிச்சையும் அளிக்கப்பட்டது.

ரஜினி உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்தனர். எனினும் அவர் தீவிர கண்காணிப்பிலேயே வைக்கப்பட்டு உள்ளார். பார்வையாளர்கள் சந்திக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

தனியான நோயாளர் விடுதியில் ரஜினி ரி.வி. நிகழ்ச்சிகளைப் பார்ப்பதாக மருத்துவர்கள் தெரிவித்தனர். உணவு உட்கொள்வதாகவும் கூறினார்கள். ரஜினியின் மருத்துவ பரிசோதனை அறிக்கைகள் அமெரிக்க டாக்டர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. அவற்றை ஆய்வு செய்து அவர்கள் சில ஆலோசனைகள் வழங்கினர். அதன் பிறகு சிகிச்சைகள் தொடரப்பட்டன.

மேலும் ரஜினி உடல் நிலை குறித்து அவ்வப்போது தவறான வதந்திகள் பரவி வருகின்றன. எனவே மருத்துவமனையில் இருந்து ரஜினி பேசுவது போன்ற வீடியோப் படத்தை வெளியிட அவரது குடும்பத்தினர் திட்டமிட்டுள்ளனர். (வ)

# தி.மு.க.வினர் முறைகேடாகச் சேர்த்த சொத்துக்களை மீட்க ஜெ. நடவடிக்கை

தி.மு.கவினர் முறைகேடாகச் சேர்த்த சொத்துக்களை மீட்க தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

இதுதொடர்பாக சென்னையில் அவர் நேற்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் -

கடந்த ஆட்சிக் காலத்தில் தி.மு.கவினர் அடாவடியாக சொத்துக்களைச் சேர்த்துள்ளனர். அவற்றை மீட்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பெற்ரோல் விலை உயர்வு கண்டிக்கத்தக்கது. பெற்ரோல் மீதான வரியைக் குறைப்பது குறித்து ஆலோசித்து வருகிறோம் என ஜெயலலிதா தெரிவித்தார். தமிழகத்தில் எம்.ஜி.ஆர். காலத்திலேயே சட்ட மேலவை தேவையில்லை என முடிவு செய்யப்பட்டது.

தற்போதும் சட்ட மேலவை தேவையில்லை. எனவே அது அமையாது என்றார் அவர். பள்ளிக் கட்டண விவகாரத்தில் அரசு நேரடியாகத் தலையிடாது. அதற்காக அமைக்கப்பட்டுள்ள ரவிராஜ பாண்டியன் குழுவின் முடிவை அரசு அமுல்படுத்தும்.

பள்ளிகள் கேட்டுக்கொண்டால் கட்டண விவகாரத்தில் அரசு தலையிடும் என ஜெயலலிதா கூறினார். அத்துடன் தமிழகத்தில் நிலவிவரும் மின்வெட்டு பிரச்சினையைத் தீர்க்க அரசு விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்றார் அவர்.

மாணவர்களுக்கு 'லப்டொப்' வழங்குவது குறித்து ஆளுநர் உரையில் அறிவிப்பு வெளியாகும். தேர்தல் வாக்குறுதியில் தெரிவிக்கப்பட்ட அனைத்தையும் நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்கும் என அவர் பேட்டியின்போது தெரிவித்தார்.



மேற்கு வங்கத்தில், புதிய அரசை அமைத்துள்ள திரிணமுல் காங்கிரஸ் தலைவரான மம்தா, கோல்கட்டாவில் கூடிய, முதல் சட்டசபை கூட்டத்திற்கு வருகை தந்தார்.

# இந்திய ரூபாயின் மதிப்பு அதிகரிப்பு

அமெரிக்க டொலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு நேற்று அதிகரித்துள்ளதாக வர்த்தக தகவல்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நேற்றுக்காலை வர்த்தகக் கேள்வி நேர ஆரம்பத்தின் போது இந்திய ரூபாயின் மதிப்பு 7 காசுகள் அதிகரித்து 45.15 ஆக இருந்தது.

ஏற்றுமதியாளர்கள் டொலர் விற்பனை காரணமாக, ரூபாயின் மதிப்பு அதிகரித்துள்ளதாக வர்த்தகத் தகவல்கள் தெரிவித்தன.

# அரச பஸ்களில் கருணாநிதியின் பொன்மொழிகள் நீக்கம்

அரசுப் பேருந்துகளில் முன்னாள் முதல்வர் கருணாநிதியின் பொன்மொழிகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத் திட்டம் முதல் கட்டமாக சிவகங்கை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வழக்கமாக சாரதிக்குப் பின்னால் பஸ்ஸில் திருக்குறள் இடம் பெற்றிருக்கும். ஆனால், தி.மு.க. ஆட்சியில் இதை மாற்றிவிட்டு கருணாநிதியின் பொன்மொழிகள் எழுதப்பட்டன,

இந்த நிலையில் தற்போது புதிய அரசாங்கம் பொறுப்பேற்றுள்ள அ.தி.மு.க. ஆட்சியில் அரசுப் போக்குவரத்துக் கழக பஸ்களில் தற்போது கருணாநிதியின் பொன்மொழிகள் அழிக்கப்பட்டு வருகின்றன.

இப்போது மீண்டும் அந்த பஸ்ஸின் வழித்தடம் ஜெ.ஜெ.நகர் கிழக்கு என்று மாற்றப்பட்டுவிட்டது. அதே போல தி.மு.க. ஆட்சியில் கலைஞர் கருணாநிதி நகர் என்ற பெயரில் இயக்கப்பட்ட வழித்தடம் சுருக்கி கே.கே.நகர் என பெயர் மாற்றப்பட்டுவிட்டது.

(வ)

# சமச்சீர் கல்வித்திட்டம் ரத்து; தமிழக அமைச்சரவை முடிவு

சென்னை, மே 25

தி.மு.க. அரசு கொண்டுவந்த சமச்சீர் கல்வித் திட்டம், மாணவர்களின் கல்வித்தரத்தை உயர்த்தும் வகையில் இல்லாததால் இந்த ஆண்டு பழைய பாடப் புத்தகங்களையே பின்பற்றலாம் என்றும், தரமான சமச்சீர் கல்வித் திட்டத்தை கொண்டுவர ஆய்வுக் குழு அமைக்கப்படும் என்றும் தமிழகத்தின் புதிய அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

இதையடுத்து, இந்தக் கல்வியாண்டில் ஒன்று முதல் 10 ஆம் வகுப்பு வரை பழைய பாடப் புத்தகங்களே பயன் படுத்தப்பட உள்ளன.

பாடப் புத்தகங்கள் அனைத்து மாணவர்களுக்கும் கிடைக்கும் வகையில், பாடசாலைகளை ஜூன் 15 ஆம் திகதி திறக்கலாம் என்று தமிழக அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அ.தி.மு.க. அரசின் முதல் அமைச்சரவைக் கூட்டம் புனித ஜோர்ஜ் கோட்டையில் உள்ள தலைமைச் செயலகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. காலை 9.50 மணிக்குத் தொடங்கிய இந்தக் கூட்டம் ஒரு மணி நேரம் வரை நீடித்தது.

கூட்டத்தில் சமச்சீர் கல்வி குறித்து விவாதிக்கப்பட்டது. இந்தக் கல்வித் திட்டத்தை நிறுத்தி வைப்பதென்று அப்போது முடிவு செய்யப்பட்டது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட அறிவிப்பு வருமாறு -

இப்போது நடைமுறையில் உள்ள சமச்சீர் கல்வி, மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்தும் வகையில் அமையவில்லை. இதற்கென உருவாக்கப்பட்டுள்ள பாடத்திட்டம் ஒட்டுமொத்த கல்வித் தரத்தை உயர்த்த வழிவகை செய்யாது.

சமச்சீர் கல்வி முறை அமுல்படுத்த வேண்டும் என்றும், ஆனால் அதே நேரத்தில் எவ்வாறு கல்வித் தரத்தை உயர்த்துவது என்பது குறித்து ஆராய வல்லுநர் குழு ஒன்றை அமைக்கவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

எனவே, இந்தக் கல்வியாண்டில் பழைய பாடப் புத்தகங்களையே பின்பற்றலாம் என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது. பாட புத்தகங்களை அச்சிட சிறிது கால அவகாசம் தேவைப்படும் என்பதால் பாடசாலைகளை ஜூன் 15 ஆம் திகதி திறக்கலாம் என்று அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

தமிழகத்தில் கடந்த 2006 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சிப் பொறுப்பேற்றது. முன்னதாக அந்தக் கட்சியின் தேர்தல் அறிக்கையில், ஆட்சிக்கு வந்தால் சமச்சீர் கல்வித் திட்டம் அமுல்படுத்தப்படும் என்று கூறியிருந்தது. ஆட்சிக்கு வந்ததும் அதற்கான பணிகளில் அந்த அரசு ஈடுபட்டது.

இந்த நிலையில், சமச்சீர் கல்வித் திட்டத்தை அரசு நிறுத்தி வைத்துள்ளதால் பழைய புத்தகங்களை மாணவர்கள் தேட வேண்டிய சூழல் உருவாகியுள்ளது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைமனு விசாரணை ஒத்தி வைப்பு

# கனிமொழியின் சிறைவாசம் மேலும் ஒருவாரம் நீடிப்பு

டில்லி,மே.25

ஸ்பெக்ட்ரம் விவகாரம் தொடர்பாக கைதுசெய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள மாநிலங்களவை உறுப்பினர் கனிமொழி நேற்று முன்தினம் தாக்கல் செய்த பிணை மனு தொடர்பான விசாரணை மேல் நீதிமன்றம் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்துள்ளது.



கனிமொழி தனது மனுவில், என் மீதான குற்றச்சாட்டுக்கள் தவறானவை கலைஞர் ரி.வி.யில் நான் பங்குதாரர் மட்டும் தான். வேறு எந்த செயற்பாட்டுக்கும் எனக்கும் தொடர்பு இல்லை.

எனக்கு சி.பி.ஐ. நீதிமன்றத்தில் பிணை மறுத்தது சரியான விடயமல்ல. பணப்பரிவர்த்தனையில் நான் பலன் பெறவில்லை. எனக்கு பள்ளி செல்லும் வயதில் மகன் இருக்கின்றான். அவனை நான்தான் கவனிக்க வேண்டும். எனவே மனிதாபிமான அடிப்படையில் எனக்கு பிணை வழங்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்.

டில்லி மேல்நீதிமன்றத்தில் நேற்று கனிமொழியின் பிணை மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அதன்பின்னர் இந்த விசாரணையை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு மேல் நீதிமன்ற நீதிபதி அஜீத் பரிகோகி ஒத்திவைத்தார்.

கனிமொழியின் மனு மீது உரிய பதில் அளிக்க சி.பி.ஐ.க்கு 'நோட்டீஸ்' அனுப்பவும் நீதிபதி உத்தரவிட்டார். கனிமொழியிடம் நடத்தப்பட்ட விசாரணை விவரங்கள் முழுவதையும் எதிர்வரும் 30 ஆம் திகதி தாக்கல் செய்ய வேண்டும் என்று சி.பி.ஐ.க்கு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பிணை மனு மீதான விசாரணை ஒத்தி வைக்கப்பட்ட காரணத்தால் கனிமொழி இன்னும் ஒரு வாரம் திகார் சிறையில் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கனிமொழி போலவே, கலைஞர் தொலைக்காட்சி நிர்வாக இயக்குனர் சரத்குமாரும் நேற்று முன்தினம் பிணை கோரி மனு தாக்கல் செய்திருந்தார். அவரது மனுவும் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது. அந்த மனு மீதான விசாரணையும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு நீதிபதி வைத்துள்ளார்.

## ஊழல் புரிந்தோருக்குத் தண்டனை மன்மோகன், சோனியா கருத்து



ஊழல் செய்தவர்கள் நிச்சயமாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று பிரதமர் மன் மோகன் சிங், காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி ஆகியோர் தெரிவித்தனர். மேலும் ஊழலை ஒழிக்க வேண்டுமென மத்திய அரசு உறுதி பூண்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

மத்தியில் ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா டில்லியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதை முன்னிட்டு பிரதமரின் இல்லத்தில் நடைபெற்ற விருந்து நிகழ்வில் பிரதமர், சோனியா, கட்சியின் முக்கிய தலைவர்கள், கூட்டணிக் கட்சித் தலைவர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இதில் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் மத்திய அரசின் செயற்பாடுகள் குறித்த அறிக்கை வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் சோனியா காந்தி பேசுகையில்:

ஊழலுக்கு எதிராக உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும். இது வெறும் வாய் வார்த்தையாக இருக்காது என்று நாட்டு மக்களுக்கு உறுதி கூறுகிறேன். எதிர்காலத்தில் எவரும் எவ்வித குற்றச்சாட்டும் கூற முடியாத அளவுக்கு அரசு சிறப்பாகச் செயற்படும் என்றார்.

இதேவேளை மத்திய அரசு தவறுகளைத் திருத்திக்கொள்ள நடவடிக்கை எடுத்துள்ளது. யார் தவறு செய்திருந்தாலும் சட்டத்துக்கு முன் நிறுத்தப்படுவார்கள். முன்பு அரசு மீது எழுந்த குற்றச்சாட்டுகள் இனி எழாது. அரசு நிர்வாகம் சிறப்பானதாகவும், வெளிப்படைத் தன்மை உடையதாகவும் இருக்கும்' என்று பிரதமர் கூறினார்.

## பாகிஸ்தானில் நடந்த தாக்குதலுக்கு இந்தியா கவலை

பாகிஸ்தானில் கராச்சி நகரில் உள்ள கடற்படைத் தளத்தில் உள்ள விமானப்படைத் தளத்தில் தீவிரவாதிகள் புகுந்து நடத்திய தாக்குதல் சம்பவம் கவலை அளிப்பதாக உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் தெரிவித்துள்ளார். எனவே இது குறித்து மாநில அரசுகள் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் இயக்கப் பாணியில் பாகிஸ்தானில் உள்ள கடற்படைத்தளம் மீது ஆயுததாரிகள் கடந்த ஞாயிறன்று தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்ககது.



தமிழக சட்டசபையில் உறுப்பினர்கள் பதவி ஏற்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது. முதலாவதாக முதல்வர் ஜெயலலிதா பதவி ஏற்றுக்கொண்டார்.

## பாபாவுக்கு நினைவாலயம்:' கட்டப் பணிகள் ஆரம்பம்

மகா சமாதியடைந்த சத்தியசாயி பாபாவை அடக்கம் செய்த இடத்தில் பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்க நினைவாலயக் கட்டடம் அமைக்கப்படவுள்ளதாக சத்தியசாயி அறக்கட்டளை உறுப்பினர் ரத்னாகர் கூறியுள்ளார்.

ஆந்திர மாநிலம் புட்டபர்த்தியில் ஆசிரமம் அமைத்து ஆன்மிக பணியில் ஈடுபட்டு வந்த சத்தியசாயிபாபா கடந்த ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி மகா சமாதியடைந்தார்.

அவரது உடல் சாயிபாபா ஆசிரமத்தில் உள்ள குல்ஹத் மண்டபத்தில் அடக்கம் செய்யப்பட்டது. அந்த இடத்தில் பிரமாண்டமான நினைவாலயம் கட்ட சத்தியசாயி அறக்கட்டளை உறுப்பினர்கள் முடிவு செய்தனர்.

இதுதொடர்பாக புட்டபர்த்தியில் சத்யசாய் அறக்கட்டளை உறுப்பினர் ரத்னாகர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

சத்தியசாயிபாபாவுக்கு உலகம் முழுவதிலும் கோடிக்கணக்கான பக்தர்கள் உள்ளனர். அவர்கள் அனைவரும் சாயிபாபாவுக்கு பிரமாண்டமான நினைவாலயம் கட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இதை ஏற்று சாயிபாபாவுக்கு பிரமாண்டமான நினைவாலயக்கட்டடம் கட்டப்படுகிறது.

நாளை மறுதினம் நினைவாலயம் கட்டும் பணி ஆரம்பிக்கப்படும். சமாதியின் முன்புறம் பாதபீடம் வைக்கப்படும். இந்தப்பணியை 6 வாரத்தில் முடிக்க திட்டமிட்டுள்ளோம். அதுவரை பக்தர்கள் யாரும் சமாதி கட்டும் இடத்திற்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள். ஆனால் ஆசிரமத்தில் வழக்கமாக நடைபெறும் சாயிபஜனைகள் பாடப்படுவதோடு வேதங்களும் வாசிக்கப்படும்.

## இந்தியாவின் 3 கலைகளுக்கு யுனெஸ்கோ அங்கீகாரம்

உலகின் சீரிய கலாசார பாரம்பரியத்தின் சிறந்த உதாரணங்களாக யுனெஸ்கோ அமைப்பு இந்தியாவின் மூன்று சிறந்த பழமையான கலைகளைத் தேர்வு செய்து அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக மத்திய அரசு 2010-11 ஆம் ஆண்டில் பண்பாடு குறித்து வெளியிட்ட அறிக்கை வருமாறு:

கேரளாவின் முடியேட்டு பழமையான நாடகம் ராஜஸ்தானின் கால் பெலியா கிராமப்புற பாடல் மற்றும் கிழக்கு இந்தியாவின் சாவ் கிராமப்புற நடனம் ஆகிய மூன்றும் சிறந்த பண்பாட்டுப் பாரம்பரியங்களாகும்.

அருணாச்சலப் பிரதேசத்தின் டாஹங் என்ற இடத்தில் ஒரு புதிய மைய இமாலய கலை கல்வி நிறுவனத்தை அமைப்பதற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரவீந்திரநாத் தாகூரின் 150 ஆவது பிறந்தநாள் நிகழ்வுக் கொண்டாட்டம் வங்கதேசத்துடன் இணைந்து கூட்டாகக் கொண்டாடப்பட்டது. பண்டித மதன்மோகன் மாளவியாவின் 150 ஆவது பிறந்தநாள் கொண்டாட்டத்திற்கும் தேசிய குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்திராகாந்தி தேசிய கலைகள் மையமானது 12 முக்கிய கலாசார நிகழ்ச்சிகளை நடத்தியது. இதில் சுமார் ஐந்து லட்சம் பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். இதுவரை இல்லாத ஒரு சாதனை அளவாகும்.

## அ.தி.மு.கவுடன் கூட்டணி வைக்க சோனியாகாந்தி தீவிர முயற்சி

வைகோ தெரிவிப்பு

வெம்பக்கோட்டை,மே 25

அ.தி.மு.கவுடன் கூட்டணி வைக்கவே தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு சோனியா வாழ்த்துத் தெரிவித்துள்ளார் என்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

ம.தி.மு.க. 18 ஆண்டு தொடக்க விழாவை முன்னிட்டு வெம்பக்கோட்டை யூனியன் ஆலங்குளத்தில் வைகோ பேசியதாவது:

முதல்வர் ஜெயலலிதாவுக்குப் பிரதமர் என்ற முறையில் மன்மோகன் சிங் வாழ்த்துத் தெரிவித்துள்ளார். சோனியாவோ தனது கட்சியைச் சேர்ந்த 58 வேட்பாளர்களையும் கூட்டணிக் கட்சியினரையும் தேர்தலில் தோற்கடித்து வெற்றி பெற்ற ஜெயலலிதாவுக்கு எதற்காக வாழ்த்துச் சொல்கிறார்.

அ.தி.மு.கவுடன் கூட்டணி வைப்பதற்காகவே சோனியா வாழ்த்துத் தெரிவித்துள்ளார். விடுதலைப்புலிகளை அழிக்க கருணாநிதியின் ஆதரவு சோனியாவுக்குத் தேவைப்பட்டதால் கூட்டணி வைத்தார். இப்போது அ.தி.மு.கவுடன் கூட்டணி அமைக்க நினைக்கிறார்.

தேர்தலில் தோற்று, மகள் கனிமொழியும் சிறையில் இருக்கும் இக்கட்டான நிலையில் நிராயுத பாணியாக இருக்கும் கருணாநிதி பற்றிப் பேச நான் விரும்பவில்லை.

மேலும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இறக்க வில்லை உயிருடன் தான் இருக்கிறார், மீண்டும் வந்து போராடுவார், வெல்வார். ஈழம் நிச்சயம் மலரும்.

-இவ்வாறு அவர் பேசினார்.

## பிரியங்காவின் அரசியல் நுழைவை: அவரேதான் தீர்மானிக்க வேண்டும்



காங்கிரஸ் தலைவர் சோனியா வின் மகள் அரசியலில் தீவிரமாக இறங்குவது குறித்து அவர் தான் முடிவு செய்ய வேண்டும் என, காங்கிரஸ் கட்சியின் தகவல் தொடர்பாளர் மணிஷ் திவாரி தெரிவித்துள்ளார். மறைந்த முன்னாள் பிரதமர் இந்திராவுடன் பணியாற்றிய முன்னாள் அமைச்சர் வசந்த் சாத்தே கூறுகையில்:

இந்திராவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு மக்கள் மத்தியில் நல்ல செல்வாக்கு உள்ளது. குறிப்பாக, ராகுலை விட பிரியங்காவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு அதிகம் உள்ளது. ஆனால், பிரியங்கா அரசியலில் ஈடுபட முன்வரவில்லை. அவரது சகோதரன் ராகுல் தான் அரசியலில் தீவிரமாக இறங்கியுள்ளார்' என்றார்.

இதுதொடர்பாக கட்சியின் தகவல் தொடர்பாளர் கூறுகையில்:

பிரியங்கா அரசியலுக்கு வருவது அவரது தனிப்பட்ட விருப்பம். ராகுலின் செல்வாக்கால் பிரியங்காவின் அரசியல் பிரவேசம் தடைபடுவதாகக் கூறுவது தவறு என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாதிக்கப்பட்ட மக்களின் உரிமைகளுக்கு அரசு உத்தரவாதம் அளிக்கவேண்டும்

## உண்மை முழுமையாகத் தெரியாதபோது அதனை அறிந்துகொள்ளும் உரிமை இருத்தல் அவசியம்

### அ. பொருத்தமான சர்வதேச தரங்கள் மற்றும் ஒப்பீட்டளவிலான அனுபவங்கள்

262. யுத்தத்தில் இருந்து மீண்ட பல நாடுகள், போர்க்குற்றங்கள் மற்றும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள் என்பதான நிலைச்சக்தியைக் கொண்ட, இலங்கைக்கு ஒத்த மீறல்களை செய்துள்ளன மிகவும் தீவிரமான வேறுபாடுகளைக்கொண்ட நாடுகளில் அந்த அனுபவங்கள், அத்தகைய குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கத் தேவையான சர்வதேசத் தரங்களை வெளியிடும் மற்றும் அத்தகைய குற்றங்கள் பற்றிய நடவடிக்கை எடுப்பதற்கான பல வகையான செயற்படுத்தக் கூடிய அணுகுமுறைகளையும் கொண்ட அத்தரங்களுக்கு ஏற்ற பூலோக எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியுள்ளன.

263. இலங்கைத் தரப்பினராக உள்ள, பல மனித உரிமை ஒப்பந்தங்கள், புலனாய்வு தொடர்பான கடப்பாடுகளைக் கொண்டுள்ளன. ஐ.சி.சி. பி. ஆர். இன் உறுப்புரை 2(3), மனித உரிமைகள் மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அரசு பயனுறு பரிகாரத்தை வழங்குவதைத் தேவைப்படுத்துகிறது. ஐ.நா. மனித உரிமைகள் குழுவின் விளக்கத்துக்கேற்ப, உடன்படிக்கையின் சகல மீறல்களையும் நாடுகள் புலனாய்வு செய்வதைத் தேவைப்படுத்துவதோடு, பாரிய மீறல்கள் அல்லது சர்வதேசக் குற்றங்கள் சம்பந்தப்பட்டவரை அதில் ஈடுபட்டதாகக் குற்றம் சாட்டப்பட்டவர்களை சட்டத்தின் முன் நிறுத்தவேண்டும் என்பதையும் தேவைப்படுத்துகிறது.

(91)

மேலும், இலங்கை தரப்பினராகவுள்ள சித்திரவதை மற்றும் ஏனைய கொடூரமான, மனிதாபிமானமற்ற அல்லது இழிவாக நடத்துதல் அல்லது தண்டனைக்கு எதிரான உடன்படிக்கையின் 12 ஆம் உறுப்புரை, சித்திரவதையாகிய சர்வதேச குற்றத்தைப் புரிந்த சகலரையும் புலனாய்வு செய்து அவர்கள் மீது வழக்குத் தொடர (அல்லது வழக்குத் தொடருவதற்காகத் தேடிவரும் இன்னொரு நாட்டுக்கு நாடு கடத்துவதற்கு) நாடுகளைத் தேவைப்படுத்துகிறது.

264. பிராந்திய மனித உரிமைகள் உடன்படிக்கைகள் மற்றும் ஐ.சி.சி.சி. பி. ஆருக்கு ஐ.நா. மனித உரிமைகள் குழு அளித்துள்ள விளக்கத்தின் கீழ், பிராந்திய மனித உரிமைகள் நீதிமன்றங்களின் தீர்ப்புக்களை அடிப்படையாகக்கொண்டு மனித உரிமைகள் சபைக்குச் சுயாதீன நிபுணர்கள் அண்மையில் வழங்கிய அறிக்கை புலனாய்வுக்கான பிரயோசனம்மிக்க சட்டத்தரங்களை முன்வைக்கிறது. சுயாதீனம், பக்கச்சார்பற்ற தன்மை, முழுநிறைவான, பயனுறு மற்றும் உடனடியான என்பவற்றை இந்தக் கட்டளைகள் உள்ளடக்குகின்றன.

265. இந்த உடன்படிக்கைகளின் கடப்பாடுகளுக்குப் புறம்பாக, புலனாய்வு செய்வதற்கான கடமை வேறு பல சர்வதேச அமைப்புக்கள் மற்றும் தீர்மானங்கள் மூலம் பெறப்பட்டுள்ளது. பொதுச் சபையும், புலனாய்வு செய்வதற்கான கடமையை மனித உரிமைகள் சட்டம் உள்ளடக்குவதாக அதன் சர்வதேச மனித உரிமைகள் மற்றும் மனிதாபிமான சட்ட மீறல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பரிகாரம் மற்றும் நஷ்டஈடு பெறுவதற்கான உரிமை பற்றிய அடிப்படைக் கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டல்கள் என்ற அதன் 2006 ஆம் ஆண்டின் 60/147 தீர்மானத்தில் விளக்கியுள்ளது. பாதுகாப்புச் சபையும் போர்க்குற்றங்களுக்கு மற்றும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்தலை உள்ளிட்ட மனித கௌரவத்துக்கு எதிரான பெரிய துஷ்பிரயோகங்களுக்கு தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமையை அப்புறப்படுத்துவதன் முக்கியத்துவத்தை, யுத்தத்தின் போது பொதுமக்களின் பாதுகாப்புப் பற்றிய அதன் 1674 (2006) தீர்மானத்தை உள்ளிட்டவாறு பலமுறை வலியுறுத்தி யுள்ளது. உள்நாட்டு யுத்தம் ஒன்று சம்பந்தப்பட்ட நாட்டு நிலைமைகளில் பொதுமக்களைப் பாதுகாப்பது மற்றும் தண்டனையிலிருந்து விலக்கீட்டுரி மையை அப்புறப்படுத்தும் விடயத்தில் அதேஅணுகுமுறையை அது கடைப்பிடித்துள்ளது. இலங்கை உள்ளிட்ட நாட்டின் மற்றும் அரசின் தலைவர்கள் பங்கு பற்றிய வேர்ல்ட் சம்மிட் அவுட்கம் (உலக உச்சிமகாநாட்டு பெறுபேறுகள்) மாநாட்டில் 2005 இல் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் 60/1 யுத்தம், இனப் படுகொலை, போர்க் குற்றங்கள், இனத்துவச் சுத்திகரிப்பு மற்றும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்கள் ஆகியவற்றிலிருந்து தமது மக்களைப் பாதுகாப்பதற்கான நாடுகளின் பொறுப்பை மீண்டும் வலியுறுத்தியுள்ளனர்.

**ஐ.நா. செயலாளரிடம் நிபுணர் குழு வழங்கிய அறிக்கை**
**பகுதி - 23**

266. மேலும், பொறுப்புக்கூறல் பற்றி முக்கியமான தரங்களையும் சட்டகங்களையும் ஐக்கிய நாடுகள் செயற் பாடுகள் தொகுத்துள்ளன. 2005 இன்தண்டனையிலிருந்து விலக்கீட்டுரிமையை எதிர்ப்பதற்கான செயற்பாடு மூலம் மனித உரிமைகளின் பாதுகாப்பு மற்றும் மேம்பாட்டுக்கான கோட்பாட்டுத் தொகுதி குறிப்பான முக்கியத்துவத்தைப் பெறுகிறது. ஐ.நா.மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கட்டளைப் பிரகாரம் நிபுணர்களால் தொகுக்கப்பட்ட இந்த ஆவணம் சர்வதேச சட்டத்தின் கீழான குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூன்று அடிப்படை உரிமைகள் உண்டு என்ற உள்ளார்ந்த அறிவை வழங்குகிறது; உண்மையை அறிவதற்கான உரிமை, நீதியைப் பெறு வதற்கான உரிமை மற்றும் மீண்டும் ஏற்படாது என்ற நிறுவக ரீதியிலான உத்தரவாதத்தை உள்ளிட்ட நஷ்டஈட்டுக்கான உரிமை.

(92)

267.ஐக்கியநாடுகளின் உறுப்புக்களின் இந்த நடவடிக்கைகளுக்கு அப்பால் இனப்படுகொலை, போர்க்குற்றங்கள் மற்றும் மனித இனத்துக்கு எதிரான குற்றங்களுக்கு எதிரான தண்டனையிலிருந்து விலக்கீடு அளிப்பதை விட்டும், அநேகமான நாடுகள் தவிர்ந்து கொண்டுள்ளன அல்லது முன்னர் தவிர்ந்து கொண்டுள்ளன அல்லது முன்னர் வழங்கப்பட்ட விலக்கீடுகளை இரத் துச் செய்வதற்கு நீதி அல்லது சட்டவாக்க ரீதியிலான நடவடிக்கைகளைப் பயன்படுத்தியுள்ளன. சர்வதேச நீதிமன்றங்கள் அத்தகைய குற்றங்களுக்கான மன்னிப்புக் கள் வழங்கமுடியாதவை என அதேபோன்று தீர்ப்பு வழங்கியுள்ளன. இதுவே ஐக்கிய நாடுகளின் கொள்கை நிலை யாகவும் உள்ளது. இலங்கை அரசும் கூட 'மன்னிப்புக்கள் உள்ளார்ந்த வாறு விலக்கீட்டுக் கலாசாரமொன்றை ஊக்குவிக்கிறது என்பது எமது ந[illegible] பதோடு என[illegible] உகந்ததல்ல' எனக் குறிப்பிட்டுள்ளது.

268. உள்நாட்டு ஆயுதந்தரித்த மோதல் ஒன்றில் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் மீறல்கள் தொடர்பாக, பெரிய மீறல்களை புலனாய்வு செய்து, ஆதாரம் இருப்பின், அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதை உறுதியாக ஆதரிப்பதற்கான சர்வதேச வழக்கமும் அரசு மீது சட்டப்படியிலான கடமை ஒன்றுக்கான நீதித்துறையிலான எடுத்துக்காட்டான முன்னோடி நிகழ்வும் தற்போது உள்ளன. குறிப்பாக அத்தகைய மீறல்களைச் சர்வதேச யுத்தங்களில் புலனாய்வு செய்வதற்கான கடமையை ஏற்று ஆனால், உள்நாட்டு ஆயுதந்தாங்கிய மோதலில் அப்படியில்லை என்ற விளக்கம் தொடர்ந்தும் வழக்கில் இல்லை. ஐ.சி.ரி.வை இன் கூற்றுப்படி, 'எந்தவொரு யுத்த நடவடிக்கையிலும் கட்டாயக் குறைந்தபட்சமாக பொதுவாக இனங்காணப்பட்டுள்ள மனிதாபிமானத்தின் அடிப்படைக் கூறின் ஆய்வுகளை மனிதாபிமான சட்டத்தின் கோட்பாடுகளும் விதிகளும் பிரதிபலிக்கின்றன. சம்பந்தப்பட்ட ஷெல்களின் பாரதூரமான தன்மையையோ அவற்றைத் தடைசெய்வதில் சர்வதேச சமூகத்தின் அக்கறையையோ ஒருவரும் சந்தேகிக்க முடியாது. 'உள்நாட்டு யுத்தத்தில் பெரிய மீறல்களைப் புலனாய்வு செய்வதற்கான கடப்பாட்டை பொதுச்சபையும் ஏகமனதாகத் தீர்மானம் 60/147 இல் உறுதிப்படுத்தியுள்ளது. சர்வதேச மனிதாபிமான சட்ட விளக்கத்தில் விசேட இடத்தை வகிக்கும் ஐசிஆர்சி, நாடுகளின் பழக்கங்கள் பற்றிய விரிவான மீளாய்வின் அடிப்படையில், உள்நாட்டு யுத்தத்தின் போதான போர்க் குற்றங்களைப் புலனாய்வுசெய்து சட்ட நடவடிக்கை எடுப்பதை மரபுவழக்கான சர்வதேச சட்டம் அரசு மீது கடமையாக்குகிறது எனக் கண்டுள்ளது.

269. சர்வதேச மனிதாபிமான அல்லது மனித உரிமைகள் சட்டத்தின் பெரிய மீறல்கள் தொடர்பாகப் பொறுப்புக் கூறலை மேம்படுத்தும் குறிப்பான பொறித் தொகுதிகளை ஏற்படுத்தும் தற்போதுள்ள அரச வழக்கம் மேலே விளக்கப்பட்ட சட்ட கடப்பாடுகளையும் தரங்களையும் ஊக்குவிப்பதாகவுள்ளது. பெரிய அளவிலான மீறல்களில் இருந்து மீண்டும் நிலைத்தகவுள்ள சமாதானத்தையும் சிறந்ததோர் எதிர்காலத்தையும் கட்டியெழுப்ப முனையும் நாடுகள் கடந்த காலத்துக்குப் புறமுதுகு காட்டாமல் அதனை எதிர்கொள்ள வேண்டும் என்பதை அத்தகைய வழக்கம் குறிக் கிறது. மோதலுக்குப் பிந்திய அல்லது மாற்றமடைந்து வரும் நிலைமைகளில், 'பொறுப்புக்கூறலை உறுதிப் படுத்தி, நீதியை வழங்கி மீளிணக்கப்பாட்டை அடைவதற்காகச் சமூகத்தின் கடந்த கால பெரிய துஷ்பிரயோகங்கள் பற்றி உடன்பாட்டுக்கு வருவது தொடர்பான முழுமையான செயற்பாடுகளையும் பொறித் தொகுதிகளையும்' அமைப்பதில் நாடுகள் ஈடுபட்டுள்ளன. இந்தச் செயற்பாடுகளும் பொறித்தொகுதிகளும் கூட்டாக இடைக்காலத்துக்குரிய நீதி என அழைக்கப்படுகிறது.

270. கடந்த கால மீறல்கள் பற்றி நடவடிக்கை எடுப்பதற்குத் தேவை யான ஒன்றோடு ஒன்று சம்பந்தப்பட்ட நடவடிக்கைத் தொகுதியான இடைக் கால நீதி மனவுரு இப்போது உலகளா விய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இடைக் கால நீதி தனிப்பட்ட மீறல்களை ஆராய்வதோடு, அவற்றுக்கு அப்பாலும் சென்று உருமாதிரிகளை மற்றும் சிக்கலான [illegible]யிலான அநீதிகளால் [illegible] வன்முறையின் கடந்த காலத் தொடர்பு ஆகியவற்றையும் பகுப்பாய்வு செய்கிறது. மீண்டும், செயலாளர் நாயகம் கூறுவதன் பிரகாரம், ஒன்றிணைந்த மற்றும் சுயாதீன ரீதியில் மீறல்களின் முழுமையான அமைப்பு பற்றிய நடவடிக்கை எடுக்க முயல்வதனால், மேலும் மோதலைத் தடுத்து சமாதானத் தைக் கட்டியெழுப்பு வதற்கும் மீளிணக்கப்பாட்டுக்குமான விசாலமான நோக்கங்களுக்கான பங்களிப்பை இடைக்கால நீதிவழங்கும்.

271. கடந்த காலத்தைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிராமல் அல்லது பழிக்குப்பழி வாங்கவேண்டும் என்றிராமல் இருப்பது இடைக்கால நீதியின் விவேகமாகும். மாறாக, வன்முறைச் சக்கரத்தை நிறுத்தி, தண்டனை விலக்களிப்பீட்டுக்கு மற்றும் நிராகரிப்புக்கு எதிராகச் செயற்பட்டு கடந்தகாலக் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறுதலை உறுதிப்படுத்துவதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களின் துன்பத்தை ஏற்றுக்கொள்வதை இடைக்கால நீதி நோக்காகக் கொண்டுள்ளது.மோதலுக்கு முன்பிருந்த அல்லது அதற்குப் புறம்பாகவுள்ள காரணிகள் மற்றும் அநீதிகளை அதிக விசாலமாகக் கவனத்துக்கெடுத்து பெண்களுக்கு எதிரான பாரபட்சத்தை உள்ளிட்ட, ஆனால் மீறல்களின் சுபாவம் மேல் ஆதிக்கம் செலுத்தும் மற்றும் மோதலின் அனுபவங்கள் ஆகியவற்றின் மீதும் அது கவனம் செலுத்த நாடுகிறது. பிரஜைகள் மற்றும் அரசுக்கு இடையில் விசுவாசத்தைக் கட்டியெழுப்பி சட்டத்தின் நல்லாட்சியைப் பலப்படுத்தி, அதன் மூலம் எதிர்காலத்தில் மோதல் ஏற்படுவதைத் தடுப்பதற்கான பங்களிப்பை அது வழங்குகிறது. இவ்வாறாக, தென் ஆபிரிக்காவில் நிகழ்ந்தது போன்று ஆழ்ந்த இனவாத அரசியலில் இருந்து 'ஜனநாயக பெறுமானங்களை, சமூக நீதியை மற்றும் அடிப்படை மனித உரிமைகளை அடிப்படையாகக் கொண்ட' ஒரு சமூகமாக மாறியது போன்ற இடைக் கால நீதி முக்கியமாக எதிர்காலத்தை நோக்கியதாகவுள்ளது.

272. இலங்கை பொறுப்புக் கூறல் பற்றிய அதன் அணுகுமுறையைக் கூர்ந்து நோக்கக்கூடியதொரு பிரயோ சனம் மிக்க கண்ணாடி வில்லையாக இடைக் கால நீதி உள்ளது. உதாரண மாகப் பெருநாட்டைப் போன்று அரசு கிளர்ச்சியொன்றை முறியடித்துள்ளதை உள்ளிட்ட ஏதும் மோதலுக்குப் பின்னரான நிலைமைகளுக்கு அது ஏற்புடையதா கும். குறிப்பாக, இலங்கை சர்வதேச தரங்களை அடிப்படையாகக் கொண்ட மற்றும் இடைக்கால நீதிக்கான அணுகுமுறையின் முக்கியமானதோர் அங்கமான உண்மை, நீதி மற்றும் நஷ்டஈடு தொடர்பாகப் பாதிக்கப்பட்டோரின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்க முனையவேண்டும்.

273.வலுக்கட்டாயமாகக் காணாமல் போதல்கள் மற்றும் அவர்களுக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள் வதற்கான உறவினர்களின் உரிமை ஆகியவை தொடர்பாக உண்மைக்கான உரிமை ஆரம்பத்தில் ஐ.நா.மனித உரிமைகள் குழுவின் மற்றும் அமெரிக்காவுக்குக்கிடையிலான ஆணைக்குழு மற்றும் மனித உரிமைகள் நீதிமன்றம் ஆகியவற்றின் தீர்மானங்களினூடாகத் தோன்றிய தொன்றாகும். குறிப்பாக உண்மை முழுமையாகத் தெரியாதபோது, அரசினால் அல்லது வரலாற்றின் மறு ஆய்வுசெய்து திருத்தலினால் அல்லது திட்டமிட்ட வாறு தாக்க முற்றோரின் குரல் அடக்கப்படும்போது சம்பவங்கள் பற்றிய சர்ச்சை எழும் போது உண்மைக்கான உரிமையை உறுதிப்படுத்தி அதனைச் செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முக்கிய மானதாகும்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மாவட்டப் பெருவிளையாட்டு: கனகபுரம் ம.வி.5 போட்டிகளில் சம்பியன்

யாழ்ப்பாணம் மே 25

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான பெருவிளையாட்டுப் போட்டிகளில் கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயம் ஐந்து போட்டிகளில் சம்பியனானது.

15 வயது, 19 வயது ஆண், பெண்களுக்கான கரம்போட்டியிலும் 19 வயதுப் பெண்களுக்கான எல்லே போட்டியிலும் 19 வயதுப் பெண்களுக்கான கிரிக்கெட் போட்டியிலும் 15 வயதுப் பிரிவு ஆண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியிலும் கனகபுரம் ம.வி. முதலிடம் பெற்றுச் சம்பியனானது.

இதேவேளை, ஆண், பெண்களுக்கான மேசைப்பந்தாட்டப் போட்டியில் இரண்டாமிடத்தையும் 19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான பூப்பந்தாட்டத்தில் இரண்டாமிடத்தையும் 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான பூப்பந்தாட்டத்தில் மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளது.

மாகாண மட்டப் போட்டிகளில் பங்குபற்ற கிளிநொச்சி கனகபுரம் மகாவித்தியாலயம் தெரிவாகியுள்ளது. (ஐ-23)



89 ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தையொட்டி கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் வட மாகாண ரீதியில் நடத்திய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான கயிறு இழுத்தல் போட்டியின் போது... (23)

# தெல்லிப்பழைக்கு இலகு வெற்றி

வலி.வடக்கு மே 25

வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ்.செயலக விளையாட்டுப் பிரிவு யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய பெண்களுக்கான கரபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

வடமராட்சி, கரவெட்டி இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கரவெட்டிப் பிரதேசசெயலக அணியும் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும்வரை தெல்லிப்பழை பிரதேச செயலக அணியின் கைகள் மைதானத்தில் மேலோங்கியிருந்ததுடன் போட்டியும் விறுவிறுப்பற்றதாகக் காணப்பட்டது.

இறுதிப் போட்டியாக இருந்தும் எதிரணி போதிய எதிர்ப்புக் காட்டாமை போட்டியில் விறுவிறுப்பற்ற நிலைமையை ஏற்படுத்தியது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இந்தப் போட்டியில் முதல் மூன்று நேர் சுற்றுக்களை முறையே 2:10, 25:00, 25:04 என்ற புள்ளிகள் அடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி கரவெட்டிப் பிரதேச செயலக அணியை வெற்றிபெற்று யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-86)

# ஆண்களுக்கான கபடிப் போட்டியில் மாவட்ட சம்பியனானது பருத்தித்துறை

வலி.வடக்கு, மே 25

வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் ஆதரவுடன் யாழ். மாவட்டச் செயலக விளையாட்டுப் பிரிவு, யாழ். மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கு இடையே நடத்திய ஆண்களுக்கான கபடிப் போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

தென்மராட்சி, கைதடி வளர்மதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியும் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும்வரை மைதானத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணியின் கைகளே மேலோங்கி இருந்தன.

போட்டியில் பருத்தித்துறை பிரதேச செயலக அணி ஆதிக்கம் செலுத்திய போதிலும் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும் தன்னாலான எதிர்ப்பை வெளிக்காட்டி மோதிக் கொண்டது.

முதல்பாதி ஆட்டத்தில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 46:18 புள்ளிகள் என்ற நிலையில் முடிவடைந்தது.

இரண்டாம்பாதி ஆட்டத்தில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணி புள்ளிகள் பெற வேண்டும் என்ற நிலையில் களமிறங்கிய போதிலும் அது சாத்தியப்படாத நிலையில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 41:26 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

ஆட்ட நிறைவில் பருத்தித்துறைப் பிரதேச செயலக அணி 87:44 புள்ளிகள் என்ற அடிப்படையில் தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை வெற்றிபெற்று மாவட்டச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-86)

# கூட்டுறவாளர் விளையாட்டு விழா: யாழ். மாவட்டம் முதல் இடத்தில்

வலி.வடக்கு மே 25

89ஆவது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு வட மாகாண கூட்டுறவுத் திணைக்களத்தால் வட மாகாண மாவட்ட கூட்டுறவு அணிகளுக்குஇடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் யாழ். மாவட்டக் கூட்டுறவாளர் அணி அதிகூடிய புள்ளிகளைப் பெற்று மாகாண மட்டத்தில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இறுதிப் போட்டிகள் நடைபெற்றன.

இப் போட்டிகளில் யாழ். மாவட்டக் கூட்டுறவாளர் அணி 115 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தையும் முல்லைத்தீவு மாவட்டக் கூட்டுறவாளர் அணி 95 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும் -

வவுனியா மாவட்ட கூட்டுறவாளர் அணி 76 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் -

மன்னார், கிளிநொச்சி மாவட்டங்களின் கூட்டுறவாளர் அணிகள் முறையே 43,11 புள்ளிகளைப் பெற்று நான்காம், ஐந்தாம் இடங்களையும் பெற்றுக் கொண்டன. (ஐ-86)

# சதுரங்கப் போட்டி

யாழ்ப்பாணம், மே 25

இலங்கைப் பாடசாலைகளுக்கான சதுரங்கச் சங்கத்தால் நடத்தப்படும் 7,9,11,13,15 வயதுப் பிரிவு ஆண், பெண் இருபாலாருக்குமான (தனிப்பட்ட) சதுரங்கச் சுற்றுப் போட்டி எதிர்வரும் வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் யாழ்.இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் பங்கு கொள்ள விரும்புவோர் வெள்ளிக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் தங்களது பதிவுகளை மேற்கொள்ள முடியும் எனப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (த-23)

# சதுரங்கப் போட்டியில் மாவட்ட சம்பியன் ஹாட்லி

யாழ். மாவட்டக் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 15 வயதுப்பிரிவு ஆண்களுக்கான சதுரங்கச் சுற்றுப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி யாழ். மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி. (ஐ-86)

# வென்றது முல்லைத்தீவு



89 ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினத்தையொட்டி கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களத்தால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட பெண்களுக்கான வலைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அணி வெற்றி பெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் மாலை இடம்பெற்ற பெண்களுக்கான வலைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதிக் கொண்டது.

இதில் முல்லைத்தீவு மாவட்ட அணி 19:1என்ற புள்ளி அடிப்படையில் வவுனியா அணியை வென்றது. (த-23)

# கராத்தே போட்டியில் வென்றோர்

யாழ்ப்பாணம், மே 25

யாழ். மாவட்ட கராத்தே சங்கத்தின் ஏற்பாட்டில் வட மாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட விளையாட்டுச் சங்கம் நடத்திய கராத்தே சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**காட்டாப்போட்டி**

**ஆண்கள்**- பி.ஜெயந்தன், ஆர்.ஆனந்தகுமார், ரி.சதீஸ்கரன், கே.சதீஸ்குமார்.

**பெண்கள்**- கே. பிரசாந்தினி.

**குமித்தே போட்டி**

**ஆண்கள்- 50 கிலோகிராம் கீழ்**-என். கதிரவன், ரி.உதயசங்கர், ஜே. மைக்கல், ஏ.சகாயநாதன்.

**51-55 கிலோகிராம் - கீழ்**

கே.ராமச்சந்திரா, எ.றஞ்சித் சுமனதாஸ், வை.விமலேஸ்வரன், கே.குகாதாஸன்.

**56-60 கிலோகிராம்**

என். அந்தோனி, எஸ். செல்வநியூட்டன், கே. நிருஷன், பி. காந்தறூபன்.

**61-67 கிலோகிராம்**

எம்.வசந்தகோசன், என். ஜெகதீஸ், ரி.சதீஸ்கரன், ஜோசப் அமலதாஸ்.

**68-75 கிலோகிராம்**

ரி. காந்தராஜ், ஞா.ரமேஸ், எஸ்.ரமணக்காந், ரி. கிரிதரன்.

**76-84 கிலோகிராம்**

எ.எட்மன்றீகன், பி.ஜெயந்தன், ரி. அஜித்தன்.

**84 கிலோகிராம் - மேற்பிரிவு**

எ. லயன்வின்சன், ஆர். சுதாகரன், ரி. அருட்குமரன், எஸ்.இ. அமலன்.

**55-60 கிலோகிராம் - பெண்கள் பிரிவு**- கே.பிரசாந்தினி.

முதல் இரண்டு இடங்களைப் பெற்ற வீரர்களுக்கான கலந்துரையாடல் இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ். மாவட்ட செயலக விளையாட்டு அலுவலகத்தில் இடம்பெறவுள்ளதால் அவர்களைக் கலந்துரையாடலில் பங்குகொள்ளுமாறு யாழ் மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரி எ.எவ்.ஜே. றூபசிங்கம் கேட்டுக் கொண்டுள்ளார். (ஐ-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை

## வேலைக்கான கேள்வி அறிவித்தல் - 2011

கீழ் வரும் வேலைக்கான கேள்வி புதுக்குடியிருப்பு பிரதேச சபையினால் கோரப்படுகின்றது. கீழ் குறித்த வேலைக்கான கேள்வி வைப்பு பணத்தையும், கேள்விப் பத்திரக் கட்டணத்தையும் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் செலுத்தி படிவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி: 26.05.2011 தொடக்கம் 09.06.2011 ந.ப. 12 மணிவரை
2. கேள்வி ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித்திகதி: 09.06.2011 பி.ப. ஒரு மணிவரை
3. கேள்வி திறக்கப்படும் திகதி: 09.06.2011 பி.ப. 2 மணிக்கு (திறக்கப்படும் சமயத்தில் கேள்வி சமர்ப்பித்தவர்கள் சமுகமளிக்கலாம்)
4. கேள்வியை ஏற்கவோ மறுக்கவோ கேள்விச் சபைக்கு உரிமையுண்டு.
5. இக்ராட் (ICTAD) வழிகாட்டல்களின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையை பொறுப்பேற்பவர் போதிய கல்வி ஆற்றலை கொண்டிருக்க வேண்டும்.
6. கேள்வி ஆவணங்கள் வழங்குவதற்கு முன் ஒப்பந்தகாரர் வலுவுள்ள இக்ராட் பதிவுப்புத்தகத்தை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. கேள்விப்பத்திரத்தின் ஒரு பகுதியை செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேச சபை, றெட்பானா, விசுவமடு என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலமோ அல்லது அலுவலகத்தில் காணப்படும் கேள்விப் பெட்டியிலோ இட வேண்டும். மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், முல்லைத்தீவு என்ற விலாசத்துக்கு 2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைக்கு அமைவாக கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.
8. மேலதிக விவரங்களை புதுக்குடியிருப்பு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்வி பத்திரக் கட்டணம் | மீளளிக்கப்படாத வற்வரி | NBT | இருக்கவேண்டிய ஆகக்குறைந்த இக்ராட் தரம் |
|---|---|---|---|---|---|
| றெட்பானா மாணிக்கபுரம் வீதி | 7000.00 | 500.00 | 60.00 | 15.00 | M 09/C10 |

புதுக்குடியிருப்பு பிரதேச சபை,
விசுவமடு.
24.05.2011 (சி/185)

சி.அ.ஆனந்தகுமார்,
செயலாளர்,
புதுக்குடியிருப்பு பிரதேச சபை.

## மரண அறிவித்தல்

### அருளம்பலம் கணேசமூர்த்தி (வித்துவம்- பெயின்ரர்)



நீர்வேலி மத்தி, அரசகேசரி கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தோப்பு வீதி, மட்டுவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட அருளம்பலம் கணேசமூர்த்தி நேற்று (24.05.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் - சின்னம்மா தம்பதியரின் மகனும் இராசையா - செல்லம்மா தம்பதியரின் மூத்த மருமகனும் ருக்குமணியின் (மணி) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான இரத்தினம், நடராசா, மகேஸ்வரி, சிவஞானம் ஆகியோரின் சகோதரனும் பாலசுந்தரத்தின் மைத்துனரும் ஞானசௌந்தரி, ஞானேஸ்வரன் (ராசன் -டோகா), ரவீந்திரகுமார் (ரவி- பிரான்ஸ்), சித்திரா (பிரான்ஸ்), ரஜிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற சண்முகநாதன் (முகாமையாளர் - ப.நோ.கூ.சங்கம், சாவகச் சேரி) மற்றும் ஈஸ்வரி, கௌரி, ஜெயக்குமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் சுதர்சன் - சுகன்யா (லண்டன்), சுவீபன், சுதாகரன் (பிரான்ஸ்), அபிதா,சுஞ்சுதன், திவ்யா, தியானி, சானுஜன், ஜெனி (பிரான்ஸ்), சியானி (பிரான்ஸ்), ஏனொக் (பிரான்ஸ்), தக்சி ஆகியோரின் பேரனும் சுஜனின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2011) புதன்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் மட்டுவில் வடக்கில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மட்டுவில் ஊரி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தோப்பு வீதி,
மட்டுவில் வடக்கு. (சி-184)

தகவல்:
குடும்பத்தினர்

## விபத்தில் இருவர் காயம்

முன்னால் சென்ற ஓட்டோ சமிக்ஞை செய்யாமல் ஒழுங்கை ஒன்றில் திரும்பியதால் மோட்டார் சைக்கிள் ஓட்டோவுடன் மோதியதில் அதில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.

திருகோணமலை, கும்புறுப்பிட்டியைச் சேர்ந்த சி.நித்த்தியானந்தம் (வயது -18), எஸ். நிரோஜித் (வயது 21) ஆகியோரே காயமடைந்தனர். (ஓ-207)

## யுத்த அனுபவம் தொடர்பான மாநாடு கொழும்பில்

'இலங்கையின் பயங்கரவாதத்தை இல்லாதொழித்தல் சம்பந்தமான அனுபவங்கள்' என்ற தொனிப் பொருளிலான சர்வதேச மாநாடு இம் மாதம் 31ஆம் திகதி தொடக்கம் ஜூன் மாதம் 2ஆம் திகதிவரை கொழும்பு கலதாரி ஹோட்டலில் நடைபெறவுள்ளது.

55 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இலங்கை இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான யுத்தத்தில் பெற்ற வெற்றி மற்றும் அனுபவங்கள் பற்றிய இந்த மாநாடு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பணிப்புரையின் கீழ் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## VACANCIES

Vacancies (In Jaffna Branch) For Computer Hardware, Technicians & Receiptionist (Male/ Female)

தகுதியுடையோர் உடன் தொடர்பு கொள்ளவும்.

Tel No :0714182541

Soft View
Academy for Computing & IT
Center For Information Technology (Pvt) Ltd

102, Main Street, சிறைச்சாலை முன்பாக
Jaffna.0212224885, 0779053545
MS Office, DTP, Hardware, Kids Program, Internet &Emai, Type Setting, Web Designing, Video Editing, TypeSettin g, GraphicDesign, Computerized Accounting.

Note: மாணவர் ஒவ்வொருவரும் தமக்குத் தேவையான நேரத்தை தேர்ந்தெடுக்கலாம். (7.30a.m. to 9.30p.m.)

## திருத்தம்

24.05.2011 பக்கம் 21 இல் பிரசுரமாகிய 2ஆம் ஆண்டு நினைவஞ்சலியில் திருமதி பத்மநாதன் ஞானதி என்ற பெயரினை **திருமதி பத்மநாதன் ஞானசத்தி (ஞான தீபம்)** என வாசிக்கவும்.

## தேவை

நிறுவனம் ஒன்றுக்கு O/L தகைமையுடைய Sales Cash Collector தேவை. தகுதியுடையவர்கள் இன்று (25.05.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரை தொடர்பு கொள்ளவும். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி இல:-0789487555.

## 60 வது அகவை நிறைவும் சேவை நயப்பும்

எமது வித்தியாலயத்தில் இந்து சமய பாட ஆசிரியையாக 22 வருடங்கள் அர்ப்பணிப்புடன் கடமையாற்றி 25.05.2011 அன்று தன் அறுபதாவது அகவையில் ஓய்வு பெறும்

**திருமதி.சித்திரா பாலசுப்பிரமணியம்**
(SP Trd.Religion - SLTS - 1)

அவர்கள் சகல சிறப்புக்களும், நீண்ட ஆயுளும் பெற்று வாழ வாழ்த்துகின்றோம்.

பாடசாலை சமூகம்,
யா/கொடிகாமம் அரசினர் வித்தியாலயம்
கொடிகாமம்.

## மரண அறிவித்தல்கள்

### செல்லையா மகேஸ்வரன்(யப்பான்)



117/1, சிவன்கோயில் வடக்கு வீதியைப் பிறப்பிடமாகவும் கஸ்தூரியார் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா - மகேஸ்வரன்(யப்பான்) நேற்றுமுன்தினம் (23.05.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் அம்பிகாதேவியின் அன்புக் கணவரும் ஏரங்கன் (ரஞ்சன்), மைதிலி, பிரதீபன், தர்சினி, சுகர்ணன் ஆகியோரின் அன்புத் தந்தையும் மேரிஸ்ரலா, மனோகரன், இராஜேஸ்வரன், இராஜேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோ தரனும் சரஸ்வதி, வினோரஞ்சிதம், இரத்தினேஸ்வரன், நாகேஸ்வரி, கேதீஸ்வரன் ஆகியோரின் மைத்துனரும் உதயகாந்தனின் மாமனும் மினோஜா, ரதுஷா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.05.2011) புதன்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்ற பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றரர், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாரத் ஸ்ரூடியோ ஒழுங்கை,
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (4551)

தகவல்:
குடும்பத்தினர்

### கந்தையா அருமைநாயகம்

(ஓய்வுபெற்ற தபால் அதிபர் (J.P) )



சுழிபுரம், மூளாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா அருமைநாயகம் நேற்று (24.05.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா தம்பதியரின் மருமகனும் கிறேஸ்பூமணியின் அன்புக் கணவரும் சத்தியராஜன், சத்தியராணி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜோயின் அன்பு மாமனும் ஜெபராஜன், கிறேஸ் தர்ஷினி, சத்தியறஞ்சிற் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று(25.05.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெற்று வட்டுக்கோட்டை தென்னிந்திய திருச்சபை கல்லறைத்தோட்டத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி,
மூளாய்,
சுழிபுரம். (சி-188)

தகவல்:
சத்தியராணி
(மகள்-வவா)

## மரண அறிவித்தல்

### கதிர்காமசேகரம்பிள்ளை பூபாலசிங்கம் (ஐயா)

(முன்னாள் தயாட்சணி ஸ்ரோர்ஸ் உரிமையாளர், மன்னார்)



இணுவில் தெற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமசேகரம்பிள்ளை பூபாலசிங்கம் 21.05.2011 சனிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமசேகரம்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தர் - சுந்தரம் தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் பாசமிகு கணவரும் தயாட்சணி யின் (கனடா) அன்புத் தந்தையும் பேரின்பநாயகத்தின் (கனடா) அன்பு மாமனும் ஆதிவராகன், அமிர்தசாகரன், ஆனந்தகானன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான வள்ளிப்பிள்ளை, துரைராஜசிங்கம், இராசமணி மற்றும் சிவயோகம் (சுவிஸ்), இராச மலர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2011) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் துரைவீதி, இணுவில் தெற்கிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

துரை வீதி,
இணுவில் தெற்கு, இணுவில். (4552)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்ல்

### திருமதி நவரட்ணம் பாக்கியம் (மாம்பழம்மா)



காரைநகர், வலந்தலையைப் பிறப்பிடமாகவும், வட்டு - வடக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி நவரட்ணம் பாக்கியம் நேற்று முன்தினம்(23.05.2011) திங்கட்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான முருகேசு-செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற நவரட்ணத்தின் அன்பு மனைவியும் இராசரத்தினம்(சைவம்), காலஞ்சென்ற செல்லம்மா மற்றும் செல்வரத்தினம், அன்னலட்சுமி, அன்னபாக்கியம், காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் மற்றும் சீதேவி, காலஞ்சென்ற முத்துலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாக்கியம், காலஞ்சென்ற ஆண்டிஐயா மற்றும் மதுரம், கதிரமலை, வேலாயுதம், மனோன்மணி, விநாயகமூர்த்தி, பிறேமா, காலஞ்சென்ற பொற்கொடி மற்றும் கந்தசாமி, குணரத்தினம், தங்கராசா, இராசரத்தினம், காலஞ்சென்ற வாமதேவன் மற்றும் அரியராசா ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற மலர்மணி மற்றும் வரதராஜன், காலஞ்சென்ற மோகனகிஸ்ணன் மற்றும் இராசமலர், தேவமலர், சந்திரமலர், துபாசினி, பவன், சசிகலா(சசி), சண்முகராசா(மோகன்) ஆகியோரின் அன்புத் தாயும் இராசரத்தினம், புஸ்பகாந்தி, முருகானந்தராசா, பாலசுப்பிரமணியம், ஜெயரட்ணம், சிவரூபன், சசிகலா, பரமலிங்கம், நிமால்குமார் ஆகியோரின் அன்பு மாமியும், சுமதி, மாலதி, காலஞ்சென்ற கிரிதரன் மற்றும் நிவேதா, அருந்ததி, ஜவகர், திலீபா, சுரேக்கா, நவநீதன், ஜீவநீதன், மோகனநீதன், அஞ்சனா, மைதிலி, பிரியங்கா, ஆராதனா, பிரதீபன், சுதாகரன், சிவராம், காவியன், துவிகரன், யூலியா, ஜஸ்மின், ஜசிந்தன், ஜனகன், விதுஷா, யதுஷா, ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிலம்பரசன், வைஸ்ணவி, ஐஸ்வர்யா, பிரியங்கா, தருண் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.05.2011) புதன்கிழமை தொல்புரம்-கிழக்கு அந்தோனியார் கோயிலடியிலுள்ள அவரின் மகளின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம்.
(4550) தொ.பே.இல : 0776184306

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகை மதிப்பு விவரம் திரட்டு

முல்லைத்தீவு, மே 25

ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் தொகை மதிப்பு விவரங்கள் திரட்டப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்படும் இந்த வேலைத் திட்டத்தில் வீடு வீடாக தொகை மதிப்பு விவரப் படிவங்கள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தப் படிவத்தில் குடும்ப உறுப்பினர்களின் முழு விவரங்களும் பதியப்படுவதுடன் காணி விவரம், வீட்டின் தற்போதைய நிலை, வீட்டிலுள்ள கிணற்றின் விவரம் என்பவையும் வினாக் கொத்தாக வழங்கப்பட்டுள்ளன.

(க-500)

## யுத்த வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னரின் ரோந்துகள் நேற்று இடம்பெற்றன.

இந்த ஒத்திகை நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான படையினர் ஈடுபட்டனர்.

இந்த ஒத்திகை நிகழ்வு காரணமாக காலிமுகத்திடல் ஊடாக போக்குவரத்து தடை செய்யப்பட்டதால் பெரும் வாகன நெரிசல் ஏற்பட்டது. நீண்டநேரம் வாகனங்களில் காத்திருந்தே பயணத்தைத் தொடர நேரிட்டது.

நாளை மறுதினம் காலிமுகத்திடலில் ஏற்படுத்தப்பட்டுள்ள விசேட பந்தலில் அணிவகுப்பு மரியாதையை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்பார். அத்துடன் நாட்டு மக்களுக்கு உரையாற்றுவார்.

(ஒ-ஐ)

## வலி.வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைக்கப்பட்டிருந்தார்.

இதன்போது அவர் மீள்குடியமர்த்தப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்படவுள்ள பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த விடயங்களை உலக வங்கிக் குழுவிடம் எடுத்துரைத்தார்.

அத்துடன் இதுவரை விடுவிக்கப்பட்ட பிரதேசங்களை கட்டியெழுப்ப 2 ஆயிரத்து 600 மில்லியன் ரூபா தேவை என்ற திட்ட அறிக்கையையும் அங்கு சமர்ப்பித்தார்.

இந்தப் பகுதிகளில் உலக வங்கிக் குழு மேற்கொள்ளவுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-9)

## ஈச்சங்குளம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லறைகள் அழிக்கப்பட்டு இந்த முகாம் அமைக்கப்படுவதாக அவர்களின் உறவினர்கள், கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தனிடம் கவலையுடன் முறையிட்டுள்ளனர்.

தமது உடன் பிறப்புக்கள் புதைக்கப்பட்ட பகுதியில் அமைந்திருந்த நினைவுக் கல்லறைகள் அவர்களது உடல் கள் சிதைக்கப்படுவது வேதனை அளிப்பதாக அந்த மக்கள் சிவசக்தி ஆனந்தனிடம் தெரிவித்தனர்.

இத்தகைய செயலை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு அந்த மக்கள் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரியுள்ளனர்.

(ஒ-ஐ)

## இலங்கைக்குச் சீனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சந்திப்பின் போது, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயற்பாடுகள் குறித்தும் பீரிஸ் சீன அமைச்சருக்கு விளக்கினார் என்று அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இத்தகைய சூழலில் எல்லாப் பிரச்சினைகளையும் இலங்கை அரசும் மக்களும் தமக்குள்ளேயே தீர்த்துக்கொள்ளும் ஆற்றலும் வலுவும் கொண்டிருக்கிறார்கள் என்று சீனா முழுமையாக நம்புவதாக அந்த நாட்டு வெளிவிவகார அமைச்சர் ஜங் ஜிச்சி தெரிவித்துள்ளார் என்றும் இலங்கை வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

தேசிய நல்லிணக்கம் மற்றும் மீள் கட்டுமானம் என்ற இலக்குகளை இலங்கை அடைவதற்கு சீனா என்றும் துணை நிற்கும் என்றும் ஜங் ஜிச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சீனாவுக்கு வருகை தருவதற்கான அழைப்பு ஒன்றையும் அமைச்சர் பீரிஸிடம் அவர் விடுத்தார்.

நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் இந்தியாவுக்கு அமைச்சர் பீரிஸ் மேற்கொண்ட பயணம் வெற்றியளிக்காத நிலையில், அவரது சீனப் பயணம் சாதகமாக அமைந்துள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகிறது. (உ)

## கே.பியின் பேட்டியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோனியா காந்தி, தேர்தல் வெற்றிக்காக ஜெயலலிதாவை தொடர்புகொண்டு வாழ்த்துத் தெரிவித்ததோடு, தேநீர் விருந்துக்கு டில்லி வருமாறும் அழைப்பு விடுத்திருந்தார்.

ஏற்கனவே விடுதலைப் புலிகளுக்கும், ஈழத் தமிழர்களுக்கும் எதிரான உணர்வுகளைக் கொண்டிருந்த ஜெயலலிதா, 2009 போரில் இலங்கை இராணுவத்தினரின் கொடூரச் செயல்கள் குறித்த தகவல்கள் மற்றும் அது குறித்த செய்திகளை அறிந்த பின்னர்தான் ஓரளவுக்குத் தனது நிலையை மாற்றிக்கொண்டார்.

குறிப்பாக இலங்கையில் ஈழத்தமிழர்கள் முகாம்களில் படும் அவதிகளை நேரில் கண்டறிந்து வந்த ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர், இது தொடர்பாக எடுத்துக் கூறிய உண்மைகள்தான் அவரை ஓரளவுக்கு மாற்றியது.

அத்துடன் தமிழகத்தில் உள்ள ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான அமைப்பினர் வாயிலாகவும் அவருக்கு இலங்கை நிலவரம் குறித்து எடுத்துச் சொல்லப்பட்டது. அதன் பின்னரே இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு எதிராகக் குரல் கொடுக்கத் தொடங்கினார் ஜெயலலிதா.

இந்நிலையில் அவரது இந்த மாற்றம், வெறும் வாக்குகளை பெறுவதற்காகத்தானோ அல்லது அவர் மாறவே இல்லையோ என்ற எண்ணம், தேர்தல் வெற்றிக்குப் பின்னர் அவர் 'ஜெயா' தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியின்போது தோன்றியது.

அதாவது ஈழத் தமிழர் பிரச்சினை ஒரு சர்வதேச பிரச்சினை என்றும், மத்திய அரசு சம்பந்தப்பட்ட விடயம் என்றும், இதில் மாநில அரசு ஓரளவுக்குத்தான் தலையிட முடியும் என்றும் கூறியதைப் பார்த்தபோது, ஈழத் தமிழர்களுக்கு ஆதரவான அமைப்பினர்களின் மனதில், 'ஐயோ... இவரும் கருணாநிதி கூறியதைப் போன்றே கை கழுவும் பாணியில் பேசுகிறாரே...!' என்ற ஐயம் ஏற்பட்டது.

இந்நிலையில், போர்க் குற்றச்சாட்டிலிருந்து இலங்கையையும், ஜனாதிபதி ராஜபக்ஷவையும் முட்டுக்கொடுத்துக் காப்பாற்ற தீவிர முயற்சியில் இறங்கியுள்ள மத்தியில் ஆட்சியில் உள்ள காங்கிரஸ் அரசு, ஆதரவாகவும், ஜனாதிபதி ராஜபக்ஷவை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தவேண்டும் என்று ஈழத் தமிழருக்கு ஆதரவாகக் கருத்துக் கூறிய ஜெயலலிதாவிடமிருந்தும், தமிழகத்திலிருந்தும் குரல் எழும்பாத வகையில் முடக்கிப் போட திட்டமிட்டுள்ளது என செய்தி வெளியாகி உள்ளது.

இதன் முதல்கட்டமாக ஜெயலலிதாவை ஈழத் தமிழர்களுக்கு எதிராகத் திருப்பும் நடவடிக்கையை இந்திய உளவுத் துறையான 'றோ' மூலம் மேற்கொண்டிருப்பதாகத் தகவல் வெளியாகி உள்ளன.

இதன் ஓர் அங்கமாக, இலங்கையில் இராணுவத்தின் பிடியில் இருக்கும் கே.பி. என்கிற பத்மநாதனை இந்திய தொலைக்காட்சி ஒன்றின் மூலம் பேட்டி எடுத்து வெளியிட வைத்துள்ளது.

இந்திய தொலைக்காட்சிக்காக அந்தப் பேட்டி எடுக்கப்பட்டது எனக் கூறப்பட்டாலும், அந்தப் பேட்டியில் கேட்கப்படும் கேள்விகளும் அதற்கு கே.பி. கூறும் பதில்களும், கே.பியை ஒரு பகடைக்காயாகப் பயன்படுத்தி ஜெயலலிதாவை ஈழத் தமிழர்களுக்கு எதிராகத் திசை திருப்ப 'றோ' முயற்சிப்பது தெள்ளத் தெளிவாகியுள்ளது எனக் கூறப்படுகிறது.

விடுதலைப் புலிகளே ராஜீவ் காந்தியைக் கொன்றதாகக் குறிப்பிடும் கே.பி., அதற்காக மன்னிப்புக் கோருகிறார். பின்னர் அவர் குறிப்பிடுகையில், ஜெயலலிதா மீது புலிகள் ஆத்திரம் அடைந்திருந்ததாகவும் தெரிவித்துள்ளார்.

ஜெயலலிதாவுக்கு அதன் காரணமகவே 'இசட்' ரக பாதுகாப்பு மத்திய அரசால் வழங்கப்பட்டது என்றும் சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் புலிகள் ஜெயலிதாவையும் சுட்டுக்கொன்றிருப்பார்கள் என்றும் கே.பி. அந்தப் பேட்டியில் கூறியுள்ளார்.

## ராஜீவ்காந்தி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருக்கிறார்கள். எமது மக்கள் மனிதர்களாக வாழ்வதற்கு உதவுங்கள்'' என்றார் கே.பி.

அந்தப் பேட்டியில் இதுபற்றி அவர் தெரிவித்ததாவது:-

கே: ராஜீவ் காந்தியைக் கொல்வதற்கு பிரபாகரன்தான் திட்டமிட்டாரா என்பதை ஒரேயொரு தடவை எங்களுக்காகச் சொல்ல முடியுமா?

ப: அது மறுக்க முடியாத உண்மை. அந்த உண்மை எல்லோருக்குமே தெரியும். புலிகளின் புலனாய்வுப் பிரிவில் இருந்து இந்தக் கொலையுடன் தொடர்புபட்டிருந்தவர்கள் கைது செய்யப்பட்டனர். அந்தக் கொலை நன்கு திட்டமிடப்பட்டு பிரபாகரனாலும் பொட்டு அம்மானாலும் மேற்கொள்ளப்பட்டது. அந்த உண்மை எல்லோருக்குமே தெரியும்.

இந்திய மக்களுக்கு, குறிப்பாக காந்தி குடும்பத்துக்கு நான் ஒன்று சொல்ல வேண்டும்... பிரபாகரனின் தவறுக்காக நான் மன்னிப்புக் கோருகிறேன். எங்களை மன்னித்துவிடுங்கள்; நாங்கள் மன்றாடுகிறோம். எமது மக்கள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். எமது மக்கள் மனிதர்களாக வாழ்வதற்கு உதவுங்கள். எல்லாவற்றுக்குமாக மன்னித்துக்கொள்ளுங்கள். ராஜீவ் காந்தியின் மகனது உணர்வுகளை நாம் புரிந்துகொள்கிறோம். தந்தையும் மகளும் எவ்வளவு தூரம் நெருக்கமாக இருப்பது இயற்கையானது. எங்களுக்கு அதுவும் புரிகிறது -என்றார் கே.பி.

## கிழக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து சென்ற விசேட பொலிஸ் குழு கடந்த 16 ஆம் திகதி பிரதீப் மாஸ்டரைக் கைது செய்தது.

இவரும் இச்சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட ஐவரும் கொழும்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவில் வைத்து தொடர்ந்து விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

இந் நிலையில் கிழக்கு மாகாண சபையின் கூட்டம் நேற்று இடம்பெற்றது. இக் கூட்டத்தில் கலந்துகொண்ட உறுப்பினர்கள் சபையின் முதலமைச்சர் சந்திரகாந்தனின் அலுவலகம் சோதனை செய்யப்பட்டதைக் கண்டித்தனர்.

அதன் பின்னர் பிரதீப் மாஸ்டரை உடன் நீதி மன்றத்தில் ஆஜர் செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்து சபை நடவடிக்கைகளைப் புறக்கணித்தனர்.

சபை நடவடிக்கைகள் அடுத்த மாதத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டன. (ஒ-ஐ)

## மூன்றாம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெற்றுவரும் பேச்சில் மூன்றாம் தரப்பாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கலந்துகொள்ள வேண்டும் எனக் கட்சியின் தவிசாளர் பசீர் சேகுதாவூத் மற்றும் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் எச்.எம்.எம்.ஹரீஸ் ஆகியோர் தெரிவித்திருந்தனர். அது குறித்துப் பதிலளித்த போதே பிரேமச்சந்திரன் இவ்வாறு குறிப்பிட்டார்.

அதேவேளை, பேச்சுக்களில் மூன்றாம் தரப்பாகப் பங்குபற்றாமல், ஆளும் தரப்பிலுள்ள கட்சி என்ற வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசுடன் நேரிலேயே பேச முடியும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே நடத்தப்பட்ட பேச்சுக்களில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்து முஸ்லிம் காங்கிரஸின் தலைமைக்கு கூட்டமைப்பு எடுத்துக் கூறியுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

''இது விடயத்தில் இரு கட்சிகளின் தலைமைகளிடையேயும் நல்ல புரிந்துணர்வு உள்ளது. சிலவேளை அவை முஸ்லிம் காங்கிரஸின் அடுத்த மட்டங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்'' என்றார் சுரேஷ்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம், 2002ஆம் ஆண்டு அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை மற்றும் சுனாமிக்கு பின்னரான பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தம் ஆகியன முஸ்லிம்களின் பங்குபற்றலின்மையினாலேயே முறிவடைந்ததாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அரசியல் பிரிவு பொறுப்பாளர் ஹரீஸ் தெரிவித்திருந்தார். (உ)

## ஐம்பதாவது பிறந்தநாள் வாழ்த்து




### திரு. குமாரசாமி உதயகுமார்

அவர்கள் தனது ஐம்பதாவது பிறந்த தினத்தை பிரான்ஸில் பரிஸ் நகரில் இன்று தன் குடும்பத்தினருடன் வெகுவி மரிசையாக கொண்டாடுகின்றார். இவரை அம்மா, மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம் வாழ்க வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

தையிட்டி மேற்கு. (சி/191) - உறவினர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




தெளிவான வானிலை அனைத்து மாவட்டங்களிலும் நிலவுவதற்கான சாத்தியம் . அநேக மாவட்டங்களில் வெப்பமான கால நிலை நாள் முழுவதும் நிலவும்.

# யாழ்.மாவட்ட அரச சேவையில் தற்போது 569 வெற்றிடங்கள்

யாழ்ப்பாணம், மே.25

யாழ்ப்பாணத்தில் அரச சேவையில் 569 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இந்த வெற்றிடங்கள் பல்வேறு மட்டங்களில் காணப்படுவதாக யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

கிராம சேவையாளர்கள் - 114, எழுதுவினைஞர்கள் - 225, எழுதுவினைஞர் (சுப்றா) - 12, நிகழ்ச்சித்திட்ட உதவியாளர்கள் - 16, அபிவிருத்தி ஒருங்கிணைப்பாளர்கள் - 04, மொழிபெயர்ப்பாளர்கள் - 23, அலுவலக உதவியாளர்கள் - 128, வாகன சாரதிகள் - 11, தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் - 18, பொறியியலாளர்கள் - 11, எஸ்.எல்.ஏ.எஸ். பதவிநிலை உத்தியோகத்தர்கள் - 07 ஆகிய வெற்றிடங்கள் தற்போது உள்ளன.

இவையனைத்தும் யாழ். மாவட்டத்திலுள்ள சகல அரச திணைக்களங்களிலும் காணப்படும் வெற்றிடமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்று கேட்டதற்கு, இந்த வெற்றிடங்கள் தொடர்பாகப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு தெரியப்படுத்தியுள்ளேன் . அவர்கள் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர் - என்றார் அவர்.(ஒ-15)

## அமைச்சர் திசாநாயக்கவுடன் உலமா சபை பேச்சு

கொழும்பு, மே 25

பல்கலைக்கழக மாணவர்களுக்கு இராணுவ முகாம்களில் தலைமைத்துவப் பயிற்சி வழங்குவது குறித்து அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை அச்சம் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி வழங்கும் திட்டம் குறித்து அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபை முக்கியஸ்தர்கள் உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்காவை சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

தலைமைத்துவப் பயிற்சியின் போது இராணுவ முகாம்களில் மாணவ, மாணவிகள் தங்கி இருப்பதும், மாணவ மாணவிகள் ஒன்றாகப் பயிற்சியில் ஈடுபடுவதும் இஸ்லாமிய கலாசாரத்துக்கு முரணான விடயங்கள் இடம்பெற வழிவகுக்கலாம் என குழுவினர் அமைச்சரிடம் விளக்கினர். (ஒ-சி)

யாழ்.நகரில் நேற்று அதிரடி நடவடிக்கை:

## விலைப்பட்டியல் வைக்கத் தவறிய இருபது வர்த்தகர்கள் சிக்கினர்

யாழ்ப்பாணம், மே 25

கொழும்பில் இருந்து வருகை தந்த விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவின் விசேட குழு யாழ்.நகரில் நேற்று வர்த்தக நிலையங்களில் திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

நேற்றைய இந்த நடவடிக்கையின் போது விலைப்பட்டியல் இன்றி வியாபாரத்தில் ஈடுபட்ட 20 வர்த்தகர்கள் சிக்கினர். இவர்களுக்கு யாழ்.நீதிமன்றம் 32 ஆயிரத்து 500 ரூபா அப ராதம் விதித்தது.

யாழ்.மாவட்ட விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவின் அலுவலகமும் கொழும்பில் இருந்து வருகை தந்திருந்த தலைமை அலுவலகத்தின் விசேட குழுவும் யாழ்.நகரில் உள்ள வர்த்தக நிலையங்களில் நேற்று நண்பகல் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டன.

**இவர்களுக்கு அபராதமாக ரூ.32, 500 விதிப்பு**

இதன்போது பாதணி விற்பனையகம், புடைவைக் கடை, வீட்டுப் பாவனைப் பொருள்கள் விற்பனை நிலையம் என்பவற்றில் விலைப் பட்டியல் இன்றி வியாபாரத்தில் ஈடுபட்ட 20 வர்த்தகர்கள் யாழ். நீதிமன்றத்தில் நேற்று ஆஜர்ப் படுத்தப்பட்டனர்.

வழக்குகளை விசாரித்த யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராசா விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத வர்த்தகர்கள் 20 பேருக்கும் 32, 500 ரூபா அபராதம் விதித்தார். (ஒ-9)




மக்கள் விடுதலை முன்னணியின் தமிழ் மொழி மூல சுவரொட்டிகள் அம்பாறை மாவட்டத்தின் தமிழ், முஸ்லிம் பிரதேசங்களில் ஒட்டப்பட்டுள்ளன.

''ஊடக அடக்குமுறையை உடனடியாக நிறுத்து'', ''தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்'', அவசரகாலச் சட்டத்தை அகற்று'', ''பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாதொழி'' என்பன போன்ற வாசகங்கள் அவற்றில் காணப்படுகின்றன. (ஒ-30)

## போதையில் இடையூறு விளைவித்த மூவருக்கு ரூ. 3 ஆயிரம் அபராதம்

யாழ்ப்பாணம், மே 25

வீதியில் மதுபோதையில் நின்று போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்து ரகளை புரிந்த 3 பேருக்கு யாழ்.நீதிமன்றம் 3 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

குருநகர் வீதியில் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சோதனையின் போது மேற்படி மூவரும் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிமன்றில் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

வழக்கை விசாரணை செய்த யாழ்.நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராசா 3 பேருக்கும் தலா ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். (ஒ-9)

மங்கல நிகழ்வுக்கு அணிந்துவிட்டுத் தருவதாகக் கூறி

## நால்வரிடம் தாலி உட்பட நகைகளை வாங்கி வங்கியில் அடைவு வைத்த கில்லாடிப் பெண்

தென்மராட்சி, மே 25

மங்கல நிகழ்வுக்கு அணிந்துவிட்டுத் தருவதாகக் கூறி நான்கு பேரிடம் தாலிக்கொடி உட்பட தங்க நகைகளைப் பெற்று அவர்களுக்குத் தெரியாமல் வங்கிகளில் அடைவு வைத்து ஏமாற்றி மோசடி செய்த பெண்ணைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொடிகாமம், கச்சாய் வீதியைச் சேர்ந்த மூன்று குடும்பங்களிடமும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவரிடமும் சுமார் 14 லட்சத்து 70 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளை வாங்கி மோசடி செய்ததாக நல்லூர், பருத்தித்துறை வீதியைச் சேர்ந்த பெண்ணின் மீது சாவகச்சேரி நீதிமன்றில் கொடிகாமம் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

**பொலிஸ் காவலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு**

நேற்று வழக்கை விசாரித்த நீதிவான் மா.கணேசராஜா இந்தப் பெண்ணைப் பொலிஸ் காவலில் வைத்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

கொடிகாமம், கச்சாய் வீதியைச் சேர்ந்த உதயகுமார் தபோநிதி என்பவரிடம் 6 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், கந்தசாமி உதயலதா என்பவரிடம் 3 லட்சத்து 15 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், விக்டர் பேர்ணாட் விக்டர் மயூரி என்பவரிடம் 35 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஜெயக்குமார் வீரசிங்கம் என்பவரிடம் 4 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் வாங்கி ஏமாற்றி மோசடி செய்ததாகக் குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

கொடிகாமம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-207)

## மல்லாகத்தில் மாணவனைக் காணவில்லை

வலி.வடக்கு, மே 25

மல்லாகம் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவனைக் காணவில்லை என்று தெல்லிப்பழைப் பொலிஸ் நிலையத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை பெற்றோரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தரம் 7 இல் பயிலும் மாணவன் ஒருவனே நேற்றுமுன்தினம் பாடசாலைக்குச் சென்று வீடு திரும்பவில்லை என முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட மாணவனின் நடத்தை சம்பந்தமாகக் கதைப்பதற்காகப் பாடசாலைக்குப் பெற்றோரை அழைத்து வரும்படி பாடசாலை நிர்வாகம் கூறியதாகவும் அதனைத் தொடர்ந்து மாணவன் நேற்றுவரை வீடு திரும்பவில்லை என்றும் தெரியவருகின்றது. (த-86)

# நிகழ்வுகள்

### ஞானச்சுடர் வெளியீட்டு விழா

தென்மராட்சி, மே 25

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தில் சைவ கலை, பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஆன்மிக சஞ்சிகையான ஞானச்சுடர் இம்மாத இதழ் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு வெளியிடப்படவுள்ளது. (ற-236)

### சுதேச வைத்திய சபை பொதுக் கூட்டம்

கொழும்புத்துறை, மே 25

சுதேச வைத்திய சபையின் பொதுக்கூட்டம் யாழ். இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்தில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

சுதேச வைத்திய சபைத்தலைவர் சு.ஸ்ரீவிக்கினேஸ்வரா தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் பொதுக்கூட்டத்தில் அங்கத்தவர்களைக் கலந்து கொள்ளுமாறும் புதிய அங்கத்தவர்களை இணைந்து கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-135)

### ஆன்மிக நிகழ்வுத் தொடர்

தென்மராட்சி, மே 25

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சூழலில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் ஆன்மிக நிகழ்வுகள் நடைபெற்றுவரும்.

அதன்தொடர்ச்சியாக ஆன்மிக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மாணவ, மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும். (ற-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவேந்திர சில்வாவின் விசாவை ரத்துச் செய்யுமாறு நாடு கடந்த தமிழீழ அரசு அமெரிக்காவிடம் கோரிக்கை

இனப்படுகொலை, போர்க் குற்றங்கள், மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டதற்கான ஆதாரங்களின் அடிப்படையில், ஐ.நாவுக்கான சிறிஇலங்கையின் பிரதி நிரந்தர பிரதிநிதி மேஜர் ஜெனரல் சவீந்திர டீ சில்வா மீது நடவடிக்கை எடுக்குமாறு அமெரிக்க அரசிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசுகம், அமெரிக்க பல்கலைக் கழகத்தின் UNROW மனித உரிமைகளுக்கான சட்ட ஆலோசனை நிறுவனம், SPEAK மனித உரிமைகளுக்கான முன்னெடுப்பு மையம் ஆகியன இணைந்து இந்த கோரிக்கையை அமெரிக்க அரசிடம் முன்வைத்துள்ளன.

இலங்கை இராணுவத்தின் 58ஆவது படைப்பிரிவின் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சவேந்திர டீ சில்வா, இனப்படுகொலை, போர்க்குற்றங்கள், மனிதத்துக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டுள்ள நிலையில், அவர் தற்போது அனுபவித்து வரும் ஐ.நா.வுக்கான இராஜதந்திரிகளுக்கு உரிய சட்டவிதி விலக்கின் பாதுகாப்பை இழந்தவர் ஆகுகின்றார்.

எனவே அவரது இராஜதந்திர விசாவை இரத்து செய்து அமெரிக்காவில் இருந்து வெளியேற்றுமாறும் இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை, மனித உரிமைகள் அமைப்புகளின் அறிக்கைகள் உட்பட அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் போர்க்குற்றங்களுக்கான பிரிவின் ஒக்டோபர் 29ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிக்கையும் இந்தக் கோரிக்கை மனுவுடன் இணைக்கப்பட்டுள்ளன.

இனப்படுகொலை, ஏனைய மக்களை அவர்களின் நம்பிக்கைகளுக்காக தண்டித்தல், சித்திரவதை செய்தல், சட்டத்துக்கு புறம்பான வகையில் மரணதண்டனை வழங்குதல் போன்ற செயல்களில் ஈடுபட்டவர்களும், இவ்வாறான செயல்களுக்கு துணை போனவர்களும், இந்த செயற்பாடுகளில் பங்குபற்றியவர்களும் அமெரிக்காவில் இருந்து அகற்றப்படக் கூடியவர்கள் என அமெரிக்காவின் குடிவரவு சட்டத்தில் வெளிப்படையாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனவே, இராஜதந்திரிகளுக்கு உரிய சட்டவிதிவிலக்கின் பாதுகாப்பு மேஜர் ஜெனரல் சவேந்திர டீ சில்வாவை அமெரிக்க மண்ணில் இருந்து அகற்றப்படுவதில் இருந்து பாதுகாக்கவில்லை என்றும் இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐ.நாவுக்கும் அமெரிக்க அரசுக்கும் இடையிலான உடன்பாட்டின் பிரகாரம், பொதுவாக ஐ.நா. தூதுவர்கள் இராஜதந்திர பாதுகாப்பை பெற்றுள்ள போதிலும், ஒரு இராஜதந்திரி அமெரிக்காவில் இருப்பது அமெரிக்க அரசுக்கோ அல்லது அதன் சட்டவிதிகளுக்கு பாதகமாக இருக்குமானால் அந்த இராஜதந்திரியின் விசாவை இரத்து செய்யும் அதிகாரம் அமெரிக்க அரசுக்கு உண்டு.

முன்னர் பல தடவைகள் அமெரிக்க அரசு தனது செயற்பாட்டின் மூலம் இதனை வெளிப்படுத்தியுள்ளது.

உதாரணமாக நாசி ஜேர்மனியின் செயற்பாடுகளில் பங்கு கொண்டதன் காரணத்தால் ஒஸ்ரிய ஜனாதிபதிக்கும் முன்னாள் ஐ.நா செயலாளர் நாயகம் கெர்ட் வால்ட் ஹெய்முக்கும் 1987இல் அமெரிக்காவுக்குள் பிரவேசிப்பதற்கு விசா மறுக்கப்பட்டது.

எனவே, மேஜர் ஜெனரல் சவேந்திர டீ சில்வாவுக்கு இராஜதந்திர விசா வழங்கியுள்ள முடிவை முற்று முழுதாக அமெரிக்க அரசு மீளாய்வு செய்ய வேண்டும் என்றும் இந்த மனுவில் கோரப்பட்டுள்ளது.(தமிழ்வின்)

## இணையச் செய்திகள்

### கப்பம் கோரி மிரட்டியவர் கைது

18 வயதுடைய மாணவி ஒருவரின் நிர்வாணப் படங்களை இணையத்தளத்தில் வெளியிடப் போவதாகவும், அவ்வாறு செய்யாதிருக்க வேண்டுமெனில் தனக்கு நாற்பதாயிரம் ரூபா தரவேண்டும் எனவும் கோரி மிரட்டல் விடுத்ததாகக் கூறப்படும் ஒருவர் குருநாகல் பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

ஹெட்டிப்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞனே குருநாகல் நகரில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

குளியாப்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த மாணவி தனது பெற்றோருடன் குருநாகல் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்த்தனவிடம் செய்த முறைப்பாட்டினைத் தொடர்ந்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளையடுத்தே இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை குருநாகல் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-10) (தமிழ்மிரர்)

### லஞ்ச ஊழல் குறித்து விசாரணை

அரசாங்கத்தின் முக்கிய அமைச்சர்களுக்கு எதிரான இலஞ்சம் மற்றும் ஊழல் வழக்குகளின் விசாரணைகளை முன்னெடுக்க இலஞ்ச, ஊழல் மற்றும் மோசடிகள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதிலும் குறிப்பாக கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதிக்குப் பின்னர் அமைச்சர்கள் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள் குறித்தே முதலாவதாக விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ஒ-10)

# இலங்கை போர் அனுபவப் பகிர்வு மாநாட்டில் 42 நாடுகளின் 300 பிரதிநிதிகள் பங்கேற்பு

இலங்கை இராணுவம் நடத்தவுள்ள போர் அனுபவப் பகிர்வு மாநாட்டில் 42 நாடுகளின் 300 பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளதாக இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 31ஆம் திகதி தொடக்கம் ஜூன் 2ஆம் திகதி வரை கொழும்பில் நடைபெறவுள்ள தீவிரவாதத்தைத் தோற்கடித்த இலங்கையின் அனுபவங்கள் என்ற கருத்தரங்கு தொடர்பாக இராணுவத் தளபதி செய்தியாளர்களுக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியதாவது:

தீவிரவாதத்தை எப்படி தோற்கடித்தது என்பது பற்றி இலங்கை இராணுவம் எதையும் மறைக்கவில்லை. உலகின் ஏனைய நாடுகளுடன் அந்த அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ள நாம் தயாராக இருக்கிறோம்.

இந்தக் கருத்தரங்கில் கலாநிதி றொகான் குணரட்ண- அமெரிக்காவின் முன்னாள் இராஜாங்கச் செயலாளர் கொண்டலிசா றைஸின் ஆலோசகர் கலாநிதி டேவிட் கில்குலென்- கலாநிதி அமட் காசிம் ஆகியோர் முக்கிய பேச்சாளர்களாகப் பங்கேற்பர்.

25 அனைத்துலக ஊடக நிறுவனங்களும் இந்த கருத்தரங்கில் பங்கேற்க அனுமதி கோரியுள்ளன.

இந்த மூன்று நாள் கருத்தரங்கிற்கு 45 மில்லியன் ரூபா செலவிடப்படவுள்ளது.

(ஒ-10) (தமிழ்வின்)



2600வது பௌத்த ஜயந்தி விழாவில் பங்கேற்பதற்காக கடந்தவாரம் அமெரிக்கா சென்றிருந்த விமல் வீரவன்சவும், முன்னாள் இராணுவ அதிகாரியுமான சவேந்திர சில்வாவும் இணைந்து ஐ.நா. நிபுணர் குழு அறிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தனர்

இந்த ஆர்ப்பாட்டம் கடந்த 19ஆம் திகதி நியூயோர்க்கில் இடம்பெற்றது. ஆர்ப்பாட்டத்தில் அமெரிக்கா வாழ் இலங்கையர்களில் 9 பேர் மாத்திரமே கலந்துகொண்டனர்.

(தமிழ்வின்)

# லசந்த படுகொலை குறித்து சுயாதீன விசாரணை அவசியம்

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க படுகொலைச் சம்பவம் தொடர்பில் சுயாதீனமான விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

நாட்டில் சிவில், மனித மற்றும் அரசியல் உரிமைகள் உறுதிப்படுத்த வேண்டும் என தாம் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தியுள்ளதாகவும் சஜித் பிரேமதாச மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

லசந்த படுகொலைச் சம்பவத்தை சட்டத்திற்கு புறம்பான வகையில் மேற்கொள்ளப்பட்ட பாரிய படுகொலைச் சம்பவமாகும். லசந்த படுகொலைச் சம்பவத்துடன் சரத் பொன்சேகாவுக்கு தொடர்பு இருப்பதாக நான் ஒரு போதும் குறிப்பிட்டதில்லை.

எனினும் லசந்தவின் படுகொலைக்குக் காரணமானவர்களை இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை என்பது பெரும் ஆச்சரியமாக உள்ளது என்றார்.

(ஒ-10) (தமிழ்வின்)

### ஆர்ப்பாட்டத்தால் கட்டுநாயக்காவில் பதற்றம்

தனியார் ஓய்வூதியச் சட்டமூலத்திற்கு எதிராகக் கட்டுநாயக்க நீர்கொழும்பு ரயில் பாதையை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை கலைப்பதற்காக சுமார் 350 விமானப்படையினரும் பொலிஸாரும் ஈடுபடுத்தப்பட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் கொங்கிறீட் தூண்களைப் பயன்படுத்தி ரயில் பாதையை மறித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்காக ஆர்ப்பாட்டக்காரர்கள் பின்னர் பொலிஸாருடன் உடன்பாடொன்றுக்கு வந்ததாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயகொடி தெரிவித்தார்.

பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகம் எதுவும் மேற்கொள்ளவில்லை எனவும் ஆனால், ஆர்ப்பாட்டக்காரர்கள் கொங்கிறீட் தூண்களை மூலம் ரயில் பாதையை மறித்து, ரயிலை விட்டு இறங்குமாறு பயணிகளை வலியுறுத்தினர் என பொலிஸ் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

(10), (தமிழ் மிரர்)

### மருந்துப் பொருள்கள் மறைக்கப்பட்டமை குறித்து விசாரணை

மஹரகம தேசிய புற்றுநோய் நிறுவனத்தில் 250 மில்லியன் ரூபா பெறுமதியான அத்தியாவசிய மருந்துப் பொருள்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை தொடர்பில் உடனடியாக விசாரணையைத் தொடங்குமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன கட்டளையிட்டுள்ளார்.

புற்றுநோய் மருந்துகளின் விநியோகம், பாவனை என்பவை தொடர்பில் முகாமைத்துவ, கண்காணிப்பு ஏற்பாடுகள் ஒழுங்காக இல்லாமையாலேயே மருந்து தட்டுப்பாடு ஏற்படுவதாக அமைச்சர் கூறினார்.

புற்றுநோயாளிகளுக்கு கொடுப்பதற்கென 800 வகையான ஊசி மருந்துகள் உள்ளன. இதில் ஒன்று 24,000 ரூபாவரை பெறுமதியானது. வைத்தியசாலைகளில் தற்போது மருந்து தட்டுப்பாடு இல்லை. அரசாங்க வைத்தியசாலைகளுக்கு தேவையான 95 வகை அத்தியாவசிய மருந்துகள் தொடர்ந்து கிடைப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று அவர் குறிப்பிட்டார்.(தமிழ்வின்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சிறையில் உண்ணாவிரதப் போரில் குதித்துள்ள கைதிகளுடன் மாவை சந்திப்பு

## நீதியமைச்சர், சட்டமா அதிபரிடம் எடுத்துரைப்பதாக உறுதி

யாழ்ப்பாணம், மே 25

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராசா நேற்றுப் பிற்பகல் யாழ்.சிறைச்சாலைக்குச் சென்று உண்ணா விரதப் போராட்டத்தை மேற்கொண்டு வரும் அரசியல் கைதிகளைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

பெண் ஒருவர் உட்பட எட்டுக் கைதிகள் நேற்றுமுன்தினம் தொடக்கம் தமது விடுதலையை வலியுறுத்தி உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

இந்தக் கைதிகள் தங்களின் குற்ற ஒப்புதல் வாக்கு மூலங்கள் மேல் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்ட நிலையில் தாங்கள் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளது குறித்தும் -

தங்களின் குடும்ப நிலைமை, பொருளாதாரப் பிரச்சினை, துன்ப துயரங்கள் போன்ற விடயங்களையும் மாவை சேனாதிராசாவிடம் விவரித்தனர்.

அனைத்தையும் மிகவும் கரிசனையுடன் கேட்டறிந்து கொண்ட மாவை சேனாதிராசா, தாம் நீதியமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருடன் தொடர்புகொண்டு சாதகமான முடிவைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்தார்.

அரசுடன் நடைபெற்றுள்ள பேச்சுக்களின் போது தமிழ்க் கைதிகளின் விடுதலை குறித்து வலியுறுத்தி வந்துள்ளோம். ஆனால் அரசு இது விடயத்தில் ஏனோ தானோ என்று நடந்து கொள்கிறது. எனினும் நாங்கள் விடாது தொடர்ந்து எடுத்துக் கூறி, அரசியல் கைதிகளை விடுவிக்க நடவடிக்கை எடுப்போம் என்றும் - சேனாதிராசா கைதிகளிடம் தெரிவித்தார்.

அதேசமயம், சாதகமான பதில் கிடைக்கும் வரை எமது உண்ணாவிரதப் போராட்டம் தொடரும் என்று கைதிகள் மாவையிடம் உறுதிபடத் தெரிவித்தனர். (ஒ-14-4)

# குடாநாட்டில் 32 வீத நிலப்பரப்பில் நிலக்கண்ணிகள் அகற்றப்பட்டு விட்டன

## இன்னும் ஏழு வீதப்பகுதியே எஞ்சியுள்ளது

யாழ்ப்பாணம், மே 25

யாழ். மாவட்டத்தில் ஏற்கனவே 32 வீத நிலப்பரப்பில் நிலக்கண்ணிகள் அகற்றப்பட்டு விட்டன. இன்னும் ஏழு வீதமான பகுதியிலேயே கண்ணிவெடிகள் அகற்றும் பணிகள் மேற்கொள்ளப் பட வேண்டும். நிலப் பரப்பின் ஐந்து வீதமான பகுதிகளில் கண்ணி வெடியகற்றும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

இவ்வாறு யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உயர் பாதுகாப்பு வலயங்களாக இருந்த பிரதேசங்களில் கண்ணிவெடி ஆபத்து இருக்கின்றமையினாலேயே மீள்குடியேற்ற நடவடிக்கைகள் தாமதமாகி வந்தன. தற்போது வேகமாகக் கண்ணிவெடியகற்றும் செயற்பாடு இடம்பெறுவதனால் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் துரிதமாக இடம்பெறுகின்றன.

யாழ். குடாநாட்டின் 32 சதவீதமான நிலப்பரப்பில் ஏற்கனவே கண்ணிவெடியகற்றும் நடவடிக்கைகள் பூர்த்தியடைந்துள்ளன. 56 சதவீதமான நிலப்பரப்பில் கண்ணிவெடி அகற்ற வேண்டிய தேவையில்லை.

கண்ணிவெடி அகற்றப்பட்டு அதற்கான உறுதிச்சான்றிதழ்கள் கிடைக்கும்போது அந்தப் பிரதேசத்தில் மக்களை மீள்குடியமர்த்தும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் - என்றார் அரச அதிபர். (ஒ-15)

# மூன்று லட்சம் உல்லாசப் பயணிகள் 4 மாதங்களுக்குள் இலங்கை வருகை

கொழும்பு, மே 25

இந்த ஆண்டு ஜனவரி முதல் ஏப்ரல் வரையான நான்கு மாத காலத்துக்குள் 2 இலட்சத்து 78 ஆயிரத்து 959 வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கை வந்துள்ளதாக இலங்கை உல்லாசப் பயண அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டின் முதல் நான்கு மாத காலத்துடன் ஒப்பிடும் போது இது 40.4 வீதமான வளர்ச்சி எனவும் அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள ஆகப்பிந்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த தகவல்களுக்கு அமைய கடந்த ஆண்டின் முதல் நான்கு மாத காலத்துக்குள் இலங்கைக்கு வருகை தந்துள்ள வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் எண்ணிக்கை 1 இலட்சத்து 98 ஆயிரத்து 709 ஆகும்.

இந்த ஆண்டின் முதல் நான்கு மாதகாலத்துள் பெருமளவு உல்லாசப் பயணிகள் மேற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்தே இங்கு வந்துள்ளனர். அந்த உல்லசப்பயணிகளின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 16 ஆயிரத்து 948 ஆகும். அவர்களுள் 37 ஆயிரத்து 22 பேர் ஐக்கிய இராச்சியத்திலிருந்தும் 20 ஆயிரத்து 928 பேர் ஜேர்மனியிலிருந்தும் 19 ஆயிரத்து 577 பேர் பிரான்ஸில் இருந்தும் இங்கு வந்துள்ளனர். (த-22)

# உதைபந்தாட்ட அணிகளை தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 25

இலங்கை உதைப்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்பட்டு வரும் 'ஏவ்.ஏ' வெற்றிக்கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரின் அரை இறுதியாட்டம் ஒன்று எதிர்வரும் 11 ஆம் திகதி சென் ஜோன்ஸ் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

இந்த அரை இறுதியாட்டத்துக்கு முன்னராக இடம்பெறவிருக்கும் காட்சி உதைப்பந்தாட்டப் போட்டியில் பங்குபற்றும் யாழ் மாவட்டப் 19 வயதுப் பிரிவு அணியைத் தெரிவு செய்யும் வகையில் நடைபெறவிருக்கும் விலகல் முறையிலான உதைபந்தாட்டப் போட்டியில் பங்கு கொள்ளவிரும்பும் பாடசாலைகள் உதைப்பந்தாட்ட இணைப்பாளருடன் அல்லது யாழ். உதைபந்தாட்ட லீக்கின் செயலாளருடன் நாளை வியாழக்கிழமைக்கு முன்னர் தொடர்பு கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளார்கள். (த-23)

# வடக்கின் எண்ணெய் வளம் குறித்து யாழ். செயலகத்தில் நேற்று ஆராய்வு

## துறைசார் புத்திஜீவிகளுடன் அதிகாரிகள் கலந்துரையாடல்

வடபிராந்திய கடற் பிரதேசங்களில் எண்ணெய் வள ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதற்கான பணிகள் முன்னெடுக்கப்படும் போது ஏற்படும் பாதிப்புகள் தொடர்பாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இலங்கையின் மன்னார் முதல் முல்லைத்தீவு வரையிலான கடற்பிரதேசத்தில் பெற்றோலிய வளங்கள் இருப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. எனவே குறித்த கடற் பிரதேசங்களில் துளையிட்டு அவற்றில் எண்ணெய் வளம் உள்ளதா என்று ஆராயப்படவுள்ளது.

இந்த ஆய்வின் மூலமாக எதிர்காலத்தில் நாட்டுக்குத் தேவையான பெற்றோலியத்தை பெற்றுக் கொள்ளும் அதேவேளை இந்த அகழ்வின் மூலமாக நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பணிகள் மேற்கொள்ளப் பட வேண்டுமென்பதால் அதற்கான முன் ஆயத்தம் தொடர்பான கலந்துரையாடலே செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் பேராசிரியர் ஜெயசிங்க வயம்ப பிரதீப் (றுகுணு பல்கலைக்கழகம்) கலாநிதி ரத்நாயக்க (மொறட்டுவ பல்கலைக்கழகம்) வைத்தியர் அபேரட்ணா, ராஜாரட்ணம் (சிரேஷ்ட திட்ட முகாமையாளர் -சூழலியல்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதில் யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் மற்றும் யாழ். மாவட்டத்தின் சகல பிரதேச செயலர்களும், உதவி அரசாங்க அதிபர்களும் கலந்து கொண்டனர்.

இந்த நடவடிக்கை மூலம் சுற்றாடல் சம்பந்தமான பாதிப்புகள், தொல்பொருள் சம்பந்தப்பட்ட பாதிப்புகள், கலாசார பாதிப்புகள் என்பன ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உண்டு. மேலும் கடலில் மேற்கொள்ளப்படும் இந்த ஆய்வுகளின் மூலம் மீன் உற்பத்தி பாதிப்படையலாம். இதன் காரணமாக கடற்தொழிலை நம்பிவாழும் குடும்பங்களும் பாதிப் படையலாம் எனவே இவையனைத்தையும் கருத்தில் கொண்டே நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்காக எவ்வாறான நடவடிக்கைகள் மூலம் பாதுகாக்கலாம் என்றே கலந்துரையாடப்பட்டது. (ஒ-15)

# கிழக்கு மாகாண சபைக் கட்டடத்தில் இனி சகல அலுவலகங்களும்

திருகோணமலை, மே 25

கிழக்கு மாகாண சபைக்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள கட்டடத் தொகுதியில் சபையின் சகல திணைக்களங்களும் மாத இறுதியில் இருந்து இயங்க ஆரம்பிக்கும்.

உட்துறைமுக வீதியில் தற்சமயம் இயங்கிவரும் மாகாண சபைக்கெனத் தனியான கட்டடத்தொகுதி யாழ்-திருமலை வீதியில் வரோதய நகரில் அமைக்கப்பட்டு வந்தது.

அந்தப் பணிகள் பூர்த்தியாகி மாகாண சபையின் திணைக்களங்கள் தற்சமயம் இடம்மாறி வருகின்றன.

முதலமைச்சர் அலுவலகம், பிரதம செயலாளர் அலுவலகம் ஆகியன மாத இறுதியில் புதிய கட்டடத் தொகுதியில் இயங்க ஆரம்பிக்கும் எனத் தெரிவிக்கப் பட்டது.

வசதிகள் குறைந்த நிலையில் இதுவரையும் தற்காலிக கட்டடத்தில் இயங்கிவந்த மாகாணசபை முழு வளங்களுடன் புதிய கட்டடத் தொகுதியில் மாத இறுதியிலிருந்து இயங்கும் என்று மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# வவுனியா நகரசபையின் புதிய தலைவர் தெரிவில் இன்னும் தாமதம் ஏன்?

வவுனியா, மே 25

வவுனியாவில் நகர சபைத் தலைவராக இருந்து பதவி விலகிய என். ஜி நாதனின் இடத்துக்கு புதிய உறுப்பினர் ஒருவரை நியமிக்குமாறு தேர்தல் ஆணையாளர் அறிவிக்காமையே புதிய தலைவர் நியமனத்திலே தாமதம் ஏற்பட்டுள்ளது.

தலைவர் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்த எஸ். ஜி. நாதனின் தமிழரசுக் கட்சி உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

இதுதொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு தமிழரசுக் கட்சி அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் நாதனின் பெயரை நீக்கி புதிய உறுப்பினரின் பெயரை தேர்தல் ஆணையாளர் அறிவிக்கவேண்டும். இதுவரை தேர்தல் ஆணையாளரின் பதில் கிடைக்கவில்லை.

பதில் கிடைத்ததும் புதிய தலைவரை நியமிப்பது குறித்து நாடாளுமன்றக் குழு முடிவு செய்யும் என்பது வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் உதயனுக்குத் தெரிவித்தார். (ஒ-ஐ)

தேவை

றொசானி - காமன்ஸ்ஸுக்குத் தையல் தெரிந்த பெண்பிள்ளைகள் தேவை. தூர இருந்து வருபவர்களுக்கு இலவசமாகத் தங்குமிட வசதி செய்து தரப்படும்.

தொடர்பு-
றொசானி காமன்ஸ், 263/1 இராஜகாரியார் வீதி, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய்.

கிளை-
சபாபதிப்பிள்ளை வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

வேலைவாய்ப்பு

- வைண்டிங் - (பழகியவர்கள், பழக ஆர்வம் உள்ளவர்கள்)
- Offset Printing - பழகவிரும்புகிறவர்கள் (ஆண்)
- Computer Designer - (ஆண்கள் - பெண்கள்)
- ஸ்கிறின் பிறின்ரிங் - (பழகவிரும்புகிறவர்கள்)

(யாழ். மாநகர சபைக்கு உட்பட்டவர்களுக்கு முன்னுரிமை)
25, 26 ஆம் திகதி காலை 9.00 தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை நேரில் சமுகம் தரவும்.

மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்
15/2, முருகேசர் லேன், நல்லூர், யாழ்ப்பாணம்.

வாடகைக்கு



கூலர் வான் வாடகைக்கு விடப்படும்.
1Km 42/=
தொடர்புகளுக்கு:- 0779238564.
நிரோசன் வீடியோ, பருத்தித்துறை.




சகல மரங்களையும் இலகுவாக துண்டாக்குவதற்கு பயன்படும் வாள்
★ போலிகளை வாங்கி ஏமாற வேண்டாம்
ஆர்க் என்ரப்பிறைசஸ்
150, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம். (48)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.05.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org